பெப்ரவரி 08 - 14,2004 24 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

3.2.2004

# சுடர் ஒளி


THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## தமிழீழ சட்டவாதிகள் பட்டமளிப்பு



## தென் இலங்கையில் ஒன்று திரண்ட புதிய கூட்டமைப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி ஒப்பந்தமும் ஜனாதிபதியின் இக்கட்டான நிலையும்

## புதிய கூட்டணி அற்ப ஆயுளுடன் பிசுபிசுத்துப் போகுமா?



ஜனாதிபதி

**ஜே**.வி.பி. — ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டை சர்வதேச சமூகம் வரவேற்கவில்லை. இதனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இக்கட்டான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இரு மாறுபட்ட கொள்கைகளைக்கொண்ட இக் கட்சிகளின் கூட்டு அற்ப ஆயுளுடன் பிசுபிசுத்துப் போய்விடக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்பட ஆரம்பித்து விட்டன.

இரு கட்சிகளுக்கும் இடையிலான இந்தக் கூட்டினை ஜனாதிபதி முழு மனதுடன் ஏற்கவில்லை. அரை மனதுடனேயே ஜனாதிபதி ஒப்புக்கொண்டார் என்றும், ஒரு சிலரை திருப்திப்படுத்துவதற்காக ஜனாதிபதி பலிக்கடாவாக்கப்பட்டு விட்டார் என்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

### சர்வதேச சமூகம் கொடுக்கும் அழுத்தம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும். இதனால் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தாமதமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டும் என சர்வதேச சமூகம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அழுத்தம் கொடுத்துள்ளது. சமாதான முயற்சிகள் தடைப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்படையும். அதோடு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் உதவிகள் தடைப்படவும் இடமுண்டு.

இதனால் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை எப்படியாவது மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதியும் பிரதமரும் ஆர்வம் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால், இடையில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியும் அரசியல் இழுபறியும் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாவதில் தடங்கலை ஏற்படுத்தி உள்ளன.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.யுடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தம் சர்வதேச சமூகத்துக்குப் பெரும் அதிர்ச்சியாகவே அமைந்துவிட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாகவும், சமாதானப்பேச்சுப் பற்றியும், அதிகாரப் பகிர்வு குறித்தும் இரண்டு கட்சிகளுமே நேர் எதிரான கொள்கைகளை உடையவை.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஜே.வி.பி. — சுதந்திரக் கட்சிக் கூட்டணிக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசைப் பதவியில் இருந்து வீழ்த்துவதே முக்கிய நோக்கம். ஜே.வி.பி.யினருக்கு சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதிலோ அல்லது நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதிலோ அக்கறை இல்லை. குட்டையை குழப்பி மீன் பிடிக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்த ஜே.வி.பி.யினர் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை தக்க தருணத்தில் பயன்படுத்திக் கொண்டனர்.

ஜே.வி.பியினரை ஜனாதிபதி வளைத்து விட்டார் என்பதை விட ஜே.வி.பி.யினரே ஜனாதிபதியை தம் வசப்படுத்தி விட்டனர் எனலாம்.

ஜே.வி.பியினருக்கு நாட்டின் நலனிலோ, அல்லது அபிவிருத்தியிலோ, உறுதியான வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கையிலோ அக்கறை இல்லை. காரணம், அவர்கள் ஒரு எதிர்க்கட்சியாகவோ அல்லது ஆளும் கட்சியாகவோ இப்போது வரக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. அதனால் சர்வதேச சமூகத்தைப் பற்றிய அக்கறை அவர்களுக்கு இல்லை. ஆனால், ஜனாதிபதியின் நிலைமை அப்படி இல்லை. அவர் நாட்டின் தலைவி. ஒரு கட்சியின் தலைவி என்ற அடிப்படையில் ஸ்திரமான வெளிநாட்டு மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை கடைப்படித்தே ஆகவேண்டும்.

நாளை தமது ஆட்சி அமைந்துவிட்டால் சர்வதேச ஒத்துழைப்பும், உலக வங்கி , சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் உதவியும் கட்டாயம் தேவை என்பதை உணர்ந்தவர் ஜனாதிபதி. இவற்றை உதறித் தள்ளவோ அல்லது அவற்றின் வெறுப்பைத் தேடிக்கொள்ளவோ ஜனாதிபதி விரும்பமாட்டார்.

ஜே.வி.பியினரின் இழப்புக்கு எல்லாம் விட்டுக்கொடுக்க முடியாது என ஜனாதிபதி கூறிவிட்டார் என்றும் தகவல்கள் கசிகின்றன.

### தளம்பல் நிலை

கூட்டை ஏற்படுத்துவதை ஜனாதிபதி பின்போட்டுக் கொண்டே வந்த காரணம் அவர் முழு மனதுடன் இந்தக்கூட்டை விரும்பாததே ஆகும். கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களின் எதிர்ப்பு, தோழமைக் கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சி போன்றவற்றின் அதிருப்தி ஆகியவற்றாலும் ஜனாதிபதி தளம்பல் நிலையில் இருந்து வந்தார்.

இவற்றை எல்லாம் விட தனது கணவனின் கொலைக்கு காரணமானவர்கள் ஜே.வி.பியினர்தான் என்று பகிரங்கமாக குற்றஞ்சாட்டியவர் ஜனாதிபதி. அதே வேளை தனது தந்தையின் கொலைக்கு காரணமானவர்களுடன் கூட்டு வைக்க வேண்டாம் என ஜனாதிபதியின் பிள்ளைகளே ஆட்சேபித்து வந்தனர்.

இப்படியான நிலையிலும் சகோதரர் அனுரா பண்டாரநாயக்க, மற்றும் மங்கள சமரவீர, சரத் அமுனுகம போன்றவர்களின் தொடர்ச்சியான நச்சரிப்பினாலேயே அரை மனதுடன் இந்தக் கூட்டுக்கு ஞாபகார்த்த ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் என்று மூத்த உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

அதன் காரணமாகவே கட்சியின் தலைவராக இருந்து கொண்டும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஒப்பந்த விழாவில் கலந்து கொள்ள ஜனாதிபதி மறுத்துவிட்டார். அதற்கும் மேலாக ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்கவையும் சந்திப்பதை அவர் தவிர்த்து கொண்டார். மேலும், கூட்டு ஒப்பந்தத்துக்கு முன்பு கடுமையாக தன்னால் விமர்சிக்கப்பட்ட ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவுடன் ஒரே மேடையில் தோன்றினால் பின்பு சர்வதேச சமூகத்தின் கேள்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற அச்ச உணர்வும் ஒரு காரணமாகிவிட்டது.

நாட்டைவிட்டு கள்ளத்தனமாக ஓடியவர் சோமவன்ச. அவருக்கு எதிராக நீதிமன்றில் பிடி ஆணையும் இருக்கின்றது. நாட்டின் குடிவரவு — குடியகல்வு சட்டங்களையே மீறியவர். பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சோமவன்சவை உடனடியாக கைது செய்ய உத்தரவிட வேண்டும் என ஆளும் கட்சியினர் நாடாளுமன்றத்தில ஒரு பிரேரணையையும் கிளப்பிவிட்டனர்.

நாட்டை விட்டு ஓடிய சோமவன்ச முன்பு நன்நடத்தை அரசுக்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்போது முதன் முறையாக இங்குவந்தார். இப்போழுது கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டபோது இரண்டாவது தடவையாக வந்துள்ளார்.

### அனானின் கவலை

சோமவன்சவின் வருகை சென்ற முறையை விட இம்முறை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி ஆரவாரப்படுத்திவிட்டது. மக்களும் விமர்சிக்க ஆரம்பித்துவிட்டனர்.

இப்படியான ஒரு நிலையில் ஜனாதிபதி, 'ஜே.வி.பியினருடன் ஏன் கூட்டை ஏற்படுத்தினோம். இப்போது பெரும் தலையிடியாகிவிட்டது!' என்று அலுத்துக் கொள்கிறார் என்று அவருடன் நெருங்கிய சிலர் கூறுகின்றனர்.

சர்வதேச சமூகமும்; இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் உடனடியாக சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும்; தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் அதிகார இழுபறி என்பன தாமதமின்றி தீர்க்கப் படவேண்டும் என வலியுறுத்தி வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி நிலை குறித்து கவலை தெரிவிப்பதாக அப்பட்டமாகவே கூறிவிட்டார். அரசியல் சிக்கல் தீர்க்கப் படவேண்டும் எனவும் கூறியுள்ளார்.



விமல் வீரவன்ச

இவை எல்லாம், இன்று நாட்டின் ஏற்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுகள் தடைப்பட்டமைக்கும் தானே காரணம் என சர்வதேசமும் தன்னை சுட்டிக்காட்டுவது போன்ற ஒரு குற்ற உணர்வை ஜனாதிபதிக்கு ஏற்படுத்தியிருக்கலாம்.

இதனால், சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலைப்பிடிப்பதே மேல் என்பது போல் ஜனாதிபதி காய் நகர்த்தியுள்ளார். அது வரவேற்கத்தக்கது.

நீண்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மலிக் — தித்தவெல்ல அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அதிகாரிகள் மட்டத்திலான இக்குழுவினர் சமாதானப் பேச்சுகளுக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கும் முட்டுக்கட்டையாக இருக்கும் விடயங்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்தனர்.

அதிகாரிகள் மட்டத்திலான இப்பேச்சுக்கள் மிகவும் பயனுள்ளவையாகவும் அரசியல் சிக்கல்களுக்கு ஒரு சுமுகமான தீர்வை ஏற்படுத்தும் எனவும் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 17 ஆம் திகதி வாஷிங்டனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னர் ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதியும் சில விட்டுக்கொடுப்புக்களுடன் அரசாங்கத்துடனான உறவை சீர்படுத்துவார் என்றும் அரசியல் அவதானிகள் உறுதியாக தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி, அரசுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டால் ஜே.வி.பியுடனான கூட்டு தானாகவே பிசுபிசுத்துவிடும் என்பதும் உறுதி. இந்த சமயத்தில் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் காய் நகர்த்தல் நன்மையில் முடிந்தால் நாட்டுக்கும் நல்லது ; நமக்கும் நல்லது.

**இராசிகா**

# வாசகர் இதயம் பேசுகிறது

*க.நாகஸ்வரா, சண்டிலிப்பாய்.*

வாரம் தோறும் வண்ணமாய். வாசகர் நெஞ்சில் திண்ணமாய். தமிழ் தேசத்தின் எண்ணமாய். வீர விளைநிலத்தின் கண்ணாய். விளங்கும் சுடரே! பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

*வே.நிர்மலா, செம்பியன்பற்று தெற்கு.*

தமிழ் நெஞ்சத்தின் இதயத்தை வாரந்தோறும் நெகிழவைக்கும் சுடர் ஒளி அபிமான வாசகர்களுள் நானும் ஒருத்தி. சுடர் ஒளியில் பிரசுரமாகும் அனைத்து அம்சங்களும் சிறந்தவை. உனது சேவை மென்மேலும் தொடர நன்றி.

*அ.அனிதா, முல்லைத்தீவு.*

முல்லைப்பிரதேசம் எங்கும் சுடர் விடும் சுடர் ஒளியே! உன் ஆக்கங்கள் அனைத்தும் என்னை மிகவும் கவர்ந்தவை. அதிலும் கவிதைப் புனல், பித்தன் பதில், எம்.ஜி.ஆர்–பிரபா நட்பு தொடர் கட்டுரை போன்றவை எனக்கு மிகவும் பிடித்தவை. நீ இன்னும் புதிய புதிய ஆக்கங்களுடன் வெளிவர வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேன்.




*கவிக்குயிலன், சேனையூர்–06.*

சுடர் ஒளி சுவையானது!
அறிவுத் தேடல்கள்
அவசிய மானது!
அதற்கு சுடர்ஒளி
அத்தியாவசியமானது!
திரை மறைவில் கடக்கும்
தில்லு முல்லுகளை
தேடிப் பிடித்து
வாசகர்பார்வைக்கு
வைப்பதில்சுடர்ஒளி
மகத்துவமானது!
அரசியல் கட்டுரை
கள்
அவ்வப்போது நடை
பெறுவதை
உரசுவதில் சுடர்ஒளி
அற்புதமானது!
கவிதைப் புனலம்
இணையத் தளத்
தில்
இருந்து படைக்கும்
படைப்புக்களும்
இதமானது!
சினிமாவை சற்று
குறைத்து,
ஆன் மீக முத்துக்
களை அவ்வப்போது
கோர்த்துவிடுங்கள்!
ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்!

நான் பல தடவைகள் நிறைய கவிதைகள் எழுதி அனுப்பிவிட்டேன். ஆனால், ஒன்றுமே சுடர் ஒளி கவிதைப் புனலில் பிரசுரமாகவில்லை. இந்த முறையாவது என்னை ஏமாற்றாமல் எனது கவிதையைப் பிரசுரியுங்கள்.

*பா.க.யசோ, கிளிநொச்சி.*

எம்.ஜி.ஆர்–பிரபா நட்புத் தொடர் சுடர் ஒளிக்கு மகுடம் வைத்தாற்போலிருந்தது. இறுதி அத்தியாயத்தைப் படித்தாலே எம்.ஜி. ஆரின் சிறப்பு முழுமையாக தெரிகிறது. தலைவருக்கு நிகராக எம்.ஜி.ஆரை என்றென்றும் மனதில் நிலை நிறுத்துவோம்.

அண்மைக்காலமாக சுடர்ஒளி சிறுகதைப் படங்கள் சிறிது விரசமாக இருக்கின்றன. அதனை சினிப்பகுதியோடு நிறுத்திக்கொள்ளுங்கள். ச.முருகானந்தனின் அற்புதமான அமரகாவியம் சிறுகதையை, அதற்கு வரையப்பட்ட படம் பின் தள்ளி விட்டது.

*யா.ஜெயமலர், கிளிநொச்சி.*

சுடர் ஒளியே நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். கவிதைப் புனல், பித்தன் பதில், இணையத்தளத்திலிருந்து ஆகியவை எனக்குப் பிடித்தவை. உன் சேவை தொடர எனது வாழ்த்துகள்.

*கணேசன், பதுளை.*

உங்க பத்தரிகையில் வாற நெட் குறும்புகள் அசத்தல் தானுங்க! எங்க மாதிரி ஆளுகளுக்கா. நீங்க போடுகிற ஜோக். சுவாரஜ்ஜியம் சாமி தெடர்ந்து மகிழ்விப்பீங்க என்று நம்புறோம்.


அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia : 03 97 013165



சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்




## இன்று நேற்று வந்ததல்ல ஆசை பரம்பரையாக வந்த போதை

குளிர்பிரதேசத்தில் சதா சிவனே என்று இருப்பவர் கொஞ்சம் காலமாகவே மிகவும் தெம்பாகக் காணப்படுகின்றார். அண்மையில் அவரை ஒரு வைபவத்தில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது அவர் சில முக்கியமான தகவல்களை வெளியிட்டார். அதை நீங்களும் தெரிந்து கொள்ளுங்களேன்.

''என்ன ஐயா! இப்போது தமிழ் தலைவர்கள் எல்லாரும் ஐக்கியம் ஒற்றுமை என்று பேசும் போது நீங்கள் அமைதியாக இருக்கின்றீர்களே!'' என்று கேட்டோம்.

''யார் யார், எதைப்பற்றிப் பேசுவது என்ற விவஸ்தையே இல்லாமல் போய் விட்டது. வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பாக எட்டையபுரத்தார் பேசுவது தான் வேடிக்கை வட்டுக் கோட்டை தீர்மானம் மானமுள்ள தமிழர்கள் செய்தது. ஆனால், வீர பாண்டிய கட்டப் பொம்மனைக் காட்டிக் கொடுத்தவர்கள் எட்டய புரத்தில் பிறந்தவர்கள் தானே? அதுதான் காட்டிக் கொடுப்பவர்களை எட்டய புரத்தார் என்றேன்'' என்றார் அந்த சிவத்தார்.

''இன்னும் புரியவில்லையே கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்கள்'' என்றோம்.

''சார்! சில தினங்களின் முன் ஒரு பெரிய மனிதரின் அறிக்கையை அதாவது தனது சகபாடி ஒருவருக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தைப் பார்த்தேன். வட்டுக் கோட்டைத் தீர்மானம் தனிநாடு கேட்டது. அதனால்தான் விலகி விட்டோம் என்று பிதற்றி இருக்கின்றார். ஆனால், அது அல்ல உண்மை''.

''என்னவோ புதுக்கதை சொல்கின்றீர்கள். விவரமாகத்தான் சொல்லுங்களேன்'' என மீண்டும் சீண்டினோம்.

''இங்க பாருங்க சார்! தனி நாடுதான் எங்களை விலகச் செய்து விட்டது என்று கூறுவது வெறும் புலுடா.''

''என்ன புலுடாவா?''

''ஆமாம் தந்தை செவ்வா, சட்டமேதை ஜீ.ஜீ, இ.தா.கா தொண்டமான் மூன்று பேருமே இணைத் தலைவர்களாக இருந்தனர்.''

''அது தான் எல்லோருக்கும் தெரியுமே.''

''கொஞ்சம்பொறுங்க சார், தெரியாதவிடயங்கள் பல இருக்கு. முதல் இரண்டுதலைவர்களும் மரணம் அடைந்தபின்புதொண்டு புரிபவர் மட்டுமே மிஞ்சி இருந்தார். அப்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைமைப்பதவி இந்த அமைப்புக்கே கிடைத்திருக்க வேண்டும். ஆனால், இணைத்தலைவர்களில் ஒருவராக மிஞ்சி இருக்கும் என்னை விட்டு விட்டு மூன்றாவது நிலையில் இருந்த அமிர்தமான லிங்கத்தாரை எதிர்க்கட்சித் தலைவராகப் போட்டுவிட்டனர். அதுதான் சார் உண்மைக்காரணம். இந்த தனி நாட்டு கோரிக்கையால்தான் விலகினோம். என்பது பம்மாத்து'' என்றார்.

''அது சரி, ஐயா, வட்டுக்கோட்டைக்கும் எட்டயபுரத்துக்கும்என்று ஏதோ சொல்ல வந்தீர்கள்.''

''ஓ.. அதுவா! இப்ப பாருங்க. எதுக்குமே நான் தான் தலைவராக இருக்க வேண்டும். மற்றவர்தலைமைக்குவந்து விடக்கூடாது. எதையும் தானே முதலில் கூற வேண்டும். மற்றவர்கள் சொல்லிவிடக்கூடாது. இப்ப என்னடாவென்றால் மலைச் சந்திரன் அல்லவோ முந்திக் கொண்டார். இது ஆறுமுக சாமிக்கு ஆதங்கமாகிப்போனது. இது இன்று நேற்று இல்லையே! பரம்பரையாகவே தலைமை நாற்காலி மீது கொண்ட மோகம் இப்படி எல்லாம் வாட்டி எடுக்கின்றது. அதுமட்டும் இல்லையே! முன்பு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோதும் இப்படித்தான் முட்டையைக் குழப்பி மலையகக் கல்விக்கே வேட்டு வைத்தார்கள். இப்போது அரசியல் ஐக்கியத்துக்கும் ஆப்பு வைக்கின்றார்களே'' என்று வெதும்புகிறார் சிவத்தார்.

## போஸ்டர் அடிக்கும் பணத்தில் ஒரு வீட்டையே கட்டி விடலாமே!

ஒரு பிரபலமான அமைச்சர் பதுளை நகருக்கு வருவதற்கான ஏற்பாடுகள் தடல் புடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

உத்தியோகபூர்வமாக அமைச்சுடன் தொடர்புடைய திணைக்களம் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தது.

ஆனால், அரசியல் செல்வாக்குடன் திணைக்களத்துக்கு வெளியில் இணைப்பாளர் என்று கூறிக் கொள்ளும் பழைய ஹோட்டல் காரர் ஒருவர் திணைக்கள அதிகாரிகளையே மேய்க்கப் பார்க்கின்றாராம்.

இந்த அமைச்சரின் வருகைக்காக போஸ்டர் அடிக்க வேண்டும் என்று கூறியவர் போஸ்டர் அடிப்பதற்கு அறுபத்திநாலாயிரம் ரூபா செலவாகும். அதை ஒகே பண்ணித் தாருங்கள் என திணைக்கள உயர் அதிகாரியிடம் கேட்டாராம்.

காகிதத்தை வாங்கிப் பார்த்த அந்த உயர் அதிகாரி மயக்கம் போடாத குறையாம். '' என்னையா இது? போஸ்டர் அடிக்க 64 ஆயிரம் ரூபாவா? இதைக் கொண்டு ஒரு தொழிலாளிக்கு வீட்டையே கட்டிக் கொடுத்து விடலாமே'' என்று கூறி இவ்வளவு பெரிய தொகை போஸ்டருக்கு செலவிட முடியாது அதை அங்கீகரிக்க முடியாது'' என மறுத்து விட்டாராம்.

இதனால் ஆத்திரம் அடைந்த இணைப்பாளர் சொல்லக் கூடாத, ழுத முடியாத வார்த்தைகளை எல்லாம்பேசி வெண்கலக் கடைக்குள் யானை புகுந்தது போன்று அரசாங்க அலுவலகத்தையே அல்லோல கல்லோலப்படுத்தி விட்டாராம்.

அதோடு மேசை, நாற்காலிகளையும் உருட்டிவிட்டு ''உங்களைஎல்லாம்தண்ணி இல்லாத காட்டுக்கு இடம் மாற்றுகிறேன்'' என்றும் சவால்விட்டாராம்.

இதனால் பெரிதும் கலக்கம் அடைந்த திணைக்கள அதிகாரி செய்வதறியாது பதுளை பொலிசில் முறைப்பாடு செய்து விட்டாராம்.

இப்படி ஒரு வம்புவரும் என்று தெரியாது குறுக்கு வழியில் பணம் தேட முயன்று மூக்குடைபட்டதோடு பொலிசுக்கும் போக வேண்டியாகிவிட்டதாம்.

''என்ன சார் ஹோட்டல் காரர்களிடம் நிர்வாகம் பண்ணக் கொடுத்தார்கள். நிர்வாகத்தில் ஊழல். இப்போ நாவலப்பிட்டி, நுவரெலியா, பதுளை என்று தூக்கிவீசப் பட்டும் புத்திவரவில்லையே! இது எல்லாம் அந்த ஏழுமலையானுக்கு தெரியலியே!'' என்றார்.

இந்த போஸ்டர்களை அடிப்பதற்கான உண்மையான செலவு 22 ஆயிரம் ரூபா மட்டும்தான் என இணைப்பாளருடன் கூட இருந்தவரே திணைக்கள உயர் அதிகாரியிடம் ஊதி விட்டார் என்பது தான் வேடிக்கையாம்.


# வவுனியாவில் தாதியர் பயிற்சி

வவுனியா 2 ஆம் குறுக்குத் தெரு இல 52/5C இல் அமையவிருக்கும் மிலேனியம் தாதியர் பயிற்சிக் கல்லூரி 09 - 02 - 2004 இல் ஆரம்பிக்கப் படவுள்ளது. ஒரு வருடகால தாதியர் பயிற்சிக் கல்விக்கு புதிய மாணவர்கள் சேர்க்கப்படுவர்.

இதற்கான நேர்முகப் பரீட்சை 09 - 02 - 2004 இல் காலை 10.00 மணிக்கு. வவுனியா 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள HOTEL VANNI INN இல் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு.
T.P:- 011 2947570.





இந்து மக்களே பாருங்கள்
எங்கள் இணையத்தளத்தை!
WWW.hinducongress.org

அகில இலங்கை இந்து மாமன்றம்





# பேருவளையில் பரம்பரை மாந்திரீகம்

அரபி, உருது, மலையாள மாந்திரீகம்
(இன்ஷா அல்லாஹ்) இறைவன் அருளால்

**சகல இனத்தவர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்**

*செய்வினை *ஸிகுறு *ஜின் *செய்தான் *பேய் *பிசாசு போன்ற சகல பிரச்சினைகளிலிருந்தும் ஆங்கில வைத்தியத்தால் குணம் கிடைக்காத தீராத நோய்களுக்கும் தீர்வு கிடைக்கும்.

*செய்வினை அகற்றி *வீடு *தோட்டம் *வியாபார ஸ்தலம் * பகைவர்களின் தீங்கில் இருந்தும் காவல்பாடு *ஆண், பெண் திருமணத் தடை நீங்கி உடன் திருமணம் நிறைவேறுதல்

*கணவன் மனைவி விவகாரம் *புத்திர பாக்கியமின்மை *குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படுத்தல் *பிரிந்தவர்கள் கூடவும் *விரும்புவர்களின் அன்பை பெறவும்

**உங்கள் பிரச்சினை எதுவானாலும் நேரில் சந்திக்கவும்**

(வெளிநாட்டில் இருப்பவர்கள் தொலைபேசி மூலம் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்)

**வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 7.30 மணி முதல் சந்திக்கலாம். (இரகசியம் பேணப்படும்)**

**A.H.A. நவ்பர் ஹாஜியார்,**
69 பழைய ரோட், மொள்ளியமலை, பேருவளை.
(யூனானி வைத்தியசாலைக்கு அருகில்)
தொ.பே: 034–76932
வீடு இருக்குமிடத்தை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்

அலுவலகம் :– ஷாமிலா ஜூவலர்ஸ்,
15 சுப்பர் மார்க்கட், காலி வீதி,
பேருவளை.
தொ.பே. 034 – 77586

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை எது என்பதை புரிந்து கொள்வீர்கள்



30 ஆண்டு காலமாக அறிவை பிழையின்றி முறைப்படி கற்றுக்கொடுத்த சர்வதேச புகழ் பெற்ற

# R.L. க்லெமன்ட்

நடாத்தும்
கேக் வடிவமைக்கும் கலை

**சுகர் கிராப்ட் (சீனிப் பூக்கள்)**
மற்றும்
**பொன்டன்ட் திருமன பொருட்கள்**
முதல் மற்றும் உயர்தர பாட நெறி
(நவீனமான, இலகுவான முறைகள்)

**கேக், கலவை மற்றும் வடிவங்கள்**
கேக் கலவை பிறந்த நாள் கேக், கெடோ, புடின், பேஸ்றி, திரெட் பொயின்ட் (திரெட் எம்ப்றொய்டரி)

**முதல் மற்றும் உயர்தர பாட நெறிகளுக்காக**

**2004 ஆம் ஆண்டுக்கான** மாணவர்கள் சேர்ப்பது

பூரணமான செய்முறை பயிற்சி

**பெப்ரவரி மாதத்தில்**

**2 ஆம் திங்கள்** – **நீர்கொழும்பு**
மு.ப: 9.00 - பி.ப:12.00 வரை
பெர்தா அசோசியேஷன் கொழும்பு வீதி, நீர்கொழும்பு (தம்பிட கோயில் அருகில்)

**3 ஆம் செவ்வாய்** – **மாத்தறை**
மு.ப: 9.00 - பி.ப:12.00 வரை
தர்மரத்ன ஜுவலர்ஸ் கட்டிடம் சென் தோமஸ் வீதி

**3 ஆம் செவ்வாய்** – **காலி**
பி.ப:1.00 - பி.ப: 3.00 வரை
மாவட்ட சமுபகார சங்கம் இல: 147 பெட்டிகலவத்த.

**6 ஆம் வெள்ளி** – **வெள்ளவத்தை**
மு.ப: 9.00 - பி.ப:12.00 வரை
சென் லோரன்ஸ் தேவஸ்தானம் மீசம் மண்டபம் காலி வீதி கொழும்பு 6

**7 ஆம் சனி** – **கண்டி**
மு.ப: 9.00 - பி.ப:12.00 வரை
இல:254, டீ.எஸ். சேனாநாயகா வீதி (ஆர்பிகோ ஷோரூம் அருகில்)


**8 ஆம் ஞாயிறு** – **கொழும்பு**
மு.ப: 9.00 - பி.ப:12.00 வரை
இல:116/14, வோல்ஸ் தெரு கொழும்பு 15

களுத்துறையில் நடைபெறவிருந்த வகுப்பு பற்றிய விபரங்கள் தொலைபேசி மூலமாக பெற்றுக்கொள்ளலாம்

War. Ads: 071-22 99999

**R.L. Clement**
**Cake Decorating School**
106/14, Walls Lane, Colombo 15.
விபரங்களுக்கு 011-2522201





❖திருமண Digital வீடியோ படப்பிடிப்பு. ❖வீடியோ சீடி பதிவுகள்.
❖கசட் to VCD/DVD, DVD/VCD to கசட். ❖Mini DVC to DVD/VCD.
❖Audio CD/Video CD பதிவுகள். ❖NTSC ⇄ PAL பதிவு மாற்றம்.
❖உள்ளக/வெளியக படப்பிடிப்புகள்.

# MATHU VIDEO (PVT)LTD.

163,NewChetty Street,Colombo-13.Tel: 2448940, Fax:2451267,2448940,E-Mail: mathu@sltnet.lK.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

பெப்ரவரி 08 – 14, 2004



85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


# அதிகரிக்கும் குற்றச் செயல்கள்

போதைவஸ்துக் கடத்தல், ஆள்கடத்தல், கள்ளநோட்டு அச்சடித்தல், ஆயுத விற்பனை போன்ற குற்றச் செயல்களில் சர்வதேச ரீதியாக இயங்கிவரும் ஒரு பயங்கரவாத அமைப்பு மாபியா.

பயங்கரவாத அமைப்பான மாபியா பாணியில் இலங்கையிலும் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

படுகொலைகளுக்கும் குண்டு வெடிப்புக்களுக்கும், துப்பாக்கிச் சண்டைகளுக்கும் 'பெயர்' பெற்ற நாடாக இலங்கை மாறி வருகிறது.

நாளுக்குநாள் கொலைகள் அதிகரிக்கின்றன. எந்த இடத்தில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாத நிலைமை.

கொழும்பில் நடைபெறும் கொலை, கொள்ளைச் சம்பவங்களில் பெரும்பாலானவை பாதாள உலகக் கோஷ்டியினராலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கொழும்பில் கடந்த சில வருடங்களாக தலை விரித்தாடும் பாதாள உலகக் கோஷ்டிகளின் அடாவடித்தனங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாத நிலையில் பொலீஸ் தலைமையகம் திண்டாடுகிறது.

இத்தகைய சம்பவங்களில் ஒன்றுதான் கடந்த வார இறுதியில் கல்கிஸை நீதிமன்றத்தில் இடம் பெற்றிருக்கிறது. பிரபல பாதாள உலகத் தலைவர் ஒருவரின் நெருங்கிய சகா என்று நம்பப்படும் ஒருவர் நீதிவானைக் கொலை செய்வதற்கு மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரு கைக்குண்டுகள் அந்த நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

நீதிவானை நோக்கி இவர் விரைந்த போது அங்கு காவலில் இருந்த பொலிஸ்காரர் ஒருவர் இவரை மடக்கிப் பிடித்துள்ளார். பாதாள உலகக் கோஷ்டியினருக்கு உயர் மட்டத்தில் உள்ளவர்களே அஞ்சி நடுங்கும் இக் காலத்தில் அந்த நபரை மடக்கிப் பிடித்த பொலிஸ்காரர் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்தான். தனது உயிரை துச்சமாக மதித்து அந்த பொலீஸ்காரர் செயற்பட்டிருக்கிறார்.

நீதிமன்றத்துக்குள் வைத்து சந்தேகநபர்கள் கொல்லப்படுவது, நீதிமன்றத்துக்கு விசாரணைக்கு அழைத்து வரப்படும் போது அல்லது நீதிமன்ற விசாரணையின் பின்பு அழைத்துச் செல்லப்படும் போது கொலை செய்யப்படுவது இலங்கையில் சாதாரண நிகழ்வாக மாறிவருகிறது.

சில வாரங்களுக்கு முன்பு கொழும்பு மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் வைத்தே ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். சட்டத்தரணி உடை அணிந்து வந்த ஒருவரே இவரைச் சுட்டுக் கொன்றார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் பிரபல பாதாள உலகத் தலைவர். சுட்டவரும் பாதாள உலகக் கோஷ்டி ஒன்றைச் சேர்ந்தவரே.

ஒருவரைக் கொலை செய்ய வேண்டுமானால் பணம் கொடுத்து அதனைச் சாதித்து விடக் கூடிய நாடாக இலங்கை மாறி வருவது துரதிர்ஷ்டமே!

அதாவது சட்டத்தை தமது கையில் எடுத்துக் கொண்டு இவர்கள் செயற்படுகின்றனர். இத்தகைய நிலைமை நீடிப்பது இலங்கையை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

பாதாள உலகக் கோஷ்டியினர் சம்பந்தப்பட்ட நீதிமன்ற விசாரணைகளை அவர்கள் தங்கி உள்ள சிறைச்சாலைப் பகுதிக்குள்ளேயே நடத்தவும் தற்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அந்த அளவுக்கு நாட்டின் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து விட்டன.

தற்போதைய சம்பவங்கள் தொடருமானால் உலகில் உள்ள பயங்கரவாத அமைப்புக்களின் கேந்திர இடமாக இலங்கையும் மாறிவிடும். மரண தண்டனை விதிப்பது உட்பட சட்டங்களைக் கடுமையாக்குவதன் மூலமே இவற்றை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தலாம்.

# வாஷிங்டன் மாநாட்டுக்குமுன் நெருக்கடிக்குத் தீர்வு கிட்டுமா?

## கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலைமை

இலங்கைக்கு உதவிய வழங்கும் நாடுகளின் மீளாய்வுக் கூட்டம் பெப்ரவரி 17 ஆம் திகதி வாஷிங்டனில் நடைபெற இருக்கிறது. அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளன.

இந்த மீளாய்வுக் கூட்டத்துக்கு முன்பு தென் இலங்கை அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என்று அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியும் இதில் அக்கறை காட்டி வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்படாவிட்டாலும் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையையாவது உதவி வழங்கும் நாடுகளுக்கு ஏற்படுத்துவதே இரு தரப்பினரினதும் பிரதான நோக்கம் என்பது தெரிகிறது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் டோக்கியோ மாநாட்டில் உறுதி அளிக்கப்பட்ட 450 கோடி டொலர் நிதி உதவி எப்படியும் இலங்கைக்கு வழங்கப்படும் என்று உதவி வழங்கும் நாடுகள் திரும்பவும் திரும்பவும் கூறி வருகின்றன. ஆனால், இந்த உதவி கிடைப்பதற்கு டோக்கியோ மாநாட்டில் விதிக்கப்பட்ட நிபந்தனைதான் அரசுக்குப் பிரச்சினையாக இருந்து வருகிறது.

சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தே இந்த உதவி படிப்படியாக வழங்கப்படும் என்று அப்பொழுது தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தென் இலங்கை அரசியல் நெருக்கடி முதலில் தீர வேண்டும். பின்பு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தாலும் உதவி வழங்கும் நாடுகளுக்கு திருப்தி ஏற்படக் கூடியதாக சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படவேண்டும். இவை எல்லாம் நீண்ட பயணங்கள்.

எதிர்பாராத விதமாகக் கிடைத்த இந்த பெரும் தொகையான நிதி உதவி கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலைமை ஏற்பட்டு விடுமோ என்று அரசாங்கம் அஞ்சுகிறது.

புலிகள் நவம்பர் மாதம் தமது தீர்வு யோசனைகளை அரசிடம் கையளித்துவிட்டனர். 20 வருட கால உள்நாட்டு யுத்தத்தில் முதல் தடவையாக அவர்கள் தமது யோசனையை எழுத்து வடிவில் வழங்கி உள்ளனர். இலங்கை உள்நாட்டு யுத்தத்தைப் பொறுத்தவரை இதுவே பெரிய முன்னேற்றம் ஆகும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஜே.வி.பி.யினர் அமைத்துள்ள ஐக்கிய மக்கள் முன்னணி காரணமாக புலிகளின் தீர்வு யோசனைகளுக்கு என்ன நடக்குமோ என்ற அச்சம் அரசியல் வட்டாரங்களில் இருந்து வருகிறது.

தற்பொழுது அமுலில் இருந்து வரும் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று கூறிவரும் ஜே.வி.பித் தலைவர்கள், அடிக்கடி வெளியிட்டு வரும் கருத்துக்கள் காரணமாக புலிகளின் தீர்வு யோசனைகள் கிடப்பில் போடப்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டு வருகிறது. தமது கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றினால் புலிகளுடன் புதிதாக சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று ஜே.வி.பிக் கட்சியினர் கூறிவருகின்றனர்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான மனோ – மலிக் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டாலும் தென் இலங்கையின் அரசியல் நிலைமை இன்னும் தெளிவற்றதாகவே இருக்கிறது. தற்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து ஆரம்பித்துள்ள கூட்டமைப்பின் எதிர்காலத் திட்டங்கள் இன்னும் ஊகிக்க முடியாதவையாகவே இருக்கின்றன.

மாகாணசபைத் தேர்தலை நடத்தி வெற்றி பெற்றாலோ, பொதுத் தேர்தலை நடத்தி வெற்றி பெற்றாலோ தற்பொழுது ரணிலின் தலைமையில் இருந்து வரும் பேச்சுவார்த்தைக்கான சுமுகமான சூழ்நிலை இனி ஏற்படப்போவதில்லை.

### கூட்டமைப்பின் முதல் பொதுக்கூட்டம்

கடந்த வார இறுதியில் கொழும்பில் நடைபெற்ற புதிய கூட்டமைப்பின் முதலாவது கூட்டம் குறித்து பெரிய அளவில் பிரசாரங்கள் செய்யப்பட்டபோதிலும் எதிர்பார்த்த அளவு கூட்டம் சேரவில்லை. ஜே.வி.பியின் சிவப்புக் கொடிகளே கூட்டம் நடைபெற்ற இடத்தை ஆக்கிரமித்திருந்தன. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த கூட்டமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத ஜனாதிபதி கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடைபெற்ற முதலாவது பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. தனது செய்தியை மட்டுமே அனுப்பி இருந்தார்.

இந்த கூட்டமைப்பு பண்டாரநாயக்க குடும்பத்துக்குள்ளேயே குழப்பத்தை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

அநுரா பண்டாரநாயக்கா இந்த கூட்டமைப்பை முழு மூச்சாக ஆதரிக்கிறார். சந்திரிகாவின் சகோதரி சுனித்திரா கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். சந்திரிகாவின் பிள்ளைகளும் இதற்கு ஆதரவு இல்லை. தமது தந்தையைக் கொலைசெய்தவர்களுடன் கூட்டமைப்பா என்று கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஜனாதிபதியும் இந்த கூட்டமைப்புக்கு உண்மையில் ஆதரவு இல்லை. அநுராவினதும் மற்றும் சிலரினதும் நெருக்குதல்கள் காரணமாகவே ஜனாதிபதி இணங்க வேண்டியதாயிற்று என்று கூறப்படுகிறது.

ஜே.வி..பியுடன் கூட்டமைப்பு அமைப்பதற்கு இதற்கு முன்பு நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வி அடைந்ததுக்கு ஜனாதிபதிதான் காரணமாக இருந்தார். கூட்டமைப்பு அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் சுமார் பத்து மாத காலம் இழுபட்டதும் ஜனாதிபதியால் தான்.

### ஜனாதிபதி மீது ஜே.வி.பி. அழுத்தம்

பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருப்பதால் ஜனாதிபதி ஜே.வி.பியின் நெருக்குதல்களுக்கு அடிக்கடி முகம் கொடுக்க வேண்டி வரும் என்கின்றனர் அவதானிகள்.

ஜனாதிபதியிடம் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு சென்ற பின்பு குரங்கு பாய்ஞ்சான் முகாம் பற்றி இப் பொழுது எவரும் மூச்சுக் காட்டுவதில்லை. வழமையாக சர்ச்சையை ஏற்படுத்திவந்த புலிகளுக்கான ஹெலிக் கொப்டர் வசதி குறித்தும் இம்முறை எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

பாதுகாப்பு அமைச்சு முழு அதிகாரங்களுடன் மீண்டும் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தில் பிரதமர் எந்த வித விட்டுக் கொடுப்புக்கும் தயார் இல்லை.

வடக்கு, கிழக்கு பிரதேச முப்படைகளுக்கான ஓர் இராணுவக் கட்டளைத் தளபதியை நியமித்து அவருக்கு உத்தரவு வழங்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்கும் யோசனை ஒன்று குறித்தும் தகவல்கள் வெளிவந்திருந்தன. ஆனால், முழு அதிகாரங்களும் உள்ள பாதுகாப்பு அமைச்சைத் தவிர வேறு எதனையும் ஏற்பதற்கு தயார் இல்லை என்று பிரதமர் தெரிவித்துவிட்டார்.

சமாதான முயற்சிகளில் தடங்கல்கள் ஏற்பட்டிருப்பதால் புலிகள் யுத்தம் ஒன்றுக்குத் தயாராகின்றனர் என்று தென் இலங்கைப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. ஆனால் புலிகள் இயன்ற அளவு பொறுத்திருக்கவே முடிவு செய்துள்ளனர்.

### புலிகள் கவலை

அதேசமயம் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள இலங்கை அரசு தயாராவது குறித்து புலிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

புலிகளின் அரசியல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இது தொடர்பான புலிகளின் கருத்தை நோர்வேத் தரப்பு ஊடாக இந்தியாவுக்குத் தெரியப்படுத்தி உள்ளார்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வது யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட சமயம் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இருந்த ஆயுத சமநிலையைப் பாதிக்கும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தென் இலங்கை அரசியல் நெருக்கடி எந்தவித தீர்வும் இன்றி விடப்பட்டுள்ளது. அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களும் வெகு தூரத்திலேயே இருந்து வருகின்றன. உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வுக் கூட்டத்துக்கு முன்னர் இவை எவற்றிலுமே முன்னேற்றம் ஏற்படப் போவதில்லை.

சஞ்சாரன்

# தமிழீழ சட்டவாதிகள் பட்டமளிப்பு விழா

தனித்துவ அடையாளத்தோடு கூடிய பாரிய பண்பாட்டு விழுமியங்களை கொண்டவர்கள் ஈழத்தமிழர்கள். தமது தனித்துவத்தை காப்பாற்றிக் கொள்ளுவதற்காக, மண் சுதந்திரம் பறிபோகக்கூடாது என்பதில் அகிம்சை வழியிலும், ஆயுதப்போராட்டத்திலும் ஆக்கிரமிப்புகளை அறுத்து எறிந்தவர்கள் இவர்கள்!

நேரடியான போரின் மூலமாக பல்லாயிரம் உயிர்களையும், சொல்லமுடியாத அழிவுகளையும் சந்தித்தவர்கள் இவர்கள். இத்தகைய கடினங்களை எல்லாம் சுமந்து கொண்டு உரிமைப் போருக்காக உயிர்களை துச்சமென மதித்த இந்த மக்கள் மீது அவர்களது போராட்ட சிந்தனையை சிதைக்கும் நோக்கோடு உளவியல் ரீதியான யுத்தம் ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டது

இளைய சமூகத்தினரிடையே தீய பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி இதன் மூலம் சமுகத்துக்குள் பிள்வுகளை தோற்றுவித்து கலாசார, பண்பாட்டுச் சிதைவுகளை ஏற்படுத்த இந்த யுத்தம் திட்டமிடப்பட்டது.

மக்கள் போராட்டம் என்பதனை நெகிழ்வுபடுத்தி இது ஒரு தனிப்பட்ட குழுவின் பயங்கரவாத நடவடிக்கை என்று வெளிக்காட்டி மனித உரிமை போராட்டத்திற்கு மாசு கற்பிக்க துணிந்தது ஆட்சிப் பீடம்.

இதன் மூலமாக மெல்ல மெல்ல சட்டம், நீதி, பண்பாடு [illegible]டையத் தொடங்கின. இதை முற்றுமுழுதாக உணர்ந்து கொண்டு அதற்கான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது.

காவல் பிரிவு, சட்டதிட்டம், நீதிப்பிரிவு நீதிமன்றம் என ஒவ்வொன்றாக இவற்றை அறிமுகம் செய்து அதன் மூலம் நீதியான நிலையான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி எதிரிகளால் விடுக்கப்பட்ட உளவியல் யுத்தத்துக்கு சாவுமணி அடித்தது

ஆட்கடத்தல், கொலை செய்தல், சொத்துக்களை சூறையிடல், காணாமற்போதல் போன்ற கட்டுக்கடங்காத தொல்லைகள் தமிழ் மண்ணை மொய்த்துக் கொண்டன. மதுபோதை பழக்க வழக்கம், ஆபாச படம் பார்த்தல், தவறான வல்லுறவுகளை முன்னெடுத்தல் போன்ற தீய பழக்க வழக்கங்களின் உச்சக் கட்டம் ஈழ மண்ணின் நாலாபுறங்களிலும் விதைக்கப்பட்டதுடன், சிறப்பான அறுவடையை செய்ய உரிய உதவிகளை செய்து வந்தது ஆட்சிப்பீடம்.

இவற்றை எல்லாம் களைந்து மண்ணின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்க விடுதலைப்புலிகள் மேற்கொண்ட சிறப்பான நடைமுறைகளில் சட்டத்துறை சிறப்பு இடத்தைப் பெறுகின்றது.

[illegible] அடையாளம், கலாசார பண்பாட்டு பழக்க வழக்கங்கள், பாரம்பரிய முறையிலான ஒழுங்கு முறைகள் – இவற்றின் ஊடாக, சமய, சமூக, ஜனநாயக பண்பாட்டு நெறிமுறைகளின் ஒழுக்கக் கோவைகள் என்பவற்றை நீதியாகக் கொண்டு மண்ணுக்குரிய சட்டத்தை வகுத்துள்ளனர் விடுதலைப்புலிகள்.

இதனூடாக, இச் சட்டங்களை பயின்று சட்டங்களின் பிரகாரம், எமது மண்ணில் புற்றுவிட்டுள்ள தீய நடைமுறைகளை ஒழித்துக்கட்டச் சட்டத்துறை வல்லுனர்களை தோற்றுவிக்க வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. இந்த தேவையை கருத்தில் கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளாக பல சட்டவல்லுநர்களை புலிகள் உருவாக்கித்தந்துள்ளனர்.

அண்மையில் இதில் பட்டம் பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வொன்று மிக விமர்சையாக கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழீழ தேசியத்தில் இயங்கும் நீதி மன்றங்களில் ஈழ மண்ணுக்குரிய சட்டதிட்டங்களையும், அதனோடு அடங்கியுள்ள நுணுக்கங்களையும் அறிந்து சட்டத்தை நிலைநாட்டி, எமது கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களை காப்பாற்றி, எம்மீது திணிக்கப்பட்ட உளவியல் யுத்தத்தை வென்றெடுக்க துணிந்துள்ள இவர்களை இதயபூர்வமாக நாம் வாழ்த்துவோமாக.

—நாச்சியூரான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதறவைக்கும் பறவைக் காய்ச்சல்



சமைப்பதற்கு ரெடி

கத்தி போய் வாள் வந்தது என்ற கதையாக உலகை ஆட்டிப் படைத்த ஆட்கொல்லி 'சார்ஸ்' நோய் ஒரு வழியாக ஓய்ந்து விட்ட நிலையில், தற்போது பறவைகளைத் தாக்கும் விஷக் காய்ச்சல் ஆசிய நாடுகளைக் கலக்கி வருகிறது.

வியட்நாமில் ஆரம்பித்த இந்தப் பறவைக் காய்ச்சல், அங்கு தனது வேலையைக் காட்டியவாறு ஆசிய நாடுகளிலும் வலம்வர ஆரம்பித்திருக்கிறது. வியட்நாமில் இருந்து புறப்பட்டு தென்கொரியா, ஜப்பான், கம்போடியா, லாகோஸ், இந்தோனேசியா, தாய்லாந்து வரை பரவி தற்போது தெற்காசிய நாடான பாகிஸ்தான் வரை வந்துவிட்டது பறவைக் காய்ச்சல்.



பாதுகாப்பு ஏற்பாடுகள்

பாகிஸ்தான் வரை வந்து விட்ட பறவைக் காய்ச்சல் தெற்காசியாவின் ஏனைய நாடுகளையும் தாக்கிவிடுமோ? என்ற அச்சம் எழுந்திருக்கிறது. இதனால், தெற்காசிய நாடுகள் (இலங்கையும் அடங்கும்) வெளி நாடுகளில் இருந்து கோழிகளை இறக்குமதி செய்வதற்குத் தடைவிதித்துள்ளன.

பறவைக் காய்ச்சல் என்றால் என்ன? அது மனிதர்களுக்கு எப்படிப் பரவுகிறது? என்பதை இனிப் பார்க்கலாம்.

15 வகையான வைரஸ் கிருமிகளால் பறவைகளுக்குக் காய்ச்சல் ஏற்படும். இதனை ஆங்கிலத்தில் **Bird Flu** என்று கூறுவார்கள். நீர் நிலைகளில் வசிக்கும் வாத்து உள்ளிட்ட பறவைகள்தான் இந்த கிருமிகளின் சுரங்கங்கள்.

பொதுவாக நீர்நிலைகளில் உள்ள பறவைகள் நோய்த் தொற்றுக்கு உட்படுவ



கோழிகளை அழிக்கத் தனிப்படை

தில்லை என்று கருதப்படுவதால் இந்த கிருமிகள் வேறு எங்கோ இருந்துதான் பறவைகளிடம் அடைக்கலமாகி இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

இப்படி பறவைகளைத் தாக்கும் வைரஸ் கிருமிகள் சில நேரங்களில் உருமாற்றம் அடைந்து மிகவும் ஆபத்தான காய்ச்சலை உருவாக்கி விடுகிறது. இது **Highly Pathogenice Avian In Fluenza** என்று கூறப்படுகிறது. சுருக்கமாக **HPAI** என்று கூறப்படும் இது மிகவும் ஆபத்தான நோய் ஆகும்.

குறிப்பாக பறவைகளைத் தாக்கும் இந்தக் காய்ச்சல், பறவைகளின் எச்சங்கள் மூலமோ அல்லது அவற்றின் மாமிசம் மூலமோ மனிதனைச் சென்றடைகிறது. பறவைகளின் எச்சில் மூலம் இந் நோய் வேகமாகப் பரவி வருகிறது என்று கூறப்படுகிறது. எனவே, பறவைக் காய்ச்சல் மனிதர்களிடம் வேகமாகப் பரவுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவே என்றாலும், பறவைக் காய்ச்சலுக்கு காரணமான கிருமி மனிதனைத் தாக்கிவிட்டால் அவனிடமிருந்து ஏனையவர்களுக்கும் அது இலகுவாகப் பரவிவிடும்.

பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்குப் பரவினால் அதனைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். ஏனெனில், இந்தக் கிருமிகள் ஆண்டு முழுவதும் வெவ்வேறு வடிவங்களில் மாறிக்கொண்டே இருக்கும். என்றாலும், தற்போது மனிதர்களிடத்தில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் நிமோனியா காய்ச்சலுக்கான அறிகுறிகளைக் கொண்டிருக்கிறது.

இந்நோயின் தாக்கம் உச்சமடையும் போது ஒருவர் மூச்சுவிட அவதிப்படுவார். அடுத்த சில மணித்தியாலங்களுக்குள்ளேயே அவரது உயிர்பிரிந்து விடும்.

பெரும்பாலும் மனிதர்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியால் இந்த பறவைக் காய்ச்சலை ஒன்றும் செய்து விட முடியாது. அதற்கு எதிராகப் போராடும் ஆற்றலும் மனிதனிடம் இல்லை.

இதனால், இந்நோய் உலகம் முழுவதும் வேகமாகப் பரவிவிடும் என்ற அச்சம் நிலவிவருகிறது. ஆயினும், சமைக்கப்பட்ட பறவை இறைச்சி மற்றும் முட்டைகளைச் சாப்பிடுவதன் மூலம் பறவைக் காய்ச்சல் பரவாது என்று டாக்டர்கள் கூறியிருப்பது மாமிசப் பிரியர்களுக்கு ஓரளவேனும் சந்தோஷத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

பறவைக் காய்ச்சல் 20 ஆம் நூற்றாண்டிலேயே பரவியிருந்தது என்று கூறப்படுகின்ற போதும், அப்போது பரவிய பறவைக் காய்ச்சலுக்கும் தற்போது பரவிவரும் பறவைக் காய்ச்சலுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு என்று டாக்டர்கள் கூறியுள்ளனர்.



விற்பனையும் நடக்கிறது

முன்னர் தாக்கிய பறவைக் காய்ச்சல் தற்போது தாக்கியிருப்பது போன்று கடுமையாக இருக்கவில்லை. ஆனாலும், தற்போது ஏற்பட்டிருக்கும் பறவைக் காய்ச்சல் மனிதர்களைப் பெருமளவில் பாதிக்காதவரை, அதன் தாக்கம் மிக மிகக் குறைவே என்றும், பறவைகளையே இந் நோய் தாக்கும் என்றும் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

பறவைகளுடன் நேரடித் தொடர்புடையவர்களுக்கு மட்டுமே இந் நோய் வருவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. ஆனாலும், மனிதர்களை பாதிக்கும் சாதாரண காய்ச்சலுக்கு காரணமான வைரஸ் கிருமிகளைப் போல பறவைக்காய்ச்சல் கிருமிகளும் உருமாற்றம் அடைய வாய்ப்பு உள்ளது. அப்படி நடந்தால் நிலைமை இன்னும் மோசமாகும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

பறவைக்காய்ச்சல் முதன்முதலில் உருவான வியட்நாமில் இதுவரை 6 பேர் பலியாகியள்ளனர். இந்நிலையில் உடன் பிறந்த சகோதரிகள் 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதையடுத்து சாவு எண்ணிக்கை 8 ஆக அதிகரித்து உள்ளது. இவர்கள் அனைவரும் பறவை வளர்ப்புடன் நேரடித் தொடர்புடையவர்கள். தாய்லாந்தில் இருவர் பலியாகி விட்டனர். ஏற்கனவே சார்ஸ் நோயால் கெட்டப் பெயர் சம்பாதித்த சீனாவில் கடந்த வாரம் பறவைக்காய்ச்சல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அங்கு இந் நோய் எப்படிப் பரவியது என்று தெரியவில்லை என சீன அரசு கூறியது. ஆயினும், மனிதர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என்று சீனா அறிவித்துள்ளது.

சீனாவைப் பொறுத்தவரை வியட்நாமை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் பறவைக்கடத்தல் அதிகம் என்பதால் நோய் பரவி இருக்கலாம் என்று உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

பறவைக் காய்ச்சல் விஷயத்தில் மோசமான பெயரை சம்பாதித்துக் கொண்டுள்ள நாடு தாய்லாந்துதான். அங்கு நீண்ட நாட்களுக்கு முன்பே பறவைக்காய்ச்சல் பரவி விட்டதாகவும், ஆனால், அதிகாரிகள் ஏற்றுமதி பாதித்து விடுமோ என்ற பயத்தில் உண்மையை மூடி மறைத்து விட்டனர் என்றும் கடுமையான குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதையடுத்து தாய்லாந்தில் கோழி உள்ளிட்ட பறவை இறைச்சியை இறக்குமதி செய்வதற்கு பல்வேறு நாடுகள் தடை விதித்தன.

இந்த நிலையில் பறவைக் காய்ச்சலை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக முடிவு எடுப்பதற்காக தாய்லாந்து தலைநகர் பாங்கொங்கில் சர்வதேச மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பெரும்பாலான ஆசிய நாடுகள் தமது பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன.

பறவைக் காய்ச்சலைத் தடுப்பதற்கு இடம் பெயர்ந்து வரும் பறைவகளிடம் இருந்து, பண்ணை பறவைகளுக்கு வைரஸ் கிருமிகள் பரவி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியமானது ஆகும். ஏனெனில், இடம் பெயர்ந்து செல்லும் பறவைகள் மூலம் இந்நோய் உள்ளூர் பறவைகளுக்கு எளிதில் பரவி விடும். பின்னர் அத்தகைய பறவைகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்களையும் நோய் தாக்கி விடும் ஆபத்து இருக்கிறது.

பறவைக் காய்ச்சல் மனிதரிடத்தில் வேகமாகப் பரவினால், அது சார்ஸ் நோய் ஏற்படுத்திய மனித அழிவை விட அதிகமான அழிவைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, உஷாராக இருங்கள்.

**சார்ஸை சாதாரணமாக்கிய பறவைக் காய்ச்சல் ஆசிய நாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது. இதன் பீதியால் லட்சக்கணக்கான கோழிகள் சாகடிக்கப்பட்டுள்ளன. ஆனாலும், நோயின் தீவிரம் இன்னமும் குறையவில்லை. இதே நிலை தொடர்ந்தால் உலகெங்கும் லட்சக் கணக்கான உயிர்கள் பறிபோகும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) எச்சரிக்கிறது.**

அலெக்ஸ்



பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட வாழ்வின் ஆரோக்கியத்துக்கு பற்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

நல்ல உணவைச் சாப்பிடுவதற்கும், சாப்பிட்ட உணவை நன்றாக மென்று ஜீரணம் செய்து கொள்வதற்கும் உதவுபவை சீரான பற்களே. அவை வாழ்நாள் முழுவதும் இருந்து எமக்குத் துணை புரிபவை. அவற்றை நல்ல முறையில் பாதுகாத்துக்கொள்வது எம்முடைய உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியம்.

பல் எப்போது தோன்றுகிறது? கருவில் ஆறாவது வாரத்திலேயே அதன் உருவ அமைப்பு தோன்றத் தொடங்கிவிடுகிறது. பிறந்த பின்பு ஆறு முதல் பதினைந்து மாதங்களுக்குள் பெரும்பாலும் எல்லாப் பற்களும் முளைத்துவிடுகின்றன. இவற்றை பால் பற்கள் என்று சொல்வார்கள். இரண்டரை வயதில் பல்வரிசை முழுமை அடைந்து விடுகிறது. பிறகு குழந்தை கடித்தே சாப்பிடக் கற்றுக்கொள்கிறது.

ஆறு முதல் 12 வயதுக்குள் இந்தப் பற்கள் விழுந்து புதிய பற்கள் முளைக்கும். குழந்தைப் பருவத்தில் பற்களைப் பாதுகாத்து வளர்ப்பது எப்படி? குளிர்ந்த பானங்கள், ஐஸ்கிரீம் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். கரடு முரடான பற்பொடிகளை உபயோகிக்கக் கூடாது.

''பேபி டூத் பிரஷை'' பயன்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வப்போது குழந்தையின் பற்களை டாக்டரிடம் காட்டி வர வேண்டும். இவை குழந்தைப் பருவத்தில் பற்கள் நன்கு அமைய உதவும். பற்களிடையே சந்து இருக்கக் கூடாது. அவை இருந்தால் மென்று சாப்பிடும் போது இடைவெளியில் உணவுப் பொருள் தேங்கும். பின்பு அவை பழுதடைந்த பதார்த்தமாக மாறி அரிப்பை ஏற்படுத்தும். இவையே பற்களை இழக்கக் காரணமாகிவிடும். இரு வேளையும் பல் துலக்குவது, அவ்வப்போது டாக்டரிடம் காட்டி சோதித்துக் கொள்வது ஆகியவை அவசியம்.

பற்களின் ஓட்டை ஆழமாக இருந்தால் பிடுங்கி விடுவது நல்லது. ஓட்டை சிறியதாக இருந்தால் அடைக்கலாம் (filling). சொத்தைப் பல்லை விட்டு வைக்கக் கூடாது. அது வியாதிகளை வரவழைக்கும். நன்றாகப் பல்துலக்குங்கள். ஒரு நாளில் இதற்காகத் தேவைப்படுவது – ஆறு நிமிடங்கள்தாம். அழகான உறுதியான பற்கள் உங்கள் உடல் நலனைப் பாதுகாக்கும். அது உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசிம் என்கிறார்கள் பல் மருத்துவர்கள்.

பிரஷினால் எப்படிப் பல்லைத் துலக்க வேண்டும்? பிரஷ்ஷை எப்படித் தேர்ந்தெடுக்க வேண்டும்? எவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை பிரஷை மாற்ற வேண்டும்?

அந்த நாளில் ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி என்பார்கள். அன்றைக்கு உபயோகித்த இயற்கையான பிரஷ் அன்றே தூக்கி எறியப்பட்டுவிடும். இப்போது எமக்கு நல்ல முறையில் நைலோன் பிரஷ் கிடைக்கிறது. மிகச் சிறிய குழந்தைகளுக்கு



பேபி– பிரஷ் கொடுக்கலாம். நீண்ட நாள் உழைக்கும் என்று ஹார்ட் பிரஷை தேர்தெடுக்க வேண்டாம். இது பற்களை தேய்த்து விடும். மிகவும் மென்யான பிரஷ்ஷாக இருந்தால் பல்லை போதுமான அளவு துலக்காது.

பல் துலக்கும் போது சுற்றுமுறையில் கடைவாயில் தொடங்கிச் சுழற்றித் துலக்க வேண்டும். மூன்று நிமிடங்கள் பல் துலக்க வேண்டும். அரை அங்குலம் நீளம் பேஸ்ட் போட்டால் போதுமானது. நுரை வரும்படி நன்கு துலக்க வேண்டும். தொடர்ந்து விரலாலும் சுத்தம் செய்யலாம். புளுரைட் சேர்ந்த பற்பசை நல்லது. அது பற்களுக்கு உறுதி அளிக்கும்.

பல் துலக்கிய பின் பிரஷை நீரில் நன்றாக கழுவி வையுங்கள். சாம்பல், கரித்தூள் போன்றவற்றைப் பயன் படுத்துவது பற்களைக் கெடுத்துவிடும். பல்லைத் துலக்க வேண்டும். தேய்க்கக் கூடாது. மிருதுவாகச் சுத்தம் செய்யக் கூடிய பேஸ்ட்டை வைத்து நயமாக பற்களை நன்கு விளக்க வேண்டும்.

பல்லில் வியாதி இருந்தால் பற்களில் துர்நாற்றம் ஏற்படும். வயிற்று உபாதைக்கு அடையாளமாகவும் பல்லில் துர்நாற்றமும், வாயில் கசப்பும் ஏற்படும். இந்தக் காரணத்தை அறிந்து சரிப்படுத்தினால் நாற்றமும் போய்விடும். உப்புத்தூளை வெந்நீரில் போட்டுக் கொப்பளிக்கலாம்.

சிலர் கைவைத்தியமாகக் கிராம்புத் தைலத்தை வைத்துக் கொள்கிறார்கள். இது தசையையும் பல் ஈற்றையும் எரித்துவிடும். ஆஸ்பிரின் போன்ற வலி நிவாரண மாத்திரை அவசியமானால் உபயோகிக்கலாம். ஆனால் பல்வலி ஏற்படும் போது டாக்டரின் ஆலோசனை பெறுவதே சிறந்தது. கூடுமானவரை தானே வைத்தியம் செய்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

பொதுவாகவே ஆண்டுக்கு ஒரு முறை பல் டாக்டரிடம் பற்களைச் சோதனை செய்து கொள்வது நல்லது. நாம் அன்றாடம் பல் தேய்க்கும் போது பற்களை நன்கு கவனிக்க வேண்டும். பற்களில் கறுப்புப் புள்ளிகள் தென்பட்டால், ஈறுகளிலிருந்து இரத்தம் கசிந்தால், பல் கூசினால், ஈறு சுருங்கினால், வாயில் எரிச்சல் ஏற்பட்டால், வாயில் பற்களை ஒட்டிப் புண்கள் தோன்றினால், டாக்டரை அணுக வேண்டும். பல் டாக்டரிடம் ஆரம்ப நிலையிலேயே சோதனை செய்து கொண்டால் பற்களைப் பிடுங்குவதைத் தவிர்க்கலாம்.

விளையாட்டு வீரர்களுக்கும் குழந்தைகளுக்கும் சில சமயம் பற்கள் உடைந்து போக நேரிடலாம். உடைந்த பல்லைச் சிறிதளவு குறைத்து செரமிக்கினால் செய்யப்பட்ட பல்லைப் பொருத்தி ஒட்டிவிட டாக்டரால் முடியும். இம்முறையில் பழுதுபார்த்துக் கொண்டால் பெரியவர்களான பிறகு செரமிக் பல்லைப் பொருத்திக் கொள்ளலாம்.

இரண்டு பற்களுக்கு இடையே உள்ள பல்லைப் பிடுங்க வேண்டிய நிலை சிலருக்கு ஏற்படும். அப்போது நடுவில் இடைவெளிவந்து விடும். அப்போது பக்கத்தில் உள்ள பற்களைக் குறைத்து, அதன் உதவியுடன் நடுவே வைட்டாலியம் (Vitalium) செரமிக் அல்லது டைடானியம் (Titanium) கொண்டு இடைவெளியை நிரப்பிப் பற்களைச் சீரமைத்து விடுவார்கள். இதற்கு (Bridging) பாலம் அமைப்பது என்று பெயர்.

குழந்தைகளுக்குப் பற்கள் சீராக அமையாவிட்டாலும் முன்னுக்குத் தள்ளி வந்திருந்தாலும் சிறுவயதிலேயே அதைச் சீரமைக்க முடியும். இதற்கான மருத்துவ உதவியுடன் பல் வரிசையை சீர் படுத்தி விட்டால் குழந்தைகளின் முகம் அழகாக ஆகிவிடும். குழந்தைப் பருவத்திலேயே பற்கள் நன்கு அமைந்து விட்டால், குறிப்பாக பெண்குழந்தைகளுக்கு, முகம் அழகாகி விடும். இதை நாம் அவசியமான வைத்தியமாகக் கருத வேண்டும்.

வயதானவர்கள் பற்களை இழந்துவிட்டால் அப்படியே இருக்க வேண்டியதில்லை. செயற்கைப் பற்களை கட்டிக் கொள்ளலாம். இதனால் முகத்துக்கு நல்ல அமைப்பு கிடைக்கும். பேச்சும் சீராக இருக்கும். ஓரளவு உணவைக் கடித்துமென்று சாப்பிடலாம். அதனால் ஜீரணமும் சீர்ப்படும். வயதான பிறகும் பற்களின் அமைப்பு நன்றாக இருந்தால் பொது வாழ்வில் நல்ல மதிப்பு உண்டாகும்.

''உடம்பின் பல பகுதிகளை இன்று மாற்று அறுவை சிகிச்சை மூலம் புதுப்பிக்கிறார்கள். அதேபோலப் பற்களையும் அக்ரிலிக்–பிளாஸ்டிக் என்ற பொருளால் அமைத்துக் கட்டுகிறார்கள். சிலருக்கு விபத்தினாலோ, பிறநோய்களாலோ பற்கள் பாதிக்கப்படலாம். அப்போது திசுக்களுடன் இணையக்கூடிய விதமாகப் பற்களை எடுத்துக் கட்டுவார்கள். இது புதுமையானது. இதற்குச் செலவு அதிகமாகும். ஆனால், செலவு செய்யக் கூடியவர்கள் செய்து கொள்வது நல்லது.

பற்சிதைவு, வயிற்றுப் புண் உட்படப் பல்வேறு காரணங்களால், வாயில் துர்நாற்றம் ஏற்படலாம். சாப்பிட்ட உணவு பற்களிடையே தேங்கும் போது, அது பாக்டீரியாக்களுடன் சேர்ந்து துர்நாற்றத்தை ஏற்படுத்தலாம். எனவே, காலை மாலை இரு வேளைகளிலும் பல்துலக்க வேண்டியது மிகஅவசியம்.

# ராசி பலன்

**08–02–2004 முதல் 14–02–2004 வரை 'ராசி பலன்'**

**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

இராசி நாதன் செவ்வாய் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் சுக்கிரனின் நட்சத்திரமான பரணியில் சஞ்சாரம் செய்வது மிகவும் நல்ல பலனைச் செய்யும். ராகு, கேது இராசியுடன் தொடர்பு படுவது சற்றுபின்னடைவுதான். இருப்பினும் குருவின் பார்வை இராசிக்கும், இராசி அதிபனுக்கும் கிடைப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,7) உரிய சுக்கிரன் 12இல் உச்சமாக இருப்பதால் (மறைவது என்று எடுப்பதா அல்லது உச்சம் என்று எடுப்பதா) பொருள் வரும், செலவாகும். 7இல் கேது இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. 4ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். தொழிலுக்குரியவர் 3இல் இருப்பதால் தொழில் துறை முன்னேறும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருக சீரிடம் 1,2.**

இராசிக்குரிய சுக்கிரன் 11இல் உச்சமாக இருப்பது மிகவும் நல்ல பலனைச்செய்யும். மேலும் சனியின் நட்சத்திரமான உத்தரட்டாதியில் சஞ்சரிப்பதால் நல்லபலனை எதிர் பார்க்கலாம். காரணம் இவ்விராசிக்கு சனி யோககாரனாக இருப்பதாலும் பணபரஸ்தானமான இரண்டாம் வீட்டில் இருப்பதாலும் உடல் ஆரோக்கியம் உண்டு. **எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு.** (2,5) உரிய புதன் 9இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4க்குரிய சூரியன் 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். கல்வியில் ஆர்வம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. 7க்குரிய செவ்வாய் 12இல் ஆட்சியாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரியவர் இரண்டில் இருப்பதால் தொழில் துறை முன்னேறும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 8இல் இருப்பது அதுவும் சூரியனோடு கூடி மேலும் சந்திரன், செவ்வாய் ஆகிய நட்சத்திரங்களான திருவோணம் அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் சஞ்சரிப்பதால் கல்வியில் ஆர்வம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமைந்தாலும் கால தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். இரண்டாம் வீட்டை செவ்வாய், சூரியன், புதன் ஆகிய கிரகங்கள் பார்ப்பதால் பணப்பற்றாக்குறை நிலவும். 4க்குரியவர் 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,10) உரிய குரு 3இல் மறைவதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் துறையில் பின்னடைவு வர வாய்ப்புண்டு.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

இராசி நாதன் சந்திரன் சிங்கம் முதல் விருச்சிகம் வரை சஞ்சரிப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இரண்டுக்குரிய சூரியன் 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4க்குரிய சந்திரன் உச்சமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7க்குரிய சனி 12இல் இருந்தாலும் 2இல் குரு இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும். செவ்வாய், சூரியன், புதன் ஆகிய கிரகங்கள் இராசியைப் பார்ப்பதால் நல்ல பலனை எதிர் பார்க்கலாம். அத்துடன் பக்க உதவிகளும் கிடைக்கலாம்.

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| சுக் | செவ்வாய் ராகு | | சனி |
| | | | |
| சூரியன் புதன் | | | குரு |
| | | கேது | |

தை 25 முதல் மாசி 02 வரை

சூரியன் மகரம் முதல் கும்பம் வரை
சந்திரன் சிங்கம் முதல் விருச்சிகம் வரை.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.**

இராசி நாதன் சூரியன் 6ஆம் வீட்டில் இருப்பது நல்லதல்ல. ஆனால், செவ்வாயின் நட்சத்திரமான அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதால் செவ்வாய் யோககாரணாக இருப்பதால் ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். இரண்டுக்குரிய புதன் 6இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (4,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். பூர்வீக சொத்து சேரும் வாய்ப்புண்டு. 7க்குரிய சனி 11இல் இருப்பதால் திருமணவாய்ப்புண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய சுக்கிரன் 8இல் இருந்தாலும் உச்சமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 5இல் இருப்பது விசேஷம். ஆரம்பத்தில் சந்திரனின் நட்சத்திரமான திருவோணத்தில் சஞ்சரிக்கலாம். நல்ல பலனையும் பிற்பகுதி செவ்வாயின் நட்சத்திரமான அவிட்டத்தில் சஞ்சரிக்கும் போது தாமதமான பலனையும் கொடுக்கலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,9) உரிய சுக்கிரன் 7இல் உச்சமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது (4,7) உரிய குரு 12இல் மறைவதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 7ஆம் வீட்டை சனி பார்ப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. 10இல் சனி இருப்பதால் தொழில்துறை முன்னேறும் பக்க உதவி கிடைக்காது.

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**

இராசி நாதன் சுக்கிரன் 6இல் இருப்பது நல்லதல்ல. ஆனால், உச்சமாக இருப்பது ஓர் ஆறுதல். மேலும் சனியின் நட்சத்திரமான உத்தரட்டாதியில் சஞ்சரிப்பது நல்ல பலனைச் செய்யாது. ராகு, கேதுக்களின் தொடர்பும் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம். (2,7) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. 7இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. 4க்குரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 4இல் சூரியன், புதன் சேர்க்கை கல்வியில் ஆர்வத்தைக் கொடுக்கும். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். 3 கிரகங்கள் பார்ப்பதால் பக்க உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம் விசாகம் 4, அனுஷம், கேட்டை.**

இராசி நாதன் செவ்வாய் தனது மற்றைய வீடான மேடத்தில் ஆட்சியாக இருப்பது சிறப்பு. மேலும் சந்திரனின் நட்சத்திரமான பரணியில் சஞ்சரிப்பது நல்ல பலனைக் கொடுக்கும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். (2,5) உரிய குரு 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயற்பாடு திருப்திதரும். தொழில்துறை முன்னேறும். 4க்குரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7க்குரிய சுக்கிரன் 5இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பூரண சுபக்கிரகமான குரு, சுக்கிரனின் அமைப்பு சிறப்பாய் இருப்பது நல்லபலனைத்தரும்.

**தனு மூலம், பூராடம், உத்தராடம்1**

(1,4) உரிய குரு 9இல் இருப்பது மிகவும் நல்ல பலனைத்தரும். மேலும் சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் சஞ்சரிப்பது விசேஷம். ஆனால், வக்கிரகதி அதாவது பின்னோக்கி நகர்வது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். வீடு, வாகனம் லாபம் தரும். இரண்டுக்குரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய புதன் இரண்டில் சூரியனோடு இணைந்து இருப்பது திருமண வாய்ப்பு உண்டு. தொழில்துறை முன்னேறும். 7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. மேலும் சனியின் பார்வை குரு, லக்கினம் 4ஆம் வீடு ஆகிய இடங்களைப் பார்ப்பதால் சிலதடைகள் வரவாய்ப்புண்டு.

**மகரம் உத்தராடம் 2,3,4. திருவோணம், அவிட்டம்1,2.**

இராசிக்குரிய சனி 6ஆம் வீட்டில் இருப்பது ஒரு அளவுக்கு நலம் என்று சொல்லலாம். மேலும் ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் சஞ்சரிப்பது நல்லதல்ல. மேலும் வக்கிரம் அடைவதும்கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சிகள் பாதிக்கலாம். கையில் பணம் இருக்காது. 4க்குரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7ஆம் வீட்டை சூரியன், செவ்வாய் நோக்குவதும் குரு 8இல் மறைவதும் திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். 7ஆம் வீட்டில் கிரகங்கள் இல்லாமையால் குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய சுக்கிரன் 3இல் உச்சமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். சூரியன், புதன் இராசியில் இருப்பது சிறப்பு. குரு 8இல் மறைவது நல்லதல்ல.

**கும்பம் அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

இராசிக்குரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. மேலும் ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் சஞ்சரிப்பதும் கூடாது. எனும் வக்கிரகதியடைவதும் நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சிகள் தடைப்படலாம். இரண்டுக்குரிய குரு 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,9) உரிய சுக்கிரன் இரண்டில் உச்சமாக இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். பூர்வீக சொத்து சேரலாம். 7க்குரிய சூரியன் 12இல் இருந்தாலும் 7இல் குரு இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. 10க்குரிய செவ்வாய் 3இல் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**மீனம் பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

(1,10) உரிய குரு 6இல் இருப்பது நல்லதல்ல. சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் சஞ்சரிப்பது விசேஷம். ஆனால், வக்கிரம் அடைவது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். இரண்டுக்குரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,7) உரிய புதன் 11இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். பத்திற்குரிய குரு மறைவது தொழில் துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. மேலும் 10 இல் வீட்டை சனி பார்ப்பதும் கூடாது. இராசியில் சுக்கிரன் உச்சமாக இருப்பது சகல நன்மைகளும் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# உண்மை எப்பொழுதும் வெல்லும்

இறுதியில் உண்மை வென்றுவிட்டமை குறித்து எனக்கு மிக்க மகிழ்ச்சி. சங்கைக்குரிய தேரரின் மரணம் இயற்கை மரணமென தற்போது தெரிய வந்துள்ளது.

நான் உளமார நம்பிக்கை வைத்து வழிபடும் தெய்வத்தின் தீர்ப்பு இதுவாகும்.

இறைவனுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிப்பதோடு நான் உயிராபத்தை எதிர்நோக்கிய வேளையில் என்னருகில் இருந்து எனக்கு ஆறுதல் கூறி என்னைக் காப்பாற்ற முன்வந்த ஆயிரக்கணக்கானோருக்கும் நான் நன்றி கூறுகிறேன். இவர்கள் சகல மதங்களையும் சகல இனங்களையும் நாட்டின் சகல பகுதிகளையும் பல உலக நாடுகளையும் சேர்ந்தவர்களாவர்.

நீங்கள் காண்பித்த அன்புக்கும் துணிச்சலுக்கும் எனது நன்றிகள். உங்களைப் போன்று உண்மையான நண்பர்களைப் பெற்றமை எனது பாக்கியமே.

அப்பாவி மக்களுக்கு எதிராக வெறுப்புணர்வையும் வன்செயல்களையும் தூண்டிவிடுவோருக்கு நான் கூறுவது - 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நிராதரவான தமிழ் மக்கள் மீது நீங்களே பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டீர்கள். உங்கள் கரங்களில் அப்பாவிகளின் இரத்தக் கறை படிந்துள்ளது.

20 வருடங்களாக இலங்கை மக்களாகிய நாங்கள் வருந்துவதற்கு இவர்களே காரணம்.

தற்போது சமாதானம் வந்துள்ளது. இவர்கள் சமய மோதல்களை தூண்டி விடுகிறார்கள். ஆனால் நாட்டின் பெரும்பான்மை மக்கள் சமாதானத்தையும் அகிம்சை வழியையுமே விரும்புகிறார்கள் என்பது எனது நம்பிக்கை.

இறுதியாக, நான் ஒரு கிறிஸ்தவன், அதாவது கத்தோலிக்கன். நானும் இந்த நாட்டில், உலகில் உள்ள ஒவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை பயமின்றி பின்பற்ற சுதந்திரமும் உரிமையும் உண்டு.

அன்பும் சமாதானமும் மற்றவரது மதத்தின் மீது மதிப்பும் இருக்கும்வரை எமது நாடு ஒரு சுவர்க்க பூமியாக திகழும்.

நான் எந்த சமயததைச் சேர்தவன் என்பது முக்கியம் அல்ல எனது முயற்சிகள் மூலம் நான் இந்நாட்டின் வேலையற்ற ஆயிரக்கணக்கானோருக்கு வேலை தருவதற்கும், வீடற்றோருக்கு தங்கி நிழல் வழங்கவும் வறுமைக்கோட்டின் கீழ் இருப்போரை உயர்த்தவும் ஏதோ ஒரு வகையில் எமது மக்களின் அவலங்களையும் துயரங்களையும் துடைப்பதற்கு உதவுகிறேன் என்பதும் அவ்வித முயற்சிகள் சாதி, மத, இன, வகுப்பு வாதமோ பேதமோ அற்ற முறையில் என்னால் செயற்படுத்தப்படுகிறது என்பதும் அன்றோ முக்கியமானது?

தேசமான்ய கலாநிதி லலித் கொத்தலாவல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவோம்!

கம்பவாரிதி இ.ஜெயராஜ், மல்லிகை செப்டெம்பர் - 2003 இதழில் 'வாராதே! வரவல்லாய்....' என்ற தலைப்பில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோர் பற்றி கட்டுரை எழுதி இருந்தார். அந்தக் கட்டுரையை சுடர் ஒளி ஜனவரி 04 -10.2004 வார இதழ் மறுபிரசுரம் செய்திருந்தது.

கம்பவாரிதியின் கட்டுரைக்கு பதில் அளிக்கும் விதத்தில் மல்லிகை நவம்பர் 2003 இதழில் மற்றொரு கட்டுரை வெளிவந்தது. கனடாவைச் சேர்ந்த கனகசபேசன் என்பவர் 'வருவோம்! வாய்ப்புள்ள போதெல்லாம் வந்து வாழ வைப்போம்!' என்ற தலைப்பில் இதனை எழுதி இருந்தார்.

வெளிநாட்டில் வாழும் சுடர் ஒளி வாசகர்களின் வேண்டுகோளுக்கு அமைய கனகசபேசனின் கட்டுரை இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது. படித்துப் பாருங்கள்.

## கம்பவாரிதிக்கு கனடா வாழ் தமிழன் பதில்

உங்களின் செப்டெம்பர் மாத வெளியீட்டில் '' வாராதே! வர வல்லாய்...'' என்று தலைப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் எழுதிய கட்டுரையை வாசித்தேன்.

புலம் பெயர்ந்து வாழ்பவர்களைப் புண்படுத்தும் வகையில் அது அமைந்திருந்தது. உங்களின் சொந்தங்களும் பந்தங்களும் புலம் பெயர்ந்து வாழ்வதால் நீங்களும் அக்கட்டுரையின் தாக்கத்தை மனம் கொண்டிருப்பீர்கள்.

என்னைப் பொறுத்தவரையில் 'மல்லிகை'யின் மணத்தை அக்கட்டுரை மாசுபடுத்தியிருப்பதாகவே நினைக்கிறேன். அதற்கு மறுப்பாக இத்துடன் அனுப்பியுள்ள கட்டுரையை நடுநிலை பிறழா உங்களின் அடுத்த மலரில் வெளியிட வேண்டுகின்றேன்.

'தூயன துணிந்த போது அது சாதனையாக மாறும்' நான் கனடாவில் வாழும் ஒரு புலம் பெயர்ந்த தமிழீழ மகன். விடுமுறையின் பொருட்டுச் சொந்த மண்ணுக்கு வந்திருந்த போது மல்லிகையில் அக்கட்டுரையை வாசித்தேன்.

இந்தக்கட்டுரையை எல்லோரும் படியுங்கள். உங்களின் வாசிப்புச் சுதந்திரத்தைப் பறிக்க நான் யார்? நான் நடுநிலையாகச் சிந்திப்பவன். ' போற்றவார் போற்றட்டும். புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும்' ' தீதும் நன்றும் பிறர் தர வாரா' எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை. லூசன் என்ற ஆங்கிலச் சொல்லையும் நான் பயன்படுத்த விரும்பவில்லை.' கண்டது கற்கப் பண்டிதன் ஆவீர்கள்'. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்று வாழ்வது நம்மினம் என்று சொன்ன புலவர்கள் பைத்தியக்காரர்கள் அல்லர். அப்படிச் சொல்பவர்கள் சொல்லிக் கொண்டே இருக்கட்டும். அந்தப் புலவர்களுக்கு வந்து மீண்ட நம்மவர் அறிவர். அது மட்டுமன்றி அவர்கள் விதந்துரைத்துமுள்ளனர்.

வெளிநாட்டிருந்து வந்த எம்மவரின் குழந்தை ஒன்று வாழைப்பழத்தை ''உரித்துத்தா'' என்பதற்குப் பதிலாக '' கழட்டித்தா'' என்று கேட்டுவிட்டதாம்.ஊர் சிரித்ததாம், மாமா பதறி அடித்தாராம் என்பவை எல்லாம் கூட்டத்தில் கைதட்டு வாங்குவதற்காக வேண்டுமானால் கூறலாம். ஆனால், மடல் விரித்து மக்குத்தனமாக உளறக்கூடாது. ' கல்லா மழலை கலந்து கொஞ்சும் சொல்லால் உருக்கும்' சுவையை அறியாத கட்டைப் பிரம்மச்சாரிகளுக்கு மழலைச் சொல்லின் சுவை எப்படிப் புரியப் போகிறது. '' கழட்டித் தாருங்கள்'' என்பது தமிழ்ச் சொல்தானே! ஐயா! (F)பொறின் வாரிசு என்பதை பிறநாட்டு வாரிசு என்று நீங்கள் சொல்லியிருக்கலாமே! சீதையைப் பற்றிய நினைவிலேயே இருப்பதால்'' திகைத்தனை போலும் சிந்தை.''


வெளிநாட்டில் இருக்கும் தமிழீழ மக்கள் தமிழுக்கு எதிரானவர்கள் என்று தப்புக்கணக்குப் போடாதீர்கள். விடிய விடிய இராமர் கதையும், ஆடல் வேள்விகளும் நடத்திப் பட்டணத்தில் டொல்லாப் போட்டுக் கொட்டி முழக்கிக் கோடி கோடியாகக் குவிப்பவர்களுக்கு எங்களைப் பார்த்தால் குறும்பாகத்தான் இருக்கும். நாங்கள் '' தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்'' அடுத்த சந்ததி இதனை நிச்சயம் அனுபவிக்கும்.உங்களுக்குச் சந்ததியும் இருக்காதே. அதுவும் நல்லது தான்.

நாங்கள் புலம் பெயர்ந்து சென்ற காரணங்கள் வெளிப்படையானவை மட்டுமல்ல. மறுக்கப்பட முடியாதவையும் கூட. நீங்கள் அவற்றைக் கொச்சைப்படுத்தி எழுதியிருக்கிறீர்கள். ' பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும்' காட்டி இருக்கின்றீர்கள். பச்சோந்திகள் இடத்திற்கிடம் நிறம் மாறுபவை தானே. நீங்கள் ஒரு பாசாங்குக்காரன். ஈழத் தமிழினத்திற்கு எழுச்சி ஏற்படுத்திய இயக்கத்தைப் பற்றிச் சொல்வதற்கு உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? எங்களுக்குச் சுயபுத்தி இருக்கிறது. உங்கள் மேல் அனுதாபப்படுகின்றோம். 'கூட்டம் கூட்டுவதும், ஆட்டம் ஆடுவதும், நோட்டம் பார்த்து நோட்டுச் சேர்ப்பதும் ஆத்தாதவன் செய்யும் செயல்'.

யாழ்.இளைஞர்கள் தான் வெளிநாடு செல்கின்றார்களென்றில்லை. எல்லா இடங்களில் இருந்தும் செல்கிறார்கள் தானே! உங்களோடு இருந்த கம்பன் கழக உறுப்பினர்கள் எத்தனைபேர் சென்று விட்டார்கள்? வஞ்சம் தீர்க்காமல் நெஞ்சைத்தொட்டுச் சொல்லுங்கள், நீங்கள் புகைப்படம் எடுப்பதில்லையா? ஊடகவியலாளர்களுக்குப் பின்னால் வால் பிடித்துப் படங்களெடுத்து, பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் போடச் சொல்லுவதுதான் உங்கள் வழக்கமாச்சே! நாங்கள் படமெடுத்தால் ஏன் உங்களுக்கு வயிறு எரிகிறது?

யாழ் மண்ணின் அடிப்படையை நாங்கள் ஆட்டங்காண வைக்கவில்லை. ஆனால், அதன் அன்பை ஆழமாக்கித்தெம்பு தர வைத்திருக்கின்றோம் என்பதுதான் உண்மை. ' பணம் பத்தும் செய்யும்' என்பது மட்டுமல்ல, அது பாதாளம் மட்டும் பாயும், பலவழிகளிலும் பணம்சேர்த்தும், பல்லிளித்தும், பல்லவி பாடியும் கோடிரூபாவுக்குக் கொழும்பில் வீடு வாங்கியுள்ளீர்கள். அதில் எங்களிடம் பெற்ற பணம் எத்தனை வீதமென்று கணக்குப் போட்டுப் பாருங்கள் தெரியும். எந்த விழாவிற்கு நீங்கள் கணக்குக் காட்டினீர்கள்? இனிமேல் எங்களிடம் வராதீர்கள். இது முதலும் கடைசியுமான எச்சரிக்கை!

பீடி குடிப்பதைவிட நீங்கள் செய்த, செய்கின்ற தப்புத்தாளங்கள் படுபாதகமானவை. களவில் ஒழுகி இளசுகளில் பழகுபவர்களைவிட— 'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவது நாகரீகம்'' தானே. நாங்கள் நயக்கத்தக்க நாகரிகம் பேணுபவர்களாவோம்.' 'புதியன கண்டபோதும் பழையவற்றை மறக்க மாட்டோம்' யாழ்ப்பாணப் பெடியன்கள் விசரன்களும் அல்லர், நீங்கள் புத்திசாலியும் அல்லர். இப்பவும் அவர்கள் சாதனை வீரர்கள்தான். வெளிநாடுகளில் படிக்கும் யாழ்ப்பாணப் பெடியன்களின் சாதனைகளைப் பார்த்து வெளிநாட்டவரே அசந்து



கம்பவாரிதி இ.ஜெயராஜ்

தான் ஊரை மறந்து வெகுநாட்களாச்சே. வேற்றுமைகளை விதைக்காதீர் அவற்றை நீங்கள் அறுக்க வேண்டி வரும்.' தூயவன்' இராமன் கதையைச் சொல்லித்திரியும் நீங்கள் வாய்மையையும் மரபையும் காக்க வேண்டுமல்லவா? உண்மையான ஆத்மீகவாதி போல் எழுதப்பழகுங்கள். கடவுள் எங்குமிருப்பார் அவரைப்பார்த்து நீங்கள் ஏன் அழுதீர்கள். உங்கள் தண்டலில் அதிகம் சேரவில்லையோ!

எங்கள் வீட்டு நிலை நன்றாகத்தான் இருக்கிறது.கம்பனை ஈடுவைத்துக் கடன்பட்டு காக்கா பிடிக்கும் கம்சன்களாக நாங்கள் இல்லை. எங்கள் கடனை நாங்களே அடைப்போம். நீங்கள் கவலைப்படாதீர்கள்.பொறாமையில் புழுங்காதீர்கள். அவிந்து போவீர்கள். எங்களுக்கு கடமைகள் தான் முதன்மையானவை. களியாட்டம் பின்னர் தான் உண்டு. அதுதான் எங்கள் பூட்கை. எங்கள் குழந்தைகள் விபத்திலே பிறந்தவர்கள் என்று எ[illegible]டி வாய்கூசாமல் சொன்னீர்கள், 'பள்ள[illegible]ல் பூத்த மலர்கள்' போன்றோர் தான் விபத்திலே பிறந்தவர்கள். நீங்கள் அத்தனைபேரும் உத்தமர் தானா? சொல்லுங்கள் . நடந்து வந்த பாதையை திரும்பிப் பாருங்கள் ஐயா! எங்களுக்குப் போகம் தேவையில்லை. போகம் எங்களோடுதான் இருக்கிறது. போகத்தில் புரண்டுகொண்டிருக்கும் உங்களை ரோகம் துரத்தத்தொடங்கிய பின்னுமா உங்களுக்கு இன்னும் புத்திவரவில்லை. அட இராமா! மன்னித்துவிடு இவரை.

தலைநகர் கொழும்பில்நீங்கள் அடிக்கும் குத்துக்கரணங்களைவிட எங்களுடைய கூத்து என்று நீங்கள் கூறுவது பெரிதல்ல. படலையில் பாதுகாப்புக்கு ஆளும், பத்திரிகையாளரின் அனுசரணையும் வைத்துக்

# வாய்ப்புள்ள போதெல்லாம் வந்து வாழவைப்போம்!

கொண்டு நித்தம் நித்தம் பயப் பீதியோடு வாழ்பவர்கள் அல்லர் நாம். தமிழர் தமிழர்களாகத்தான் வாழுகின்றோம். 'நாம் யாருக்கும் குடியல்லோம்' மலர்தலும் கூம்பலுமின்றி மனநிறைவோடு தான் இருக்கிறோம்.

யார் அர்த்தநாரீஸ்வரர் என்றுநிலைக் கண்ணாடிக்கு முன்போய் நின்று நீங்களே ஒருதரம் உங்களைப்பாருங்கள். மேலே பெண்—கீழே ஆண். புரிகிறதா? கொழும்பு கடற்கரையோரங்களுக்கு அடிக்கடிசென்று பார்க்கும் நீங்கள், இங்குள்ளவர்களை விட நவநாகரீகப் பெண்களை பார்த்திருப்பீர்கள்!

நாளாந்தம் நீங்கள் எத்தனை ஆங்கில, சிங்கள சொற்களை உதிர்க்கிறீர்கள். உங்களுடைய கட்டுரையையே திரும்பப் படித்துப் பாருங்கள். சிங்களவருக்குப் பயந்து தமிழர் என்று காட்டிக் கொள்ளாமல் நீங்கள் இருந்த நாட்கள்எத்தனை என்று எண்ணிப் பாருங்கள். எங்களைப்பார்த்து ஏன் குழம்பினீர்கள்?

போர் நிறுத்தத்தால் நாங்கள் சொந்த மண்ணுக்கு வந்தது உண்மைதான். இல்லையானால் நீங்களும் காக்கைவன்னியராய் மாறியிருப்பீர்கள். போர் நிறுத்தத்தின் பின் தானே நீங்களும் யாழ்ப்பாணம் போனீர்கள். போனாலும் நீங்கள் பேச்சுமூச்சுகாட்ட முடியாதே! குடும்பிதட்டியது குலதெய்வத்தின் புண்ணியம்.

நாங்கள் உழைக்கும் உழைப்பைவிட உங்களின் வசூல்தானே அதிகம். அந்த வசூலில்தானே உங்கள் குடும்பம் கொலுவிருக்கிறது. மச்சான்மார், பெடியன்கள்,

22 ஆம் பக்கம் பார்க்க....

ளின் படைப்புகளை வைத்துக் கொண்டு பட்டி மன்றங்கள் நடத்துபவர்களும் பைத்தியங்களோ! பத்திரிகைகள் படிப்பதும் அறிவு தானே! விமர்சிப்பவர்கள் அவரவர் விருப்பங்களைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மாற்றாமலிருந்தால் சரி. 'கெடுகுடி சொற் கேளாது' என்பது மட்டுமல்ல, சொல்வழி கேளாதவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். உங்களுக்குச் சில உண்மைகளைச் சொல்லத்தான் இதை எழுதுகின்றேன். மல்லிகை மணம் போல் இச் செய்தி உங்களை வந்தடையும் என்றும் நம்புகிறேன்.

நம் ஈழமண்ணில் செம்பாடும் இருக்கின்றது, மணற்பாடு, கழிப்பாடு, கற்பாடு என்பனவும் இருக்கின்றன. தம்பாட்டில் ஆங்காங்கே வாழ்ந்து, போரின் கெடுபிடிகளால் புலம் பெயர்ந்த நம்மவர் இன்று பல நாடுகளிலும் வாழ்வது ஒன்றும் புதிய செய்திகளல்ல. தனித்துச் செம்பாட்டு மண்ணில் வாழ்ந்தவர்கள் அப்படிச் சென்றுள்ளார்களென்று நான் சொன்னால் அது முட்டாள்தனமாகும். வாரிதியார் ஏன் அப்படிக் குத்திக் காட்டுகிறார்?

புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் தாம் வாழும் நாடுகளின் தட்ப, வெப்ப நிலைகளுக்கேற்பவும், கலை பண்பாடுகளுக்கு ஏற்பவும், அதே நேரம் தங்கள் தனித்துவத்தை விட்டுக் கொடுக்காமலும் வாழ வேண்டியுள்ளது. இந்த வகையில் ஆங்காங்கே வாழும் தமிழர் தமிழையோ, தம் பண்பாடுகளையோ மறந்து விடாமல் இருக்கிறார்கள் என்பதை அந்த நாடுகஈஸ்வரன் கிருபையில் இருந்து கொண்டு 'கருடா சவுக்கியமா?' என்று கேட்கிறீர்கள். கொழும்புத் தமிழர்களை ஏமாற்றி வேடம் போட்டுச் சூடம் கொளுத்தும் பெரிய பூசாரி ஆகிவிட்டீர்கள். 'ஆலைஇல்லா ஊருக்கு இலுப்பைப் பூசக்கரை' ஆகிவிட்டீர்கள்.

நீங்களும் புலம் பெயர்ந்திருந்தால் குடுமியை வெட்டிக் கோட்டணிந்து 'குடிகுடி ஈசற்கு' ஆட்கொள்ளப்படாமல் போயிருப்பீர்கள். உங்களைப் போன்ற தமிழர்களை விட பிறநாட்டவர்கள் பெருந்தன்மையுடையவர்களே. எங்கள் கள்ளங்கள் விலை போகவில்லை. உள்ளங்கள் தான் உந்துசக்தியாக இருந்தன.

' தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர் குணமுண்டு' என்பதை நாம் காட்டியதால் எம்மை நம்பி எமக்குக் கை கொடுத்தார்கள் வெளிநாட்டவர்கள். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களைவிடத் தலைநகர் கொழும்பில் வாழும் உங்களைப் போன்றவர்களுக்குத்தான் கள்ளங்கள் விலை போகின்றன. யாழ்ப்பாணத்தவரால் விரட்டப்பட்டு, இனிமேல் மேடையேறக் கூடாது என்று சொன்னதால், பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடந்து விட்டுக் கொழும்புக்குச் சென்று, சொற்சிலம்பமாடி பொழுதுபோக்குக்காக வாழும் மேற்தர மட்ட மேலோங்கிகளுக்கு பூச்சாண்டி காட்டிப் பொருள் சேர்க்கிறீர்கள்.

நீங்கள் புலம் பெயர்ந்த தமிழர்களை நாடிப் பிச்சைப் பாத்திரமேந்தி அந்தவிழா, இந்தவிழாவுக் கென்று பணம் சேகரித்ததை மறந்து விட்டீர்களா? இது ஒரு பரதேசி வாழ்வல்லவா? நீங்கள் எங்களைப் பகைத்துக் கொள்ளாதிருப்பதற்காகச் சில இடங்களில் பூசி மெழுகியும் போய் விடுகிறார்களென்பதை நீங்கள் கேள்விப்படவில்லையா? நீங்கள் கம்பன் குவித்த கவிதைகளை மட்டும் கிளறி உளறுபவர் தானே! ஏதோ அதைமட்டும் இட்டு விட்டுக் கொக்கரிக்கிறீர்கள்.

சாணிவிற்று, நகைவிற்று, கடன்பட்டு நாங்கள் வெளிநாடுகளுக்குப் போகப் பட்ட பாடு உங்களுக்குத் தெரிந்திருந்தும், எம்மை நக்கலடிக்கிறீர்கள்! இந்தப் பதினைந்து, இருபது ஆண்டுகளில், எம். இன பந்துக்களுக்கும், ஆலயங்களுக்கும், அற நிலையங்களுக்கும் எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கின்றோம். இது அவரவருக்குத்தான் தெரியும்.உங்கள் உறவினராய் வெளிநாட்டில் இருப்பவர்கள் உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும் செய்தவை கொஞ்ச நஞ்சம் அல்ல.' கொன்றன்ன இன்னா செய்யினும் ஒருவர் செய்த ஒன்று நன்றுள்ள கெடும்' என்றார் வள்ளுவர். இதையும் மறந்துவிடாதீர்கள். உங்கள் கட்டுரையை அவர்கள் படித்தால் கொதித்தெழுவார்கள்.'குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பென்று' எனவே' குறுமுண்டி' வேலை பார்க்காதீர்.

தவப்பயனால் நீங்கள் வந்து எங்களைப் பார்த்தது அவப்பயனாய்ப் போய்விட்டதோ. 'ஆத்மீகவாதி' என்று நீங்களே உங்களுக்கு பட்டம் சூட்டிக்கொள்ளவேண்டியதுதான். ஆத்மீகத்தின் வரைவிலக்கணத்தைச் சற்றுக் கம்பனிடம் கேட்டுப்பாருங்கள். உங்கள் ஊரில் ஏட்டிக்குப் போட்டியாகக் கோயில்கள் கட்டியதை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? எத்தனை அறங்காவலர்கள் உங்கள் ஊரில் நீதிமன்றங்களில் நிற்கிறார்கள். நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசாரத்தில் வாஜ்பாயின் தந்திரம்



இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் பொதுத் தேர்தலுக்குத் தயாராகி விட்டார். மீண்டும் ஆட்சியைப் பிடிக்க அவர் களம் இறங்கி விட்டார். பிரசாரியான வாஜ் பாய் தேர்தல் பிரச்சாரத்தின் போது பல்வேறு தந்திரங்களைக் கடைப்பிடிப்பார். அவருடன் மேடையில் பெண் அரசியல் வாதிகள் அதிகளவில் தோன்றக் கூடியதாக அவர் பார்த்துக்கொள்வார். அதனால் கூட்டம் அதிகளவில் சேரும் என்பது அவருடைய நம்பிக்கை. ஜபல் பூரிக் நடைபெற்ற ஒரு பிரசாரக் கூட்டத்தில் வாஜ்பாய் அருகில் காணப்படுபவர் உமா பாரதி.


மசாலா மிக்ஸ்

# மிருகங்கள் வேடத்தில் தோன்றுவது அழகு



மிருகங்களை வெறுக்கும் மனிதர்களும் உலகில் இருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் மிருகங்களை நேசிக்கும் மனிதர்கள் தமது அன்பினை வெளிப்படுத்தத் துடியாய்த் துடிக்கிறார்கள். ஜேர்மனியர்களை பொறுத்தமட்டில் மிருகங்களைப்போல் வேடம் பூண்டு ஆடிப்பாடுவதில் அக்கறையுடையவர்கள் அவர்கள். பேர்லினில் நடைபெற்ற ஒரு விழாவில் மிருகங்கள் வேடத்தில் தோன்றி மகிழ்விக்கும் சிலரைப் படத்தில் காணலாம்.

# மிருக பலியைத் தடுக்க மக்களுக்கு ஆர்வம்



மிருகங்கள் பலியிடப்படுவதைத் தடுப்பதற்கு மக்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். ஆயினும், சில கோவில்களில் மிருக பலி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலும் இதே கதைதான். தமிழக அரசின் தடையையும் மீறி அண்மையில் மதுரையில் உள்ள பாண்டி முனிஸ்வரர் தலத்தில் மிருகபலி நடைபெற்றது. வேள்வியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஒரு ஆட்டின் உடல் அப்புறப்படுத்தப்படும் காட்சி இது.

# ஆட்டிப்படைக்கும் வைரஸ் கிருமிகள்



வைரஸ் கிருமிகள் இன்று உலக மக்களை ஆட்டிப் படைக்கின்றன. உயிரினங்களை வைரஸ் கிருமிகள் தாக்குவதால் அமெரிக்காவில் மாடுகளும், ஆசியாவில் கோழிகளும் அழிவுக்குள்ளாகிவருகின்றன. வைரஸ் கிருமிகள் பெருகுவதைத் தடுப்பதற்கு ஒரு மருத்துவ நிபுணர் தீவிரமாக ஆய்வு நடத்துவதைப் படத்தில் காணலாம்.

# புராதன மரங்களை காக்கப்போராட்டம்



அவுஸ்திரேலியாவிலுள்ள அடர்ந்த காடுகள் மிகவும் புராதனமானவை. அங்கெல்லாம் 400 வருடங்கள் பழைமை வாய்ந்த - விண்ணைத் தொடும் - மரங்கள் இருக்கின்றன. நகர விஸ்தரிப்பை முன்னிட்டு அந்தக் காடுகளை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. புராதன மரங்களை அழிக்கக்கூடாது என்று குரல் எழுப்பி சூழல் பாதுகாப்பு இயக்கத்தினர் போராட்டம் நடத்துகின்றனர். பழைய மரமொன்றின் கிளைகளில் மேடை அமைத்து அதில் ஏழு போராளிகள் குடியிருப்பதைப் படத்தில் காணலாம். மரத்தை வெட்ட அவர்கள் விடமாட்டார்கள்.



# ஒளிந்திருக்கும் முகம் எது?

ஜனவரி 25, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை அபிராமியினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:

*1.சி.கபில்தேவ், கோண்டாவில். 2. மு.மயூரதன், 55ஆம் கட்டை கிளிநொச்சி. 3.அ.விமலேந்திரன், வைரவர் கோவிலடி, உடுவில். 4.சி.சிவச்செந்தூரன், ஆனைக்கோட்டை. 5. மு.கவிப்பிரியா, 350, பருத்தித்துறை வீதி, கோப்பாய்.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது?

இவர் ஓர் முன்னாள் இராணுவ அதிகாரியும், சர்வாதிகார ஜனாதிபதியும் ஆவார்.

இந்த முகத்திற்குரியவரை கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின் வரும் எங்கள் புதிய முகவரிக்கு 01. 02. 2004க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாவத்தை,
கொழும்பு - 14.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் ரகசியம்!

பொதுவாக இன்று ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் வேலைக்குப் போவது வழமையாகிவிட்டது. இவ்வாறு வேலைக்குச் போவதற்கு முன், எவ்வாறு வேலையைத் தெரிவு செய்வது என்பது பற்றியும், பல்வேறு விதமான சூழ்நிலைகளில் கடமை புரிய வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகையில் அலுவலகத்தில் நாம் எவ்வாறு திறமையாக வேலை செய்ய முடியும் என்பது பற்றியும் பார்ப்போம்.



வேலையைத் தேடும்போது சம்பளத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம் தான். ஆனால் சம்பளம் மட்டுமே முக்கியம் என்று இருந்து விட முடியாது.

முதலில் வேலையைத் தேடுபவராக இருந்தாலும், அல்லது வேறு வேலைக்கு மாறுபவராக இருந்தாலும், அல்லது வேலை கிடைப்பது சிரமமாக இருந்தாலும் பலர் இன்று சம்பளம் மட்டுமே முக்கியமில்லை என்று கருதுகின்றனர்.

சமீபத்தில் நடத்திய ஆய்வில் "வேலையில் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?" என்ற கேள்வி கேட்கப்பட்ட போது இதில் முக்கிய எதிர்பார்ப்பாக இருப்பது பதவி உயர்வு மற்றும் திறமையை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் தான் என்று கூறப்பட்டது.

பொருளாதாரத்தின் அடிப்படையில் சம்பளத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களும், பதவி உயர்வு, நிறுவனத்தின் கொள்கைகள், சக ஊழியர்கள் என்று பல விடயங்களை எண்ணிப்பார்க்கின்றனர்.

சம்பளத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதால் குறைவான வேலை செய்ய வேண்டும் என்றில்லை. சம்பளம் எமது ஆற்றலுக்கு கொடுக்கப்படும் சன்மானம். அது குறைவாக இருந்தால் நம் மகிழ்ச்சியைப் பாதிக்கும்.

எனவே நாம் தேடிக்கொண்ட வேலையை சரியான முறையில் மேற்கோண்டு எல்லோரதும் பாராட்டைப் பெற வேண்டுமானால், பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

*நேரத்துக்கு அலுவலகத்துக்குச் செல்லுங்கள்.

*நேரத்தை வீணாக்காமல் முடிந்த அளவு வேலை செய்யுங்கள்.

*அதிகாரியிடம் பணிவாகப் பேசுங்கள்.

*எப்பொழுதும் முகத்தில் புன்னகையை வைத்திருங்கள்.

*உதவி கேட்பவரைத் தட்டிக் கழிக்காதீர்கள்.

*அனைவரிடமும் நட்புணர்வுடன் பழகுங்கள்.

*உங்களிடம் பணி புரிபவர்களிடம் பொறுமையாகப் பேசுங்கள்.

*களைத்த தோற்றம் இல்லாமல் எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள்.

*மற்றவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கத் தவறாதீர்கள்.

*நீங்கள் செய்த தவறுகளுக்குப் பொறுப்பேற்க மறுக்காதீர்கள்.

*அலுவலகத்தில் மனம்தளர்ந்தோ, கோபமாகவோ இருப்பதைத் தவிருங்கள்.

*தேவையில்லாமல் யாரிடமும் மற்றவர்களைப்பற்றித் தவறாகப் பேசாதீர்கள்.

*எந்த வேலை கொடுத்தாலும் முடியாது என்று சொல்லாதீர்கள்.

*உங்கள் பணியை நேசியுங்கள்.

பிறகென்ன உங்கள் அலுவலகத்தில் நீங்களும் சிறந்த ஒரு பெண்மணியே.

# பொடுகால் பிரச்சினையா?

ஆணோ அல்லது பெண்ணோ ஒருவரின் அழகை மேம்படுத்திக் காட்டுவதில் மிக முக்கிய பங்கு வகிப்பது கூந்தல். இதனைப் பாதுகாப்பதற்குப் பெண்கள் எதிர்கொள்ளும் இன்னல்களோ சொல்லில் அடங்காதவை. கூந்தலைப் பாதிக்கும முக்கிய அம்சங்களில் ஒன்றாகப் பொடுகையும் கூறலாம்.

தலையின் சருமம் வறண்டு போகவோ, எண்ணெய் வடியவோ விடுவதால் தலைமுடிகள் வறண்டு போவதோடு, பொடுகு வரவும் வாய்ப்பு உண்டு. இது குளிர் காலங்களில் அதிகமாகிறது. இதனால் தலையில் அரிப்பும் ஏற்படலாம்.

எனவே பொடுகு வராமலிருக்க அல்லது பொடுகை அகற்ற சில இலகுவான வழிமுறைகளை இப்போது பார்ப்போம்.

* தலைக்குப் பாவிக்கும் ஜெல், ஸ்பிரே மற்றும் ஷாம்பூ ஆகியவை உபயோகிப்பதால் பொடுகு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

*பேர்மிங் (PERMING), கலறிங் (COLORING), ஆகியவற்றாலும் பொடுகு வரலாம். அடிக்கடி நீண்ட நேரத்துக்கு ஹெயர் ட்ரையர் உபயோகிப்பதும் கூடாது.

*கவலை, பதற்றம் அதிகமானால், அல்லது ஷம்போ பாவித்த பின்பு சரியாக தலைமயிரை அலசாமல் இருப்பது போன்ற காரணங்களாலும் பொடுகு தோன்றக் கூடும்.

இந்தப் பொடுகை அகற்றுவதற்கு விசேடமாகத் தயாரிக்கப்படும் கலவை ஒன்று உள்ளது.



ஒரு கப் மருதாணி, சீயாக்காய் ஒரு தேக்கரண்டி, வெந்தயம், வேப்பிலை, துளசி அரைத் தேக்கரண்டி எல்லாவற்றையும் தயிரில் கலந்து ஒரு கலவையைத் தயார் செய்து கொள்ளவும். இதை தலை முழுக்கத் தடவி ஒரு மணி நேரம் வரை வைத்திருக்கவும். இப்பொழுது பொடுகை அகற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்ட ஆயுள்வேத ஷம்பூவால் தலையைக் கழுவின் கொள்ளவும். இதை வாரத்துக்கு ஒரு முறை என 3 மாதங்கள் வரை தடவவும். இதனால் நிச்சயம் பொடுகு விலகும். இதற்குப் பிறகும் தலையில் பொடுகு ஏற்பட்டால் உங்கள் உடல் கோளாறு தான் இதற்குக் காரணம். எனவே உங்கள் மருத்துவரைக் கலந்து ஆலோசித்துப் பயன்பெறுவதே இதற்குரிய சிறந்த வழிமுறை ஆகும்.

# வாயில் துர்நாற்றமா?

பொதுவாக சிலர் பேசுவதற்கே கூச்சப்படுவார்கள். காரணம் என்னவென்று கேட்டால், வாய் துர்நாற்றமே அவர்களது முக்கிய பிரச்சினையாக இருக்கும். ஆம். வாயை சுத்தமாக, துர்நாற்றமின்றி வைத்திருக்க இதோ சில வழிகள்:—

*சாப்பிடும் போது சுவையாக இருக்கும் உணவு வாயில் சிறிது நேரம் தங்கிவிட்டால், வாய் துர்நாற்றத்துக்குக் காரணமாக அமைகிறது. அதனால் சாப்பிட்டவுடன் பல் தேய்ப்பது நல்லது. இது பல் இடுக்குகளில் உள்ள உணவுப் பொருட்களைச் சுத்தம் செய்யும்.



*காலை எழுந்தவுடன் பல் தேய்ப்பதைப் போல் இரவு படுக்கப் போவதற்கு முன்பும் பல் தேய்ப்பது அவசியம்.

*பல் தேய்க்கும் போது பல்லில் மட்டும் கவனம் செலுத்தாமல் ஈறுகள் , நாக்கு இவற்றையும் சுத்தம் செய்ய வேண்டும். பல்லைவிட இவை மிருதுவானவை என்பதால் அவதானமாக இருக்க வேண்டும்.

*பிளொஸ்( FLOSS) செய்வதால் பற்களின் இடையே உள்ள பொருட்களையும் சுத்தம் செய்யலாம். இதைச் செய்வதால் வாய் துர்நாற்றத்தைப் போக்க முடியும் என்பதில் நம்பிக்கை இல்லை என்றால் உபயோகித்து முடித்தவுடன் பிளொஸை முகர்ந்து பார்க்கவும். அதன் பிறகு ஒருநாளும் பிளொஸை மறக்க மாட்டீர்கள்.

*பல் தேய்த்த பிறகு மவுத் வாஷால் வாயைக் கொப்பளித்தால் நீண்ட நேரத்திற்கு துர்நாற்றம் வராமல் தடுக்கலாம்.

*அஜீரணம், பசி இவற்றாலும் வாயில் துர்நாற்றம் ஏற்படலாம். அதனால் சாப்பாட்டில் கவனம் செலுத்தவும். ஒரே நேரத்தில் முடிந்த வரை சாப்பிடாமல் ஒரு மணி நேரத்துக்குஒரு முறை சிறிய அளவில் சாப்பிடுவது சிறந்தது. சாப்பிட முடியவில்லை என்றால் தண்ணீராவது குடிக்கவும். இது அஜீரணமும் பசியும் ஏற்படாமல் தடுக்கும்.

*மூக்கடைப்பு, சளி இவற்றாலும் வாயில் துர்நாற்றம் ஏற்படலாம்.

இவற்றை எல்லாம் செய்த பிறகும் வாயில் துர்நாற்றம் ஏற்பட்டால், மருத்துவரை அணுகுவது சிறந்தது.

## பெண்

# குழந்தைகளோடு நீங்கள் எப்படி?

நான்கு வயதிலிருந்து எட்டு வயதுக்குள் இருக்கும் ஒரு ஆண் அல்லது பெண்பிள்ளை ஒரு கேள்விக் குறி தான். இந்த வயதுக்குள் இருக்கும் குழந்தைகளுக்கு பலவற்றையும் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுப் பசி அதிகமாகவே இருக்கும். இவர்கள் கேட்கும் ஏன்? ஏன்? ஏன்? என்ற கேள்விகள் பெரும்பாலான பெற்றோர்களைக் கோபமடையச் செய்துவிடும். சில நேரங்களில் குழந்தைகள் பெற்றோரின் கவனத்தைக் கவருவதற்காக கேள்விகளைக் கேட்கலாம். அதே சமயம் சில விடயங்களை அறிந்து கொள்வதற்காகவும் அவர்கள் கேள்விகள் கேட்கலாம்.

எனவே அவற்றிற்கான பதில்கள் முடிந்தவரை முழுமையாகவும், உண்மையாகவும் அவர்கள் புரிந்து கொள்ளும்படி தெளிவாகவும் இருக்க வேண்டும்.



எமக்கு செவ்வாய்க்கிரகம் எப்படியோ அது போல சிறு குழந்தைகளுக்கு இவ்வுலகம் மிகவும் புதுமையானதாக இருக்கிறது. நாம் திடீரென்று செவ்வாய்க் கிரகத்தில் இறக்கி விடப்பட்டால் யாரையும் காணாமல் உதவியற்றவராக இருப்பது போல உணர்வோம். அங்கு நமக்கு உதவி செய்யக் கூடிய ஒரு நல்ல மனிதரைப் பார்க்கும் வரையில் நம் கேள்விகளுக்கெல்லாம் எவருமே பதில் சொல்லவில்லையென்றால் எவ்வளவு மோசமாக உணர்வோம்? அப்படித் தான் இவ்வுலகில் குழந்தைகளும் உணர்வார்கள். எம்மை அவர்களிடத்தில் வைத்துப்பார்க்க வேண்டும். எமக்கு மற்றவர்கள் எப்படிச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ அப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும்.

* குழந்தைகள் கேள்வி கேட்கும் போது பொறுமை இழந்துவிடாமல் இருக்க முயற்சி செய்யுங்கள். உங்களுக்குத் தெரிந்த வரையில் உண்மையைச் சொல்லுங்கள். உங்களுக்கு அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் தெரியவில்லை என்றால் அதை மறைக்காமல் ஒப்புக்கொள்ளுங்கள். அது உங்களுடைய மரியாதையைக் குறைத்துவிடும் என்று நினைக்காதீர்கள். நீங்கள் தவறாகச் சொல்லவில்லை என்பதை அறிந்து அக் குழந்தை உங்களை நம்பத் தொடங்கும்.

*குழந்தைகளிடம் ஏதாவது உறுதிமொழி சொன்னால் நிச்சயமாக அவற்றைச் செய்யுங்கள்.

* குழந்தைகளுக்கு ஒரு பரிசு தருவதாகச் சொன்னால் உங்கள் வார்த்தையை பொய்யாக்கிவிடாமல் அப்பரிசை நிச்சயமாக அக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் உங்கள் மீது குழந்தைகளுக்கு இருக்கும் நம்பிக்கை முழுதும் அற்றுப்போய்விடும்.

நாம் எமது குழந்தைகளுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். மிகவும் சரியானதையே சொல்ல வேண்டும். நாம் எப்போதும் உண்மையையே பேசுகிறவர்களாக பொய் பேசாதவர்களாக அவர்களுக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டேஸ்ட்கடை தணிகாசலம்

அன்று தணிகாசலம் அண்ணன் ஓய்வாக வீட்டில்இருந்தார். அப்போது மேட்டுலயத்து முருகன் ஓடி வந்து " அண்ணே உங்களைத் தேடி யாரோ ஒரு துரை ஜீப்பில் வந்து இருக்காரு'' என்று மூச்சு இரைக்கக் கூறினான்.

''என்ன முருகா எந்தத் துரை வந்தால் என்ன? அதுக்காக இப்படியா ஓடி வரணும்? கால் தடுமாறி விழுந்துவிட்டால் என்ன செய்வது? இப்படி உட்காரு'' என்று கூறியவர் ''ஆத்தா முருகனுக்கு ஏதாவது சாப்பாடு கொடுத்து அனுப்புங்க''என்றார்.

''இல்லைங்க அண்ணே! ஜீப் வரவும் என்னமோ ஏதோ என்று நான் பதறிப்போய்விட்டேன்'' என்றான் முருகன்.

''என்னடா முருகா, நாம என்ன கசிப்பா காச்சிறம் ஜீப்பைக் கண்டு பயப்பட. சரி சரி நீ சாப்பிட்டு விட்டுப் போ'' என்று கூறிக் கொண்டே சட்டையைப் போட்டுக்கொண்டு தணி அண்ணன் கிளம்பினார்.

தணி அண்ணன் றோட்டுக்கு வந்தபோது அங்கே கவர்மென்ட் ஏஜன்டோட ஜீப்பைக் கண்டார்.

ஜீப் கிட்டப் போனதும் தனக்கு பழக்கமான சமூக சேவை அதிகாரி சுரேஷைக் கண்டார். உடனே ''குட்மோர்னிங் சேர்'' என்றார் தணி அண்ணன். ''குட்மோர்னிங் தணி அண்ணன்'' என்று கூறிக்கொண்டே ஜீப்பில் இருந்து இறங்கினார் அதிகாரி சுரேஷ்.

''என்ன சார் காலையில அதுவும் லீவு நாள்ல வந்து இருக்கீங்க. ஏதும் அவசரமா?

''அவசரம்ஒன்னும்இல்ல. ஆனா அவசியமா செய்யணும். அது தான் உடனே வந்தேன்.''

''அப்படீங்களா? அப்படி என்ன அவசியமான விசயம்?''

''என்னங்க அண்ணே! ஒன்னும் தெரியாத மாதிரி கேட்கிறீங்க? எல்லாம் அந்த மாதம்பை தோட்ட ஆஸ்பத்திரி விசயமாத் தான்.''

''அடே அப்பா! இப்பவாவது அதுக்கு ஒரு விடிவு வந்திச்சே , ரொம்ப நன்றி சார்.''

''எங்களுக்கு எதுக்கு நன்றி சொல்லணும். நம்ப பிரதமருக்கு தான் நன்றி சொல்லணும். அவருக்கு நீங்க அனுப்பின கடிதம் கிடைச்சிருக்கு.உடனடியா எல்லா விவரத்தையும் அனுப்பும்படி ஓடர் போட்டு இருக்கார்.''

''என்ன சார் அப்படி சொல்றீங்க. அப்ப நான் கிராமசேவகர், கவர்மென்ட் ஏஜன்ட், மந்திரி எல்லாத்துக்கும் எழுதின காகிதங்களுக்கு எல்லாம் என்ன ஆச்சு?''

''நானும் ஒரு ஆபீஸர். அதைப்பத்தி எல்லாம் பேசுறது தவறு. என்றாலும், நான் உங்களில் ஒருவர். அதுனாலை சொல்லாமலும் இருக்க முடியல.''

''பரவா இல்லீங்க சார்! சும்மா சொல்லுங்க''

''எங்கள் உயர் அதிகாரி ஒரு துவேசம் பிடிச்சவன். அதுனால தமிழ்ல வந்த கடிதங்களை எல்லாம் குப்பைக் கூடையில போட்டுப் புடுவான். இப்ப பிரதமர்கிட்ட இருந்து கடிதம் வந்தவுடன் கடிதங்களை எல்லாம் குப்பையில தேடுறானுங்க. கடைசியில ஒரு விவரமும் இல்லாம என்னை புடிச்சி அனுப்பிப்புட்டாங்க''

''அது கூட நல்லதுக்கு தாங்க சார்.வேறு ஒரு சிங்கள அதிகாரி வந்து இருந்தா இப்படி



மனம் விட்டுப் பேச முடியுமா?''

''சரிங்க தணி அண்ணன்; வாங்க போய் அந்த ஆஸ்பத்திரியைப் பார்ப்பம்'' என்று கூறி ஜீப்பில் கிளம்பினார்.

''இது தாங்க மாதம்பை தோட்ட ஆஸ்பத்திரி. இப்படி ஜீப்பை நிப்பாட்டுங்க'' என்றார் தணி அண்ணன்.

''வண்டியை நிறுத்தி இருவரும் இறங்கினர். என்னங்க அண்ணே ஆஸ்பத்திரி என்று ஒரு பாழடைந்த கட்டிடத்தை காட்டுறீங்க.''

''இப்ப அப்படித் தான் சார் எல்லாரும் சொல்லுறாங்க. இந்த மாதம்பை தோட்ட ஆஸ்பத்திரி ஒரு காலத்தில பேர் போன ஆஸ்பத்திரி. தோட்டக் கம்பெனி நிர்வாகத்தில இருந்தப்ப ரெண்டு டாக்டர்மார், தாதிகள் மருந்து கொடுப்பவர்கள், உதவியாளர்கள் எல்லாம் இருந்தார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்குமான தனித்தனி வார்ட்டுகள். சகல வசதியோட கூடிய பிரசவ வார்ட்டு எல்லாம் இருந்திச்சி. இந்த மாதம்பை தோட்டத்தைச் சேர்ந்த ஐந்து டிவிசன்களையும் சேர்ந்த நாலாயிரம் பேர் சிகிச்சை பெற்றாங்க.''

''அவ்வளவு நல்ல ஆஸ்பத்திரி எப்படி இவ்வளவு மோசமான நிலைக்கு வந்தது?''

''அதுங்களா தோட்ட ஆஸ்பத்திரிய அரசாங்க ஆஸ்பத்திரியா மாத்திப்புட்டோம் என்று கூறி மந்திரிமார், சங்கத் தலைவர்கள் எல்லாம் வந்து மாலை போட்டுவிட்டு பொயிட்டாங்க.''

''அரசாங்க ஆஸ்பத்திரியா மாத்திப்புட்டா நல்லது தானே எல்லா வசதியும் கிடைக்கும்.''

''நீங்க ஒரு பக்கம் சார்; அப்புறம் தான் இந்த மாதம்பை தோட்ட ஆஸ்பத்திரிக்கே கேடு காலம் ஆரம்பிச்சிடுச்சி. வந்த டாக்டர்மார் தோட்டத்து ஆளுகள கவனிக்காம நாட்டு ஆளுங்களுக்கு நல்ல மருந்துகளை எல்லாம் விற்க ஆரம்பிச்சிட்டாங்க.

தோட்டத்து ஆளுங்களுக்கு பனடோல் கூட இல்லை.மருந்துக்குப் பதிலா துண்டு எழுதிக் கொடுத்து பாமஸியில மருந்து வாங்கச் சொல்லுறாங்க.''

''அடப் பாவிங்களா இப்படி அநியாயம் நடந்திருக்கா?''

''இன்னும் கேளுங்க சார்;கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் வரும் திரிபோஷா, போசாக்கு மருந்துகள் எல்லாத்தையும் வித்துப்புட்டாங்க. வார்ட்டில் தங்கியிருக்கிற நோயாளிகளுக்கு நல்ல சாப்பாடு இல்ல. வீட்டில் இருந்தே கொண்டு வர வேண்டும்.

இந்த அநியாயத்தை எல்லாம் பார்த்த தோட்டத்துரை அங்கே இருந்த டெலிபோன் எக்சேஞ்சையும் மூடிட்டாங்க. அவரிடம் முறைப்பாடு செய்தால் நான் ஒன்றும்செய்ய முடியாது. இப்ப அரசாங்க ஆஸ்பத்திரி . எங்களால ஒன்றும் செய்ய முடியாது என்கிறார். அதுவும் சரிதானுங்களேன்.''

''அது சரிங்க தணி அண்ணே! இப்படி ஆஸ்பத்திரி மேல் மரம் விழுந்து மண் மூடிக் கிடக்கே.அது யாருக்கும் தெரியவில்லையா?''

என்னங்க சார் மண் சரிவும் வெள்ளப் பெருக்கும் வந்து ஒரு வருசத்துக்கு மேல ஆவுது. இந்த ஆஸ்பத்திரியும் அப்ப தான் இடிஞ்சு போச்சு.எந்த சாமியோட புண்ணியமோ யாருக்கும் பாதிப்பு ஏற்படாம காப்பாத்திப்புட்டோம்.யார் யாரோ வந்தாங்க பார்த்தாங்க. எல்லாம் செய்வோம்னு போனாங்க. இது வரை ஒரு நாய், நரி கூட வந்து பாக்கல. அங்க பாருங்க சார். அவ்வளவு பெரிய மரம் விழுந்து கிடக்கு. ஆஸ்பத்திரி மண் மூடி கிடக்க அந்த மரத்தை வெட்டி துப்பரவாக்க கூட நாதி இல்ல.

''அப்படீன்னா ஏரியா மந்திரியிட்ட புகார் செய்யலியா?''

என்ன சார்அப்படிக் கேட்டுப்புட்டீங்க?

பழைய மந்திரி இப்ப மாகாண சபையில இருக்காரு. பிரதேச சபை மெம்பரும் தமிழ் ஆளு தான். எல்லாருகிட்டையும் சொல்லிப்புட்டோம். காயிதம் எழுதிப்போட்டோம். மந்திரி ஆறுமுகம், மந்திரி சந்திரசேகரன் எல்லாத்துக்கும் கூட எழுதிப் போட்டம். பேச்சு மூலம் இல்ல. அதுனால தான் கடைசியா பிரதமருக்கே எழுதினேன்.''

''தணி அண்ணே நீங்க செஞ்சது நல்ல விடயம் தான் அதுனால தான் நன்மை ஏற்பட்டிருக்கு. இப்ப நான் கொண்டுபோய் ரிப்போட்ட கொடுத்தா மட்டும் பத்தாது.ஒங்க தலைவர்மாரும் மந்திரிமாரும் அழுத்தம் கொடுக்கணும்.''

''அது சரிங்க சார். இந்த வெளிநாடுகள் எல்லாம் கோடி கோடியா வெள்ள நிவாரணம் தந்ததாக பேப்பர்லயும் டி.வி.யிலயும் போட்டுக்காட்டினாங்க.அது எல்லாம்பொய்யா?''

அது எல்லாம் உண்மை தான். ஆனால் நீங்க தமிழனாய் பிறந்தது தப்பாய்ப் போச்சே. அதுக்கு மேல நான் சொல்லக் கூடாது.'' என்று விடைகொடுத்தார் அதிகாரி சுரேஷ்.

# இவர்களுக்கு இல்லையா இன உணர்வு? கூடிவாழும் குணம் வேண்டும்

நீரும் நெருப்பும் ஒன்றை ஒன்று அழித்துக்கொள்ளும் இயற்கை குணமுடையவை. அதேபோன்று எண்ணெயும் தண்ணீரும் எத்தனை முயற்சி செய்தாலும் இரண்டறக் கலக்க முடியாதவை. இப்படி மாறுபட்ட கொள்கைகளையும், கடப்பாடுகளையும் கொண்ட பேரினவாதக்கட்சிகள் நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மை பலத்தைக் காட்ட ஒன்று சேர்ந்துள்ளன.

முன்னாள் பிரதமர் மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தனது தனித்துவத்தை இழந்து கம்யூனிஸ்ட்,சம சமாஜக்கட்சிகளுடன் இணைந்து ஆட்சியை கைப்பற்றினார்.

சந்திரிக்கா அம்மையார், தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி, அஷ்ரப்பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி என்பனவற்றையும் சேர்த்துக்கொண்டு பொதுசன ஐக்கிய முன்னணியை உருவாக்கினார்.

தொண்டமானும், ஹக்கீமும் விலகிய பின்பு மக்கள் ஐக்கிய முன்னணியின் மீது நம்பிக்கை இழந்த ஜனாதிபதி, இப்போது தனது நேர் விரோதியான ஜே.வி.பி.யுடன் கூட்டுச்சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கிவிட்டார்.

இது ஏன்? நாட்டை அபிவிருத்தி செய்யவா அல்லது புரையோடிப்போன இனப்பிரச்சினையைத் தீர்க்கவா?

எதுவும் இல்லை! இனவாதச்சக்திகளை எல்லாம் ஒன்று திரட்டி எதிரிகளை அழித்து ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். என்ற ஒரே அதிகார வெறியுடனே இந்தக் கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

பேச்சும் மூச்சும் சுவாசிக்கும் காற்றும் கூட தமிழர்களுக்கு விரோதமானவையாக வே இருக்க வேண்டும் என்ற சித்தார்ந்தத்தை கொண்ட சிஹல உறுமய கட்சி கூட இந்த இனவாதக் கூட்டுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது.




இவை எல்லாவற்றுக்கும் ஒரே குறிக்கோள். தமது ஒன்றுபட்ட சக்தியை வெளிப்படுத்தி எதிரிகளை அழித்தொழிப்பதே ஆகும். எதிரியின் பகைவன் எதிரிக்கு நண்பன் என்பது போல் இவை ஒன்றுபட்டு விட்டன.

இப்படியான ஒரு நிலையில் தமிழர்களைப் பாதுகாக்கும் வகையில் தமிழ் கட்சிகள் எல்லாம் ஒரே அணியில் திரண்டால் என்ன? தமது தனிப்பட்ட குரோதங்கள், மாறுப்பட்ட கருத்துக்கள் எல்லாவற்றையும் மூட்டைக்கட்டி ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒரே அணியில் ஏன் ஒன்று படக் கூடாது? தம்மைப்போல் மற்றும் ஒரு சிறுபான்மையினரான முஸ்லிம்களை ஏன் முன் உதாரணமாகக் கொள்ளக்கூடாது?

வடக்கு கிழக்கில் மாறுபட்ட கொள்கைகள் கொண்ட அரசியல் கட்சிகளும் ஏன் ஆயுதக் குழுக்களும் கூட ஓரணியில் திரண்டு தமிழ் தேசிய கூட்டணியை உருவாக்கி விட்டன. இம்முறை மேலும் சில அமைப்புகளும் ஐக்கியப்படவுள்ளன.

அதே போன்று கொழும்பில் மாண கணேசன், மலையகத்தில் ஆறுமுகம் தொண்டமான், சந்தரசேகரன், சதாசிவம் இராமையா, சந்தசாமி நாயுடு, முருகையா, சிவசாமி போன்றவர்களும் ஏன் இதைப்பற்றி சிந்திக்கக்கூடாது?

பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற கேள்விக்கு பதில் அளிப்பது போல் அமைச்சர் சந்திரசேகரன் பிள்ளையார் சுழியைப் போட்டுவிட்டார்.

எதையுமே நல்ல நோக்குடனும், பெருந்தன்மையுடனும் சிந்திக்க இவர்கள் ஏன் தயங்குகிறார்கள்? இவர்கள் எப்போதுமே தமது தலைமை, தமது சங்கம் என்ற இருமாப்புடனேயே அலைவது ஏன்?

தலைமைத்துவம் என்பது எனக்கு வேண்டாம் நல்ல நோக்குடன் எவரும் அதனை எடுத்துக் கொண்டு தமிழர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்க முன்வந்தால் அவர்களுக்காக எல்லா விட்டுக் கொடுப்புகளையும் செய்து ஆதரவு வழங்கத் தயார் என அமைச்சர் சந்திரசேகரன் பகிரங்கமாகவே கூறி உள்ளார்.

எந்த அரசாங்கம் வந்தாலும் நான் அமைச்சர், யார் ஆட்சியை அமைத்தாலும் அதற்கு நான் ஏஜண்ட என்று பதவிக்காக சமுதாயத்தை ஏலம் போடும் சில தலைவர்கள் சந்திரசேகரின் கூற்றை விமர்சிக்கின்றார்கள். அவரை யாழ்ப்பாணத்தில் போய் குடியேறும் படியும், மலையகத்தில் இருந்து விரட்டி அடிக்க வேண்டும் என்றும் முதுகெலும்பு இல்லாத சிலர் விமர்சனம் செய்கின்றனர். முப்பது ஆசனங்களைப் பெற முடியுமா? என்று கேலி செய்கின்றனர்.

ஏன் முடியாது? எந்த ஒரு தேர்தல் தொகுதியிலுமே வெற்றிபெறாத ஜே.வி.பி நாடாளுமன்றத்தில் 16 ஆசனங்களைப் பெறவில்லையா? ஒரே நோக்குடன் கட்சிக்குப் பெற்ற வாக்குகளின் மூலமே இன்று மூன்றாவது பெரும்பான்மைக் கட்சியாக வந்து விட்டனர்.

இதே போன்று வடக்கு – கிழக்கு, மலையகம், கொழும்பு என்று பேதம் பாராமல் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு ஒரே சின்னத்தில் போட்டியிட்டால் நாடெங்கிலும் பெறும் வாக்குகளின் மூலம் முப்பதுக்கும் கூடுதலான ஆசனங்களைப் பெறமுடியும் என்பது உறுதி.

எனவே மலையக தலைவர்கள் சுய நலவாதிகளாக இல்லாமல் பொது நோக்குடன் ஒன்றுபட முன்வரவேண்டும். அதுதான் நீங்கள் சமுதாயத்துக்கு செய்யும் பெரிய தியாகமாகவும் சேவையாகவும் அமையும். இது உறுதி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜனா"
- அஜித், சினேகா-



-நடிகை ஷெரின் அவரது
காதலர் ரோஷனுடன்-



# வருகிறார் சிம்ரன்

"உதயா" படத்தின் பாடல் காட்சிகளை முடித்துக் கொடுப்பதற்கு சிம்ரன் தனது கணவருடன் சென்னை வருகிறார். விஜய் — சிம்ரன் ஜோடியாக நடிக்கும் உதயா படத்தை பிரமிட் நடராஜன் கடந்த 5 வருடங்களாக எடுத்து வருகிறார்.

பூஜை முடிந்து, படப்பிடிப்பிற்குப் போனவர்கள் கதை சரியில்லை என்று பாதியிலேயே திரும்பி விட்டனர். கதையைச் சரிசெய்து விட்டுப் பார்த்தபோது, விஜய்யும், சிம்ரனும் வேறு வேறு படங்களில் பிஸியாகிவிட்டார்கள். ஒருவர் கால்ஷீட் கிடைக்கும்போது, மற்றொருவரின் கால்ஷீட் கிடைக்காமல் படம் தாமதமாகிக் கொண்டே வந்தது.

இதற்கிடையே படத்தின் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் லண்டன் பக்கம் சென்றுவிட படம் மேலும் தாமதமானது. ஒரு வழியாக படத்தின் பெரும்பான்மையான பகுதிகள் படமாக்கப்பட்ட நிலையில், சிம்ரன் தனது காதலர் தீபக்கை மணந்து கொண்டு மும்பை சென்றுவிட்டார். அதோடு இனி சினிமாவில் நடிக்க மாட்டேன் என்று ஒரு குண்டையும் தூக்கிப் போட்டார்.

சிம்ரனின் இந்த முடிவால், அவரது ரசிகர்களைவிட அதிகம் அதிர்ச்சியடைந்தது தயாரிப்பாளர் நடராஜன்தான். ஏனென்றால், விஜய் — சிம்ரன் ஜோடியாக நடித்துக் கொடுக்க வேண்டிய இரண்டு பாடல்கள் இன்னும் மீதமுள்ளன. இதனையடுத்து நடராஜன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி, படத்தை முடித்துக் கொடுக்குமாறு சிம்ரனுக்கு உத்தரவிட்டார். சிம்ரனும் தேனிலவு முடிந்ததும் நடித்துக் கொடுக்க ஒத்துக் கொண்டார்.

அதன்படி பெப்ரவரி 1ம் திகதி படப்பிடிப்பு தொடங்குகிறது. இதில் கலந்து கொள்வதற்கா[illegible] சிம்ரன் தனது கணவர் தீபக்குடன் சென்னை வருகிறார். படப்பிடிப்பு முடிந்ததும், மீண்டும் மும்பை திரும்புகிறார் சிம்ரன்.

# சிவப்பு விளக்கில் 'ரம்பா'

சிவப்பு விளக்கில் ரம்பா என்ற கவர்ச்சிப் படம் ஒன்று விரைவில் வெளியாகிறது. இதில் ரம்பா விலைமாது வேடத்தில் நடித்து பரவசப்படுத்தியிருக்கிறார். இதில் ரம்பா ஏகத்துக்கும் கவர்ச்சி காட்டியுள்ளார் என்று சொல்கிறார்கள்.

இந்தப் படம் விலைமாது சந்திக்கும் பிரச்சினைகள் பற்றியதாம். படத்தில் கவர்ச்சி மற்றும் கற்பழிப்புக் காட்சிகளில் நடித்து கலவரப்படுத்தி உள்ளாராம் ரம்பா. தெலுங்கு, இந்தி, தவிர தமிழிலும் இந்தப் படத்தை சிவப்பு விளக்கில் ரம்பா என்ற பெயரில் வெளியிடவுள்ளார்கள். அடுத்த மாதம் திரைக்கு வருகிறது இந்தப் படம்.

இந்த சூடான படத்தில் ரத்தி அக்னிஹோத்ரியும் (ரஜினியுடன் முன்பு கவர்ச்சியாக நடித்துக் கலக்கியவர்) நடித்துள்ளார். விகாஸ் என்பவர் (இவரை யாரு பார்க்கப் போறா) ஹீரோவாக நடித்துள்ளார்.

# சினி செய்[illegible]

காமிரா கவிஞர் பாலுமகேந்திராவின் [illegible]ஷனில் [illegible] நடிக்கும் ப்ரியாமணிக்கு அப்படத்தில் அவ்வளவாக பே[illegible] யதார்த்தமாக தோன்றுகிறாராம்.

* * *

ஏ.வி.எம் மின் புதிய படத்திற்காக ஹீரோ சூர்யா– ஹ[illegible] இணைந்திருக்கிறார்கள். படத்தில் வரும் ஜோதிகா கேர[illegible] பிடிக்கிறது என்பதை சஸ்பென்ஸாக வைத்திருக்கிறார்க[illegible]

* * *

'அன்பே உன் வசம்' படத்திற்கு பிறகு இளம் ஹீரோ[illegible] பார்க்காமல் 'அடிதடி' படத்தில் ஹீரோ சத்தியராஜுடன் [illegible] இப்படத்தில் சத்தியராஜ் தனது ஒரிஜினல் கெட்அப்[illegible] பளிச்சிடும் தலையுடன் நடிக்கிறார்.

* * *

'விருமாண்டி' படத்திற்காக விறுவிறு வேஷம் கட்டிய [illegible] வண்ணனின் டைரக்ஷனில் 'ரிமோட்' படத்திலும் நடிக்[illegible]

* * *

இளையராஜாவுக்கும் வைரமுத்துவிற்கும் ஏற்பட்ட [illegible] இருவரும் இணைந்து இன்று வரை பணியாற்றவில்லை[illegible] விழாவொன்றில் யுவனை பாராட்டி தனது பழைய நினை[illegible] பேசினார் கவிப்பேரரசு வைரமுத்து.

* * *


'கில்லி' படத்திற்காக நேரம் காலம் பார்க்காமல் நடித்[illegible] 'திருமலை' படத்தைத் தொடர்ந்து 'கில்லி' யையும் ஹிட்டாக்[illegible] உழைத்து வருகிறார்.

* * *

'கீப்ராங்க்' என்ற தமிழ் படத்திற்காக இயக்குனர் பாரதி[illegible] இணைந்திருக்கிறார் புதுமுகம் ப்ரியா.



"வீரநாச்சியார்"
- பிரபுதேவா, புதுமுகம் ரேகா-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ய்திகள்

...க்ஷனில் ...ரோ தனுஷ் உடன் இணைந்து
...வ்வளவாக மேக்கப் இல்லையாம். மிக மிக

* * *

...ரா சூர்யா– ஹீரோயின் ஜோதிகா இருவரும்
...ஜோதிகா கேரெக்டர் யாரைக் காதலித்து கைப்
...திருக்கிறார்கள்.

* * *

...இளம் ஹீரோயின் ரதி கொஞ்சமும் இமேஜ்
...தியராஜுடன் நடித்துக்கொண்டிருக்கிறார்.
...ல் கெட்அப்புடன் நடிக்கிறார். அதாவது

* * *

...வேஷம் கட்டிய நெப்போலியன் டைரக்டர் கார்
...திலும் நடிக்கிறார்.

* * *

...தும் ஏற்பட்ட ஊடாய் காரணமாக இவர்கள்
...ற்றவில்லை. ஆனால், அண்மையில் நடந்த
...பழைய நினைவுகளையும் ஞாபகப்படுத்திப்

* * *


...க்காமல் நடித்துக் கொண்டிருக்கிறார் விஜய்.
...யையும் ஹிட்டாக்க வேண்டும் என்று கடுமையாக

* * *

...க்குனர் பாரதிராஜாவின் மகன் மனோஜ் உடன்



"உள்ளம்"
- ப்ரியாமணி-



"அம்ப்பார்"
- ஜோன், பிபிஷாபாசு-

# பொங்கல் படங்களில் ஓடியது எது? ஓட்டப்பட்டது எது?

பொங்கல் படங்களில் யாரும் எதிர்பாராதபடி, விஜய்காந்த் நடித்த எங்கள் அண்ணா வசூலில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறது. பொங்கலையொட்டி கோவில், விருமாண்டி, எங்கள் அண்ணா, ஜெய், புதுக்கோட்டையிலிருந்து சரவணன் ஆகிய படங்கள் வெளியாகின. இவற்றில் கோவில் படம் 10ஆம் திகதியே வெளியாகிவிட்டது. சிம்பு தனது விரல் வித்தைகளும், தத்து பித்தென்று பேசும் பஞ்ச் வசனங்களும் இல்லாமல் அடக்க ஒடுக்கமாக நடித்திருந்ததால் படம் தப்பியது.

முதலில் வந்ததைப் போலவே, போட்ட காசையும் முதலில் எடுத்துக் கொண்டது. ஹரிஸ் ஜெயராஜ் இசையும், வடிவேலின் நகைச்சுவையும் படத்தைக் காப்பாற்றியதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையே வெளியான விருமாண்டி ஏ சென்டர்களில் வசூலை அள்ளியது. பி மற்றும் சி சென்டர்களில் கூட்டம் எதிர்பார்த்தபடி இல்லை. முதல் வாரத்தில் இருந்த ஏகப்பட்ட பரபரப்பு குறைந்துவிட்டதால், கூட்டமும் குறைய ஆரம்பித்துவிட்டது. வரும் நாட்களில் வசூல் மேலும் குறைய வாய்ப்புள்ளது. படத்தில் சிறைச்சாலை காட்சி மிக மிக நீளம் என்று புகார் உள்ளது. ரிலீஸ் ஆகியிருந்தாலும் பரவாயில்லை என்று கமல் தியேட்டர் தியேட்டராகப் போய் அந்தக் காட்சியை வெட்டுவது நல்லது.

தனுஷுக்கு புதுக்கோட்டையிலிருந்து சரவணன் (கொஞ்சம் சின்ன பெயராவச்சிருக்கக் கூடாது?) படம் ஒரு திருஷ்டிக் கழிப்பு. படத்தில் தனுஷ் ஒரு பொண்ணை இழுத்துக் கொண்டு, உலகம் சுற்றும் வாலிபன் எம்.ஜி.ஆர் போல் நாடு, நாடாக ஓடுகிறார். படம் பார்ப்பவர்களே மூச்சு வாங்க ஆரம்பித்து, வீட்டிற்குக் கிளம்பி விடுகின்றனர்.

தனுஷுக்காக வந்த கூட்டம் இரண்டு நாட்கள்தான் இருந்தது. அதன்பின் படம் அவ்வளவாக வசூல் இல்லை. தனுஷுக்கு இது முதல் தோல்விப் படமாக அமையும் என்கிறார்கள்.

பிரஷாந்த் இரு வருடங்களாக நடித்த படம் ஒரு வாரத்தைத் தாண்டுவதற்கு படாதபடு படுகிறது. ஜெய் ஜெயிக்கவில்லை. வழக்கமான பழி வாங்கல் கதையை வழக்கமான பாணியில் படமெடுத்ததால், பிரசாந்தின் மற்ற படங்களைப்போல இப் படமும் வழக்கமாகப் படுத்துக் கொண்டது.

உடலை முறுக்கோடு வைப்பதற்கு 3 மாதங்கள் வெளிநாடுகளில் செலவிட்டவர், கதையை முறுக்காக்குவதற்கு ஒரு மாதம் செலவிட்டிருக்கலாம். பிரசாந்த், பெட்டர்லக் நெக்ஸ்ட் டைம்.

எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் வெளியான எங்கள் அண்ணா படம், விநியோகஸ்தர்கள் எல்லோரையும் காப்பாற்றியுள்ளது. வடிவேலின் நகைச்சுவை இந்தப் படத்திற்குப் பெரிய பலம். ப்ரெண்ட்ஸ் படத்தை இயக்கிய சித்திக்தான் இப்படத்திற்கும் இயக்குநர். முந்தைய படத்தைப் போலவே, இதிலும் நகைச்சுவை, குடும்ப செண்டிமெண்ட், சண்டை என எல்லாவற்றையும் கலந்து ஒரு தட்டில் விருந்து கொடுத்திருக்கிறார். மற்றப் படங்களுக்கு இருந்த எதிர்பார்ப்பு இப் படத்திற்கு இல்லாததே, அதன் வெற்றிக்குக் காரணமாகி விட்டது.

அதே நேரம் பொங்கலுக்கு வந்த படங்களில் சூப்பர் ஹிட் என்று சொல்லுமளவிற்கு எந்தப் படமும் இல்லை என்பதே உண்மை. ஜெய்யும், புதுக்கோட்டையிலிருந்து சரவணனும் விநியோகஸ்தர்களின் கையைக் கடித்துவிட்டது. கோவிலும், விருமாண்டியும் விநியோகஸ்தர்களுக்கு லாபம் தந்திருந்தாலும் பெரிய அளவுக்கு ஏதும் அவர்களுக்குத் தேறவில்லை.

எங்கள் அண்ணாவைத் தான் நம்ம அண்ணா என்று விநியோகஸ்தர்கள் சொல்கிறார்கள். விஜய்காந்துக்கு பி, சி சென்டர்களும் எப்போதுமே பலமுள்ளவை என்பதால் அங்கும் லாபம் கொட்டுகிறது.

ஜெய் படம் சரியா போகவில்லை என்று வெளிப்படையாகவே சொல்லும் விநியோகஸ்தர்கள், விருமாண்டி மற்றும் புதுக்கோட்டையிலிருந்து சரவணன் படங்கள் அவ்வளவாக லாபம் தராததை வெளிப்படையாக சொல்ல மறுக்கிறார்கள். அமைதியாய் இருந்தால் கமல் மற்றும் தனுஷின் அடுத்த படங்கள் தங்களுக்கு குறைந்த விலைக்குத் தரப்படும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். விநியோகஸ்தர்களுக்குத் தான் ஜெய் கையைக் கடித்திருக்கிறது. ஆனால், படத்தை கொடுத்த விலைக்கு விற்றுவிட்டதால் தயாரிப்பாளரான பிரசாந்தின் தந்தை தியாகராஜனுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.



-தீபு-

சூப்பர்ஸ்டாரை தேசப்பிதா காந்தியோடு ஒப்பிட்டு சென்னையில் உள்ள முக்கிய இடங்களில் மெகா போஸ்டர் ஒட்டி ரஜினி பக்தர்கள் தங்களின் பக்தியைக் காட்டியுள்ளார்கள். ரஜினி பிறந்த நாள் அன்று ஜோலிவுட்டை இந்த மெகா போஸ்டர்கள் ஒர உலுக்கு உலுக்கியிருக்கிறது. பாவம காந்தியவாதிகள்!

***

வித்தியாசமான கேரெக்டரில் 'மச்சி' படத்திற்காக நடித்து வருகிறார் ஜூனியர் சிவாஜி துஷ்யந்த். படபிடிப்பு இன்னும் ஆரம்பமாகாததால் சிவாஜி ஃபிலிம்ஸ் தயாரிக்க மம்தா குல்கர்னி நடிக்கும் ஹிந்தி அவார்டு ஃபிலிமின் படப்பிடிப்பிற்கு வந்துவிடுகிறார். சித்தப்பா பிரபுவுடன் தனது நேரத்தை செலவழித்துக் கொண்டிருக்கிறார்.

***

'திருடா திருடி' படத்தைத் தயாரித்த கிருஷ்ணகாந்த், இனி தயாரிக்க உள்ள கிட்டத்தட்ட ஆறு புதுப்படங்களுக்காக ஹீரோ சிம்பு, தனுஷ் மற்றும் முன்னணி ஹீரோக்களை வளைத்து போட்டிருக்கிறார். எல்லாம் 'திருடா திருடி' தந்த மகா வசூல்தான் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ந.கேமசாளினி— பெரிய பளை.*

**கேள்வி:— மீசை முளைக்க முன்னர் காதலிக்கத் தொடங்கும் ஆண்களைப்பற்றி என்ன நினைக்கிறீர் பித்தா?**



பதில்:— காதலுக்கு மீசை ஒன்றும் அவசியமில்லைத் தான். ஆனால் கொஞ்சம் காசை கையிலே பார்க்க தொடங்கிய பின் காதலிப்பது நல்லது. இல்லாவிட்டால் மீசை வைக்க முன் வைத்த ஆசை தோசையாகிவிடும்.

*என்.ராஜா—வாழைச்சேனை.*

**கேள்வி:— பொம்பளைங்க சமாச்சாரம்— பொம்பளைங்க சமாச்சாரம் என்கிறார்களே... அப்படியென்றால் என்ன பித்தா?**

பதில்:— ஆம்பிளங்க சமாச்சாரம்— ஆம்பளங்க சமாச்சாரம் என்று சொல்கிறார்களே அவைகளெல்லாம் போக ஏது மீதியாக இருக்கிறதோ அவைகளெல்லாம் தான் பொம்பளங்க.......

*எஸ்.மனோகரன்—வவுனிக்குளம்.*

**கேள்வி:— காதலியிடம் கேட்கக்கூடாத கேள்வி என்ன பித்தா?**

பதில்:— என்னைத் தவிர உருப்படியான ஆள் வேறு எவரும் உனக்கு கிடைக்கவில்லையா? என்பது தான்.

*ஏ.சி.றயீஸ்— கஹட்டகஸ்திகிலிய*

**கேள்வி:—பித்தன் சார்! நம்ப,நம்ப ஏமாற்றும் உங்கள் நண்பர்களுடன் நீர் எப்பிடி நடப்பீர்?**

பதில்:— நம்ப, நம்ப ஏமாற்றும் நண்பர்களின் நட்பு நம்பளுக்கு தேவையில்லை என்று வெட்டி விடுவேன்.

*செ.கோபால கிருஷ்ணன்— கல்விளான்.*

**கேள்வி:— பித்தா! கருத்தடை பற்றி மனிதன் அறிந்திராவிட்டால்?**

பதில்:— உங்கள் முகத்துடன் ஊருக்குள்ளே பல பிள்ளைகள் உலா வந்திருப்பர்.

*எஸ். தர்ஷினி— மூதூர்.*

**கேள்வி:— பித்தா! அதிஷ்ட லாபச் சீட்டில் உங்களுக்கு ஒரு கோடி ரூபா கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதனை என்ன செய்வீர்?**

பதில்:—நான் உழைப்பை நம்புபவன். எனவே அதனை அப்படியே உங்களுக்கு அனுப்பி வைத்துவிடுவேன். (என்ன தொபுக்கபீர் என்று சத்தம் கேட்கிறது. மயங்கிவிழுந்து விட்டீரா?)



*வி.சாளினி— யாழ்ப்பாணம்.*

**கேள்வி:— பித்தா! காதல் எப்போது கசக்கும்?**

பதில்:— காதலி வாந்தியெடுக்கும் போது.

*சி.பிரியா— வந்தாறுமூலை.*

**கேள்வி:— பித்தா! எனது மாமியை கடிக்க வைக்கவென ஒரு நாயை சோறூட்டி வளர்த்தேன்... ஆனால் அது அவரை கண்டவுடன் வாலை ஆட்டுகிறதே...எனது மாமியை பழிவாங்க வேறு வழி ஒன்று சொல்லும் பித்தா?**

பதில்:— பேசாமல் புதிய செருப்புவாங்கி கொடும். காலை கடித்துவிடும்.

*ஏ.பிரதீபன்— திருவையாறு.*

**கேள்வி:— தற்போது சினிமாவில் அதிகம் சம்பாதிக்கும் நடிகர் யார் பித்தா?**

பதில்:— வேறு யார் விவேக் தான். உழைத்த பணத்தில் சென்னையில் உள்ள சாலக் கிராமத்தில் மிகப்பெரிய மாளிகை ஒன்று கட்டுகிறாராம். இலங்கை பெறுமதி மூன்று கோடி ரூபா. சினிமா உலகத்தவர் இவ்வளவு பெரிய வீட்டை இது வரை கட்டியதே இல்லையாம்.

*பி.ராதா— தெகிவளை.*

**கேள்வி:— இப்போ சினிமா பார்ப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து ரீ.வி.யில் தொடர்நாடகம் பார்ப்பவர்களின் எண்ணிக்கை கூடிவிட்டதே. இதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?**

பதில்:— முயல்தூங்க—ஆமைவென்றுவிட்டது.

*து.தணிகாசலம்— வத்தளை.*

**கேள்வி:— நீரிழிவு நோயுள்ளவர்கள் இனிப்பு பண்டம் எதனையும் சாப்பிடவே கூடாதா பித்தா?**

பதில்:— வீட்டிலே மனைவி உள்ள எவரும் தெரிவிலே பெண்களைப் பார்ப்பதேயில்லையா? உடல்நலத்தைக் கெடுக்காத வகையில் ... சும்மா கடைக்கண்ணால் ஒரு ஓரப் பார்வை பார்ப்பார்களே. அது போல் கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டுக்கொள்ளலாம். தப்பே இல்லை.

*சி.கயல்விழி— மட்டுவில்.*


**கேள்வி:— பித்தா! நடிகைகள் நாய் வளர்ப்பது ஏன்?**

பதில்:— வாய் இருந்தும் அவை பேசாததால்.

*எம்.வாகீசன்— பருத்தித்துறை.*

**கேள்வி:— பித்தா! எனது நண்பன் தினமும் காலையில் எழுந்து கோவிலுக்குப் போகிறானே அவனது பக்தியை நம்பலாமா?**

பதில்:— நண்பன்— குமரனை தரிசிக்க போகிறானா? அல்லது கோவிலுக்கு வரும் குமரிகளை தரிசிக்க போகிறானா தெரியவில்லையே கண்ணு...



*அ.நிர்மலா— சரசாலை.*

**கேள்வி:— பித்தா! கண்ணழகி, சிரிப்பழகி, தேன் போன்ற குரல் அழகி மீனாவை ஒரே ஒரு முறையில் நேரில் பார்க்க முடியுமா?**

பதில்:— இதற்காக அவரின் சொந்த ஊரான சைதாப்பேட்டையில் விண்ணப்பப்படிவம் விற்கிறார்கள். போய் வாங்குங்கள்.

## பித்தனின் கேள்வி

**கேள்வி— வெளிநாட்டு ஆடவர்கள் எவ்வளவோ மோசம் செய்த போதிலும் அவர்களையே இன்றைய பெண்கள் பெரிதும் விரும்புகிறார்களே! ஏன் பித்தா?**

### வாசகர் பதில்கள்

*கயல்விழி, வவுனியா.*

**வெளிநாட்டு ஆடவர்கள் என்ன மோசம் செய்கிறார்கள். அவர்கள் இல்லை என்றால் எமது நாடு இவ்வளவேனும் முன்னேறியிருக்காது.**

*சங்கரன் — சுன்னாகம்.*

வெளிநாட்டு ஆடவர்கள் இலங்கையில் உள்ள ஆடவர்களைக் காட்டிலும் புத்திசாலிகள் என்றே சொல்லவேண்டும் ஏனெனில் பணத்தைக் கொடுத்து பெண்ணை எடுக்கிறார்கள் அல்லவா?

*சி. முகுந்தன் — மல்லாவி.*

தமிழரின் தாயகப் பணிக்கு அவர்கள் எவ்வளவு உதவிகளைச் செய்துள்ளார்கள். எனவே நாம் அவர்களை அவமதிக்கக் கூடாது.

*பிரியா — தெஹிவளை.*

மோசமானவர்களானாலும், வேசம் போடத் தெரியாதவர்களாக அல்லவா இருக்கின்றார்கள்.

*தர்சிகா — யாழ்ப்பாணம்.*

வெளிநாட்டில் உள்ளவர்களால் தான் எமது தேசம் தற்போது தலை நிமிர்ந்து நிற்கின்றது. ஆனால் இங்குள்ள அவர்களின் உறவினர்களே அவர்களை தீயவர்களாக்குகின்றார்கள்.

*சிந்து— சாவகச்சேரி.*

**கேள்வி:—தனது தாயையும், தந்தையையும் எந்தக் குறையும் இன்றி காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஆண்களும் இருந்திருந்திருந்தாலும் அதிகம் இருக்கிறதா? பெண்களுக்கு அதிகம் இருக்கிறதா?**

பதில்:— பெற்றோர் மீது அக்கறை ஆண்— பெண் இருபாலாருக்குமே இருக்கிறது. ஆனால் பெண்கள் மட்டுமே தாய் உணர்வோடு பெற்றோரை அதிக அக்கறையுடன் கவனிக்கிறார்கள். ஒன்றிரண்டு இடங்களில் ஆண்களைத் திருந்தினாலும் பெரும்பாலும் பெண்களே என்பது அனுபவத்தில் கண்ட உண்மை.

*சுதா. யாழ்ப்பாணம்.*

**கேள்வி:— தடுமாற்றத்தைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?**

பதில்:— தடுமாற்றம் வருவது எல்லோருக்கும் இயல்பே. தடுமாற்றத்தை தடுக்க முதலில் பயத்தைப் போக்கி தன்நம்பிக்கையை வளர்க்க வேண்டும். எதிலும் நிதானமான போக்கு இருந்தால் தடுமாற்றம் வராது.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்வி களுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.



இந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை பெப்ரவரி14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

*புவிதா— திருநெல்வேலி கிழக்கு.*

**கேள்வி:— ஜனாதிபதி செய்து கொண்ட கூட்டணி ஒப்பந்தம் எவ்வளவு காலம் நீடிக்கும் பித்தா?**

பதில்:— ஐக்கிய தேசியக் கட்சியில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை உறுதியாக உள்ளவரை நீடிக்கும்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே...நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள்பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.59 | | | | | | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | | | | | | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | | | | | | வணக்கம் தமிழகம் | காலைக்கதிர் |
| 7.30 | | | | | | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | களம் | ஆலோசனை நேரம் | சந்தனக்காற்று | இப்படிக்கு நீங்கள் | சங்கீத மேடை | குட்டி சுட்டி | திரைவானம் |
| 8.30 | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 9.00 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | பூஞ்சோலை | ஸ்டார் சமையல் |
| 9.30 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | ஜீபூம்பா | நகைச்சுவை நேரம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | இளமை புதுமை | களம் | டொப் 10 மூவிஸ் |
| 10.30 | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | ஆலோசனை நேரம் | ஹிட்ஸ் பைவ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | சினி சாய்ஸ் | சந்தனக்காற்று |
| 11.30 | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | சினி சாய்ஸ் | நம்ம நேரம் |
| 12.00 | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | ரிலாக்ஸ்டைம் | ஹிட் லிஸ்ட் |
| 12.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | ரிலாக்ஸ்டைம் | ஹிட் லிஸ்ட் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | மை லிட்டில் போனி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சின்னசின்ன ஆசைகள் | ஹிட் லிஸ்ட் |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி—மென் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | சின்னசின்ன ஆசைகள் | ஹிட் லிஸ்ட் |
| 5.00 | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | வீக் என்ட் மூவி | சப்த ஸ்வரங்கள் |
| 5.30 | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | வீக் என்ட் மூவி | இப்படிக்கு நீங்கள் |
| 6.00—6.15 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | 6.00 பாடல்கள்/ 6.15 இளந்தளிர் | இளமை புதுமை | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | வீக் என்ட் மூவி | வேலன் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | வீக் என்ட் மூவி | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை(நாடகம்) | உதயம்(நாடகம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச குடும்பத்தை துரத்திய டயானா ஆவி

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸின் மனைவியான இளவரசி டயானா தனது காதலன் டோடியுடன் பாரிஸ் நகரில் கார் விபத்தில் பலியாகி 6 வருடங்கள் ஓடிவிட்டன.

அன்று முதல் டயானாவின் ஆவி பல்வேறு உருவங்களில் அரச குடும்பத்தைத் துரத்தத் தொடங்கியது. சார்ள்ஸ் மீதும் அரச குடும்பத்தின் மீதும் பல்வேறு அவச்சொற்கள் அள்ளி வீசப்பட்டன. இங்கிலாந்துக்கு அரச குடும்பம் தேவையா? என்றெல்லாம் கருத்துக்கள் வந்தன.

காலப்போக்கில் இவை மறைந்து போயின. எப்போதும் அமைதி காத்து வந்த சார்ள்ஸ் தனது பொது வாழ்க்கையில் முன்பு போலவே இளவரசருக்கு உரிய கம்பீரத்துடன் வலம் வந்து கொண்டிருக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு கூட இந்தியா வந்து அவர் மிகுந்த வரவேற்புக்கு மத்தியில் கிராமப் பகுதிகளுக்கு கூட சென்றுவிட்டு திரும்பினார்.

ஆனால், டயானாவின் கடைசி காதலரான டோடியின் தந்தை முகமது அல்பயத் தனது புத்திர பாசம் காரணமாக டயானா மரணத்தை மீண்டும் கிளறினார்.

''தனது காதலி கமீலா பார்க்கரை மணப்பதற்கு வசதியாக டயானாவையும், என் மகனையும் சார்ள்ஸ் சதி செய்து தீர்த்துக்கட்டி விட்டார்'' என்ன புலம்பிக் கொண்டிருந்தார் முகமது அல்பயத். கார் டிரைவர் குடிபோதையில் கார் ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டது டயானாவும், அவரது காதலரும் விபத்தில் பலியனார்கள் என்று பாரிஸ் நகர பொலீஸ் அறிவித்தாலும், அதனை டோடியின் தந்தை ஏற்கவில்லை.

நடந்தது கொலைதான் என்று டோடியின் தந்தை கூறினார். இதற்காக இங்கிலாந்து அரண்மனைவாசிகளை பிடித்து தனக்கு ஆதரவான ஆதாரங்களை சேகரிக்கத் தொடங்கினார்.

சார்ள்ஸுடன் அரண்மனையில் வசிக்கும் போதே எழுந்த கருத்து வேறுபாடுகளால், டயானா அரண்மனை சமையல் காரரிடம் கோபத்தில் எழுதிக்கொடுத்த கடிதங்கள் இன்று பூதாகரமாக கிளம்பி டோடியின் தந்தைக்கு உதவி உள்ளன.

அதில் ஒரு கடிதத்தில்தான் சார்ள்ஸ் என்னை கார்விபத்து மூலம் கொல்ல சதி செய்கிறார் என்பதாகும்.

டயானாவின் சமையல்காரர் பவுல் பாரல் சமீபத்தில் டயானாவின் அந்தரங்க வாழ்க்கை பற்றி எழுதி வெளியிட்ட பரபரப்பான புத்தகத்தில் இந்த கடிதம் இடம் பெற்றிருந்தது.

ஆனால், அந்த கடிதத்தில் சார்ள்ஸ் பெயர் மட்டும் மறைக்கப்பட்டு இருந்தது. ஆனால், டோடியின் தந்தை அந்த கடிதத்தை பெரும் தொகை கொடுத்து சமையல்காரரிடம் இருந்து வாங்கி லண்டன் பத்திரிகைகளுக்கு காட்டினார்.

லண்டனில் வெளிவரும் சன், மிரர் பத்திரிகைகளுக்கு அரச குடும்பத்து அந்தரங்கம் என்றாலே அல்வா சாப்பிடுவது போலத்தான்.

கடிதத்தைப் பார்த்து மிரர் பத்திரிகை அதனை அப்படியே போட்டு டயானா மரணத்திற்கு சார்ள்ஸ் சதி செய்ததாக செய்தி வெளியிட்டு விட்டது.

விளைவு இங்கிலாந்து முழுவதும் பரபரப்பு தொற்றிக்கொண்டது.

இதனை தொடர்ந்து ஸ்கொட்லாந்யார்ட் பொலீஸ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது.

ஆனால், விசாரணை எப்படி நடந்தாலும் உண்மையில் டயானா இறந்தது கார் விபத்தில் தான் என்பது பலரது கருத்தாகும். ஏனென்றால்



தற்போது டயானா எழுதியதாக கூறப்படும் கடிதம் சார்ள்ஸுடன் விவாகரத்து முடிவான நாளில் இருந்து 2 மாதம் கழித்து எழுதப்பட்டதாகும். அப்படி இருக்கும் போது, டயானா சார்ள்ஸை சிக்கலில் மாட்டி விட வேண்டும் என்றே எழுதி இருக்கலாம் என்று கூட கருத இடமுள்ளது.

மேலும் சார்ள்ஸ் – டயானா ஜோடி எல்லோராலும் விரும்பப்பட்டாலும் கூட இரண்டு பேருமே தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் உண்மையானவர்களாக இருந்தது இல்லை.

சார்ள்ஸுடன் இருக்கும் போது டயானா குதிரை சவாரி பயிற்சியாளர் ஹெவிட் என்பவருடன் தொடர்பு வைத்து இருந்தார் என்ற பேச்சு அடிபட்டது.

இதன் விளைவாகவே சார்ள்ஸ், கமீலா பார்க்கரை நாட ஆரம்பித்தார் என்றும் அவரை வெறுப்பேற்ற டயானா டோடியுடன் பழகத் தொடங்கினார். பொது இடங்களுக்கு போனார் என்றும் செய்திகள் வெளியாயின.

டயானா இறந்த போது, அவர் கர்ப்பமாக இருந்தார் என்று கூட கூறப்பட்டது.

டயானா மறைந்ததால் ஏற்பட்ட பிரச்சினைகள் இங்கிலாந்து அரச குடும்பத்தை ஓரளவு பாதித்தது என்றாலும் மக்களிடையே அவர்களது செல்வாக்கு குறையவில்லை.

சார்ள்ஸ் இப்போது கமீலா பார்க்கருடன்தான் பழகி வருகிறார். ராணி எலிசபெத்தும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்.

கமீலா பார்க்கரை அதிகாரப்பூர்வமாக மணந்தால் அரச குடும்பத்தில் வாரிசு பிரச்சினைகள் வரும் என்பதால்தான் அதிகாரப்பூர்வமற்ற தொடர்பாக இவர்களது மணவாழ்க்கை நீடித்து வருகிறது. சார்ள்ஸின் மகன்கள் வில்லியம்ஸ், ஹாரி ஆகியோரும் இதனை ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

டயானா மரணம் பற்றிய விசாரணை முடிவு அறிவிக்கப்பட்டபோது கூட சார்ள்ஸ் தங்கி இருந்த இடத்திற்கு ஏராளமான ஆதரவாளர்கள் வந்து ''சார்ள்ஸ் கவலைப்படாதீர்கள் நாடே உங்கள் பக்கம் இருக்கிறது'' என்று கூறி உற்சாகப்படுத்தி உள்ளனர். சார்ள்ஸும் இதைப்பற்றி கவலைப்பட்டதாக தெரியவில்லை. இதுபற்றி கருத்துக் கூறாமல் தொடர்ந்து பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்றுக் கொண்டிருக்கிறார்.




### சிலையில் எழுத்து!

நீள் நிலம் கொடிதெனினும்
நீ பாதம் பதித்த நிலமினிது.
பூந் தென்றல் கொடிதெனினும்
நீ பேசும் போதினிது.
சுடு வெயிலும் குளிர்ந்தது,
நீயெனைப் பார்த்துச் சென்ற போது.
வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத
பாஷைகளால் புரிய வைக்க முடியாத
உயிரினிய காதலின்று
உயிர் குடிக்கும் மதுவானதேன்?
சீரிய சிந்தனைகளிற்கெல்லாம்
கூரிய வாளானதேன்?
தேன் குடிக்கும் வண்டாய்
தேடித் தேடி வந்தேனே –
தேன்களுக்கெல்லாம் கட்டித் தேனை
மூடி மூடித் தந்தாயே,
அப்போதெல்லாம் தேடினேன் –
நான் தொலைந்த இடத்தை.
இராவணன் தூக்கி
சென்ற உன்னை
சிறையெடுக்க முனைந்த என்னை
குடும்ப விலங்கிட்டு
சிறைப்பிடித்து விட்டனர்.
இப்போதும் நான் தேடுகிறேன்.
உன்னையல்ல –
அந்தக் கால நினைவுகளை!
இளமையிற் கல்வி மட்டுல்ல –
இளமையில் முறிந்து போன
காதலுங்கூட
சிலையில் எழுத்துத் தான்!

*அகியோபி.*

### சூரியனாய் சுட்டெரிக்காமல்...

உன் வார்த்தைகள்
கத்தியின் முனையை விட
அதிக கூராய்
அதிகமான கூராய்
மனத்தின் காயத்தை
மேலும் ரணப்படுத்துகின்றன.
அதை விட உன் மௌனம்
ஆயிரமாயிரம் ஏவுகணைகளாய்
இதயத்தை
சல்லடைபோடுகின்றன.
தாங்க முடியவில்லையடி
என்னால்!
தயவு செய்து
என்னை நீ தென்றலாய்
வருடாவிட்டாலும்
பரவாயில்லை.
சூரியனாய்
சுட்டெரிக்காமலாவது இரு!

*தாட்சாயினி குலசிங்கம்.*

### உன் பதில் என்ன?

இளநீல வானம்...
மென் காற்று...
செஞ்சூரியன்...
பசும் புற்றரையென
வர்ணக் கலவையின்
தூறலுடன் என் தனியுலகம்
ஒளிர்வுடன் சுழலுகையில்
நீ வந்தாய்!
வந்த பின்
காத்துக்கிடக்கிறது
அகக் குளம்
கனவுக் குமுழ்களுடன்!
ஒரு தென்றலின்
தொடர்பாய் பழைய நினைவுகள்
மனம் வருட...
இதயமோ சிலுவையில்
மரிப்பினை நோக்கி!
புதுக்காவியமாய்
புன்னகை நீ பூக்க–
அதில் நான் தேட ,
காலம் நிறமிழந்து
சருகாய் உதிர,
நீயும் நானும்
தனித் தனிப் பாதைகளில்!
சேரிடம் எங்கே?
முடிவிலியில் தானோ?
பதில் கூறு!

*ரீ.துசி.*

### நினைப்பு

நினைத்துக்கொண்டே
இருப்பேன் என
சொல்லி மறைந்தாய்.
அதற்காக இப்படியா...?
தும்மித் தும்மி
இழைத்துப்போகிறேன் நான்!

*கு.தவசீலன்–*
*விசுவமடு.*

### தடங்கள்

சாலையோரப் பூங்காற்றே,
நீ நடந்து சென்ற
பாதை எல்லாம்
நான்தவழ்ந்து செல்கிறேன்.
ஏன் தெரியுமா?
உன் பாதம்
பதித்த தடங்களை
அழிப்பதற்கல்ல!
என் உயிர் உள்ளவரை
பாதுகாக்க!

*ரமேஸ்குமார்*
*யாழ்ப்பாணம்.*

### மேகம்

சமுத்திரத்தின் மேல் ஓர்
அழகிய நீரோட்டம்!

### பணம்

உறவுகளை ஒட்ட
வைக்கும் பசை.

### ஐ லவ் யூ

காதல் என்ற
விடைக்கான
சமன்பாடு!

### கவிதை

யாரும் விதைக்காமல்
இதயத்தில் விளையும்
சொற்போர்!

### வெண்ணிலா

காலக் கணக்கில்
ஒளிந்து விளையாடும்
சுட்டிக் குழந்தை!

*எஸ்.மோகன்.*
*புதுக்குடியிருப்பு.*

### நிரந்தர நித்திரை

கண்ணுறங்கும் போதும்
உன்
உருவத்தையே–என்
நெஞ்சினுள்
நிரப்பிக்கொள்கிறேன்.
ஏனெனில்
நித்திரை
நிரந்தரமாகிப் போனால்
என் கடைசி நிமிடமாவது
உன் நினைவு இருக்கட்டும்
என்று தான்!

*இ.மைதிலி*
*கிளிநொச்சி.*

### காணி நிலம் வேண்டாம்

காலமெல்லாம் கஷ்ரப்பட்டாலும்
கால் வயிறு கஞ்சியில்லை.
எஞ்சியுள்ள மூக்குத்தியும்
மூத்தவனின் படிப்பும்
காலாவதியாகி
கடனில் மூழ்கியும்
கைகொடுக்க யாருமில்லை.
துடுப்பில்லாத தோணியில்
துவண்டு கிடக்கும்
எங்களுக்கு –
காணி நிலம் வேண்டாம்.
கவலையில்லாத கஞ்சியே
வேண்டும்!

*பாலா. சங்குப்பிள்ளை*
*அட்டன்.*

### இரவுப் பொழுது

மனசின் மடிப்புக்குள்
எல்லையற்ற நினைவுகள்
விரிந்து கிடக்கும்.
விழிமடல்கள்
மெல்லத் திறந்து மூடும்.
நினைவலைகள்
நுரை தள்ளி
கரை வந்து மீளும்.
சாளரத்தினூடே பனிக்காற்று
உடலைத் துளைக்கும்.
புதைந்து கிடக்கும்
அவள் முகம்
இடைக்கிடை சிரித்து நிற்கும்.
பசுமையான நினைவுகள்
மீண்டும் முளைவிடும்.
கண்களின் ஓரங்களில்
நீர் கசியும்.
அப்போதெல்லாம்
அனலிடை விழுந்த புழுவாய்
உள்ளம் துடிக்கும்.
மனம் வெம்பி அழும்.
கண்ணீர் இமைகளூடே
வழிந்து ஓடும்.
மனதைத் திடப்படுத்தி
நாட்குறிப்பேட்டில் உள்ள
அவள்படத்துக்கு சத்தியம்
செய்வான்
''உன்னை அடைவேன்'' என்று!

*றோம் ஜெனிவா*
*மன்னார்.*

### வீரத்தாய்

அக்கிரமத்தின் பிடியில் சிக்கி
அழிந்து போன தன்
மகனுக்காக அழவில்லை அவள்.
தன் நலம் வெறுத்து
தன் இன விடிவிற்காய்
மார்பிலே குண்டேந்தி
மாண்டு போன மறவருக்காய்
அவள் கண்களில் இருந்து வழிவது
வெறும் கண்ணீரல்ல– இதுவே
இவ் வீர விருட்சத்தின்
உரமாகும்!

*கலையின் தோழன்,*
*ஆழியவளை.*

### மது

மனிதனுக்குள் புகுந்து
கொள்ளும் மிருகம்.

### மாது

மயங்க வைக்கும்
மனித மாத்திரை.

### மனிதம்

மரணித்துப் போகும்
மனிதப் பண்பு.

### மரணம்

மறுக்க முடியாத
மர்மப் பரிசு.

### நினைவெப்படித் தப்பும்?

உறக்கம் கொஞ்சம்
தொலைந்திருந்த
அந்த நாட்கள்...
உணர்வுகளுள்
மீண்டுமொரு
இளமை பூக்கச் செய்யும்
இன்பப் பாக்கள்.
முடக்கு வாதம்
கட்டிப் போட்ட
கால்களுக்கு
நடப்பதற்குத் துணையாக
ஊன்று கோலாக – இன்னும்
அவளது நினைவின் சாரல்கள்.
மடத்தில் பெயரெழுதி
மறைந்திருந்து பார்த்ததும்,
வைரவர் முடக்கில்
மறித்துக் கதைத்ததும்,
இன்னும் பசுமையாய் இருக்க –
நினைவெப்படி
தப்பிப் போகும்?
நூற்றாண்டு தாண்டியின்று
கலவிக்காய் காதலித்து
காதலிக்காய்
துணியவிழ்த்தோடும் பையன்கள்
உங்களுக்கெங்கே புரியும் இது?
செத்துப்போக நினைத்தாலும்
அன்பைக் கலந்தவள் தந்த
திணையருசிச் சோறும்
குரக்கன் களியும்
ஒடியல்பிட்டும் – எனை
இத்துப் போக விடுதில்லையே!
காலன் காலடி என்று வரும்?
அன்று வரை
அவள்சுகமிருக்கும்
மனதில்!

*வே.கிருபதாசன்*
*கொழும்பு – 06.*

### பிரியலானேன்

மெல்லிய பூந்தென்றலின்
மோதலில் – உன்
மென் மலர் மேனி உதிர்த்து
என் உள்ளத்தில்
நிறைவாகி
ஊறி வரும் உணர்வாகிய
உயிர் ஓவியம் நீ!
புன்னகையுடன் உரையாடி
புது இன்பம் என்னுள்ளே
பூக்க வைத்த நீ –
இன்று மறுத்தாய்
சிறகொடித்த வார்த்தையால்!
சித்தம் கலங்கியது.
சிந்தை குமுறியது.
செயல் மறந்து
பித்துப் பிடித்தவனாய்
காதல் கடலில் மூழ்கி
பிரியலானேன்.

*துரைராஜி ரிஷி,*
*கொட்டகலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகளும் விடைகளும்

1. கூவி அழைப்பான் கூடி உண்ணுவான் அவன் யார்? காகம்
2. அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை அது என்ன? சிலந்தி
3. கண்ணீர் விட்டே கடைசிவரை ஒளிதருவான் அவன் யார்? மெழுகுவர்த்தி
4. ஆட்டுவித்தால் ஆடாமல் இருக்காது. அது என்ன? ஊஞ்சல்
5. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன? சிரிப்பு
6. வீடுவாசல் காப்பான் விசுவாசமாய் இருப்பவன் கடிக்கவும் மாட்டான் குரைக்கவும் மாட்டான் கதவைஒட்டிக் கிடப்பான் அவன் யார்? பூட்டு
7. தலையைச் சீவினால் நாக்கை நீட்டுவான் அவன் யார்? பென்சில்
8. வெளிச்சத்தில் தொடர்வான் இருட்டில் மறைந்திடுவான் அவன் யார்? நிழல்
9. தூக்கம் வந்தால் தானாக மூடும் கதவுகள் அவன் யார்? கண்கள்
10. அழைக்கும் போது உரக்க குரல் கொடுப்பான் பேசும் போது காதுக்குள் கிசுகிசுப்பான் அவன் யார்? தொலைபேசி

சாருஜா குகதாஸ்
கொழும்பு இந்துக் கல்லூரி

# பொன் மொழிகள்

1. கடவுளைப் புகழ் மக்களை நேசி.
2. மக்களோடு சமாதானமாக வாழ் உன் பாவங்களோடு சண்டை செய்.
3. பொய் சொல்லிப் பரிசு பெறுவதை விட உண்மையைச் சொல்லி துன்பப்படுவது மேலானது.
4. பட்டாடை அணிந்து நரகம் செல்வதை விட கந்தை அணிந்து சுவர்க்கம் செல்வது மேலானது.
5. கடவுளை நோக்கி ஒருவன் ஒரு அடி நடந்தால் கடவுள் அவனை நோக்கி ஓடி வருகிறார்.
6. காரியங்களைத் திட்டமிடுபவன் மனிதன். அவைகளை நிறைவேற்றுபவன் இறைவன்.
7. ஆத்மாவின் நோய்களே பாவங்கள்.
8. இவ்வுலகில் கடமைப்பாதையே மறு உலகில் சுவர்க்கத்தின் பாதை.
9. அநாதையின் கண்ணீர் ஆண்டவனிடம் செல்கிறது.
10. நல்லவர்களோடு சேர்ந்தால் நாய்கும் பகுத்தறிவு தரும்.

ஏ. அகல்யா
இந்து மகளிர் கல்லூரி

# சிறார்களின் கைவண்ணம்



க.சயந்தன்
தரம் 08
கிளி/ஜெயபுரம்
அ.த.க.பாடசாலை,
பூநகரி.



சி.துஷானி
தரம்9
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.



ந.பிரியா
தரம் 10
நெடுங்கேணி ம.வித்.



ச.சதீகரன்
தரம் 10
கிளி.திருவையாறு
மகா.வித்தியாலயம்.

# நரியும் கழுதையும்

காட்டு இராஜாவான சிங்கம் தனது பிரதம அமைச்சராக ஒரு நரியை நியமித்திருந்தது. ஒவ்வொருநாளும் சிங்கம் தனது உணவுக்காக மிருகங்களை வேட்டையாடும். மிகுதியை நரிக்குச் சாப்பிடக் கொடுக்கும்.

ஒரு நாள் சிங்கத்திற்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. எனவே அது அன்று வேட்டைக்காக எங்கும் செல்லவில்லை. அது தனது அமைச்சரை அழைத்து. ''அமைச்சரே இன்று எனக்கு வேட்டையாட வெளியே செல்ல முடியாது. அத்துடன் கடுமையான பசி வேறு வயிற்றைக் கிள்ளுகிறது. நீ போய் ஒரு மிருகத்தை இந்தக் குகைக்கு அழைத்துவா! நான் கொன்று சாப்பிடுகிறேன்'' என்றது.



நரி தனக்குள்ளே முணுமுணுத்தது. ஒரு மிருகமும் சிங்கத்தின் குகைக்கு அழைத் தால் வராது எப்படியா வது மிருகம் ஒன்றைக் கொண்டுபோயே தீர வேண்டும். இல்லாவிட் டால் சிங்கத்திடமிருந்து தப்ப முடியாது. இதற்கு என்ன செய்யலாம் என மீண்டும் மீண்டும் யோசித்தது. இவ்வாறு யோசித்துக் கொண்டிருந்த நரியின் மூளையில் தந்திரமான யோசனை ஒன்று உதித்தது.

இந்த காட்டில் உள்ள மிருகங்களில் முட்டாள் தனமான மிருகம் கழுதை ஒன்றுதான். எனவே கழுதையைத் தான் இன்று அழைத்துச் செல்லவேண்டும் என்று எண்ணி ஒரு கழுதையிடம் சென்றது.

அது கழுதயைிடம் ''நண்பா நான் ஒரு நல்ல செய்தி ஒன்றை உனக்குக் கூறவே இங்கு வந்துள்ளேன். சிங்கத்துக்கு பிரதம அமைச்சர் நான். சிங்கத்துக்கு ஒரு செயலாளர் தேவைப்பட்டது. அதற்கு நான் தான் உனது பெயரை சிபாரிசு செய்துள்ளேன். எனவே சிங்கம் உன்னை கையோடு அழைத்துவரச் சொன்னது'' என்று கூறியது.

கழுதை மிகவும் சந்தோஷத்துடன் ''மிகவும் நன்றி நண்பா! நாம் இருவருமே சிங்கத்தின் தோழர்கள். என்னை இனி யாரும் முட்டாள் என்று கூற பயப்படுவார்கள். இது எங்கள் இனத்திற்கு கிடைத்த வெற்றி. அதற்காக மீண்டும் நான் உனக்கு நன்றி கூறுகிறேன். வா செல்லுவோம் என்று கூறி நரியுடன் சென்றது.

மிகவும் பசியுடன் நரியின் வருகைக்காக காத்திருந்த சிங்கம் கழுதை குகை வாசலை நெருங்கியவுடன் அடித்துக் கொன்றுவிட்டது. பின்பு நரியைப் பார்த்து ''அமைச்சரே நான் ஆற்றுக்குச் சென்று நீர் அருந்திவிட்டு வருகிறேன். இந்த வேட்டையாடிய விலங்கை கவனமாகப் பார்த்துக்கொள்'' என்று கூறிச் சென்றது.

நரிக்கும் சரியான பசி. சிங்கம் வரும் வரை இருக்க வேண்டுமே என்ன செய்யலாம் என்று யோசித்த நரிக்கு ஒரு கபட எண்ணம் தோன்றியது. அது உடனேயே கழுதையின் மூளையை எடுத்துச் சாப்பிட்டு விட்டு அமைதியாக இருந்தது.

நீரருந்திவிட்டு வந்த சிங்கம் வேட்டையாடிய கழுதையை புசித்த பின்பு மீதியாக உள்ள இறைச்சியை பார்த்தபடி நரியாரிடம் ''அமைச்சரே இந்தக் கழுதையின் மூளை எங்கே'' என்று கேட்டது.

நரி சிரித்தபடியே ''மகாராஜாவே மூளையா? கழுதைக்கு மூளை இல்லையே! மூளை இருந்தால் இப்படி வந்து அகப்படுமா?'' என்று கூறிவிட்டு ''இந்தக் காட்டிலேயே உள்ள விலங்குகளில் மூளையில்லாத விலங்கு கழுதை மட்டும் தான்'' என்று கூறியபடி தனது பங்கை சாப்பிட ஆரம்பித்தது.

மாதெனியா ரவி,
லஸ்ஸனகம.

# அதிசய உண்மைகள்

1. உலகில் மிக நீள மான சுரங்கப் பாதை ஜப்பானில் உள்ளது.
2. மனித மூளை தனது ஆயுட் காலத்தில் பத்துக் கோடி செய்திகளை சேமித்து வைக்கும் திறனைக் கொண்டது.
3. திமிங்கிலத்தின் வாயில் சுவை நரம்புகளே இல்லை
4. குரங்குகள் மற்றைய பிராணிகளை விட அதிகமாக மூளை வளர்ச்சி பெற்றவை.
5. முதல் முதலில் காகிதத்தை உருவாக்கியவர் சீனாவைச் சேர்ந்த சாய்லூன் என்ற அறிஞர்.

தி.சார்ங்கள், கல்வியங்காடு

# நம் நாட்டுத் தகவல்கள்

01. இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க அவர்களின் சர்வதேச ஆலோசகர் யார்?
லக்ஷ்மன் கதிர்காமர்
2. இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் யார்?
காமினி லொகுகே
3. இலங்கை அரசின் சிரேஷ்ட சமாதானப் பேச்சாளர் யார்?
ஜீ.எல்.பீரிஸ்
4. அண்மையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளராகத் தெரிவானவர் யார்?
வி.ராதாகிருஷ்ணன்
5. தேசிய சேமிப்பு வங்கி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
1972
6. இலங்கையின் 7 ஆவது உயரமான நீர்வீழ்ச்சி எது ? இது எங்கு அமைந்துள்ளது?
கரந்த எல்லை வீழ்ச்சி - பெல்மடுல்லை

சுமையா மொஹமட், ஸரீனாவிலா
திக்குவலை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வித்தியாசமான சேமிப்பு



ஓட்டை விழுந்த பாத்திரத்தில் தண்ணீர் சேமித்து வைக்க முடியுமா? என்று கேட்டால்... ஹலோ.. என்ன கிண்டல் பண்றீங்களா? என்று முறைப்பீர்கள்.

ஆனால், ஓட்டைகள் நிறைந்த ஒரு சதுர வடிவத்தில் மின்காந்த அலைகளை சேமித்து வைக்க முடியும் என்கிறார்கள் ஜப்பான் நாட்டின் ஒசாகா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

மின்காந்த அலைகளை சேமித்து வைக்கும் திறன்கொண்ட சதுர வடிவம் (கியூப்) 27 மில்லிமீற்றர் அளவு கொண்டது. (படத்தைப் பார்க்கவும்) பொக்சிலின் ரெசின் மற்றும் டைட்டானியம் ஆக்சைட் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சதுர வடிவத்துக்குள் செலுத்தப்படும் மின்காந்த அலைகளை ஒரு வினாடியில் 10 இல் ஒரு பங்கு நேரம் சேமித்து வைக்க முடியும். இந்த சதுர வடிவத்துக்கு மென்ஜர் ஸ்பொஞ்ச் (*Menger Sponge*) என்று பெயரிட்டுள்ளனர். மின்காந்த அலைகளை சேமித்து வைக்கும் சதுர வடிவம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதன் மூலம் பல புதிய மின்னியல் கண்டுபிடிப்புகளை உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.


# எல்லாமே இதில் உண்டு



*செல் (மொபைல்) போன் என்பது ஆடம்பரப் பொருளாக ஒரு காலத்தில் கருதப்பட்டது. இப்போது அந்த நிலை மாறி மனித இனத்தின் அவசியங்களில் ஒன்றாக செல்போன் மாறி வருகிறது. தகவல் தொடர்பு பரிமாற்றத்திற்காக பயன்படுத்தப்பட்ட செல்போன் தற்போது கையடக்க கணினியாக, பொழுது போக்கு (இசை, பாடல், காட்சி) அம்சங்கள் நிறைந்ததாக மாறி வருகிறது.*

*செல்போனில் ஒருவருக்கொருவர் பேசலாம். நமது தகவல்களை, முக்கிய நிகழ்ச்சிகளை பதிவு செய்து வைக்கலாம். எம்.பி.3 இசை, எப்.எம்.ரேடியோ கேட்கும் வசதி... என்று பல வசதிகள் உள்ளன. இது போன்ற அனைத்து வசதிகளும் நிறைந்த செல்போன் ஒன்றை சோனி எரிக்சன் நிறுவனம் தயாரித்துள்ளது. 'ஸ்மார்ட் போன்' என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த போனில் இண்டர்நெட் இணைப்பு வசதி, பி.டி.ஏ. எனப்படும் டிஜிட்டல் அசிஸ்டெண்ட் வசதி, 'வீடியோ காட்சி பார்க்கும் வசதி, படம் எடுக்கும் கமெரா வசதி, நமது பேச்சை பதிவு செய்யும் 'ரெக்கோடிங்' வசதி, எம்.பி.3 இசையை கேட்கும் வசதி போன்றவை உள்ளன. விலை சுமார் 72 ஆயிரம் ரூபா.*


# இதய வடிவ தபால்தலை



படங்களில் நீங்கள் காண்பது சாட்சாத் தபால் தலை (ஸ்டாம்ப், தான். ஆனால், இதய வடிவத்தில் வடிவமைக்கப்பட்டு இருப்பதுதான் வித்தியாசம். இந்த இதய வடிவ தபால் தலையை ஜெர்மனியூ அலங்கார வடிவமைப்பாளர் கோர்ல் லேகர்பெல்டு என்பவர் பிரான்ஸ் நாட்டின் தபால் துறைக்காக வடிவமைத்துள்ளார்.

அந்த வடிவமைப்பாளர் இரண்டு வகை தபால் தலைகளை வடிவமைத்தார். அவற்றில் ஒன்று 0.75 யூரோ (0.945 டாலர்) மதிப்பு உடையது. இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 90ரூபா. மற்றொரு தபால் தலை 0.50 யூரோ (0.63 டாலர்) மதிப்புடையது. இது இலங்கை மதிப்பில் ஏறக்குறைய 60 ரூபா ஆகும்.

# அட அப்படியா....!



படத்தில் காணும் ரோபோ தன் வலக்கையில் உலக்கையை வைத்துக் கொண்டு மரத்திலாலான உருளையில் இடிப்பது எதற்குத் தெரியுமா? அட கேக் தயாரிக்கத்தான். ஜப்பான் நாட்டில் இந்த செய்முறை விளக்க காட்சி அண்மையில் நடத்தப்பட்டது.


'ஹோண்டா' மோட்டார் நிறுவனத்தின் தயாரிப்பான மனித வடிவ ரோபோவான 'அசிமோ' தானே வேக வைக்கப்பட்ட அரிசியில் இருந்து கேக்கை தயாரிக்கிறது. மோச்சி என்று பெயரிடப்பட்ட அந்த வகை கேக், சமீபத்தில் பிறந்த புத்தாண்டை கொண்டாடும் விதமாக ரோபாவாலேயே தயாரிக்கப்பட்டு, நிறுவன ஊழியர்களுக்கு பரிமாறப்பட்டது.

# பேனா துப்பாக்கி

'ஸ்டிங்கர் பென் கன்' என்று அழைக்கப்படும் உள்ளங்கைக்குள் மடக்கி, அடக்கி விடக்கூடிய துப்பாக்கியையே படத்தில் பார்க்கிறீர்கள். இதனைப் பல்கேரியாவில் அதிகம் தயாரிக்கிறார்கள். ஐரோப்பா முழுவதும் கிடைக்கிறது. விலை இருபது டொலர். பார்த்தால், துப்பாக்கி போலவே இருக்காது!, கீசெயின் அல்லது விசில் என்று சொல்லி ஏமாற்றிவிடலாம். விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இது மிகவும் பரிச்சயம். எனவே, அவர்களை அவ்வளவு சுலபமாக ஏமாற்றிவிட்டு, இந்தச் சமாச்சாரங்களைக் கடத்திச் செல்ல முடியாது.

மற்றபடி, ஒரே துண்டை மட்டுமே தாங்கியிருக்கும் இந்த ஆயுதத்தை உபயோகித்து எதிரிகளுக்கு 'மேலுலக டிக்கெட்' கொடுக்க வேண்டுமென்றால், இதயத்தைப் பார்த்துச் சுடவேண்டும். அப்படிச் சுடுவதற்குப் பயிற்சியும் வேண்டும்.

பழைய பேனா துப்பாக்கி!



புதிய ஸ்டிங்கர் பென் கன்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருகிறார் ஷேன் வோர்ன்!

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஷேன் வோர்ன் மீதான தடை பெப்ரவரி 10 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதனால் விரைவில் அவர் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்.

கடந்த வருடம் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளின் போது, தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தொன்றை ஷேன் வோர்ன் உட்கொண்டுள்ளமை கண்டறியப்பட்டது.

தென்னாபிரிக்க சட்டங்களின் அடிப்படையில் உலகக் கிண்ணப் போட்டிகளின் போது வீரர்களிடம் ஊக்க மருந்து சோதனை நடத்தப்படும் என ஐ.சி. சி அறிவித்திருந்தது.

இதனால், கிரிக்கெட் அவுஸ்திரேலியா ஷேன்வோர்னை தாயகத்திற்குத்திருப்பியழைத்தது. பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, உடல் எடையைக் குறைப்பதற்காக, தனது தாயார் வழங்கிய மருந்தொன்றை தாம் உட் கொண்டார் என ஷேன் வோர்ன் கூறினார்.

எனினும், ஷேன் வோர்னுக்கு கிரிக்கெட் அவுஸ்திரேலியா ஒருவருடக் காலத் தடை விதித்தது.

கடந்த வருடம் ஷேன்வோர்ன் மீது அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கவைச் சேர்ந்த பெண்கள் சிலர் ஷேன்வோர்ன் மீது பாலியல் குற்றச்சாட்டுகளையும்சுமத்தினர்.

இந்த நெருக்கடியிலிருந்து மீண்ட ஷேன் வோர்ன் மீதான தடை இம்மாதம் 10 ஆம் திகதி முடிவடைகிறது.

இதனால், இலங்கை அணியுடனான போட்டிகளின் மூலம் மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டிற்குத் திரும்பவுள்ளார் ஷேன் வோர்ன்.

அவுஸ்திரேலிய அணி இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. 5 ஒருநாள் போட்டிகளிலும் 3 டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய - இலங்கை அணிகள் மோதவுள்ளன.

பெப்ரவரி 20 ஆம் திகதி ஆரம்பமாகும் ஒருநாள் தொடரில் ஷேன் வோர்ன் பங்குபற்றமாட்டார். ஆனால், டெஸ்ட் போட்டிகளுக்கான அணியில் அவர் இடம் பெறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி மார்ச் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஷேன் வோர்ன் மீதான தடை காரணமாக அவுஸ்திரேலிய அணி சில பின்னடைவுகளைச் சந்தித்தது.


இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே அபாரமாகப் பந்து வீசி விக்கெட்டுகளைச் சாய்த்தார். ஆனால் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் மெக்கில் பிரகாசிக்கத் தவறினார்.

மெக்கில் பந்து வீசும் போது, அவுஸ்திரேலிய ரசிகர்கள் 'வோர்னி, வோர்னி' என சத்தமிட்டனர். மெக்கில் பிடிகளைத் தவறவிட்டபோது ரசிகர்கள் கூச்சலிட்டனர்


இந்நிலையில் ஷேன்வோர்னின் மீள் வருகை, மெக்கிலுக்கு நெருக்கடியை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

ஆனால் இக்கருத்தை ஸ்டுவர்ட் மெக்கில் மறுக்கிறார்.

"ஷேன்வோர்ன் விளையாடும் காலத்திலேயே நானும் அறிமுகமானேன். அதனால் அவரின் மீள்வருகை எனக்குக் கவலையளிக்கவில்லை" என்கிறார் மெக்கில்.




வி.பீ.கிண்ணப் போட்டியொன்றின்போது அவுஸ்திரேலிய ரசிகர்கள் ஷேன்வோர்னை வரவேற்கும் பதாகையொன்றுடன் காணப்படுகின்றனர்.



ஷேன்வோர்ன் - மெக்கில்

# அதிரடி வீரர் ரொபின் சிங் ஓய்வு

இந்திய கிரிக்கெட் வீரரான ரொபின் சிங் முதல்தர மற்றும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். கடந்த வாரம் அவர் இத்தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறி வித்தார்.

இந்திய கிரிக்கெட் வீரர்களில், அணியின் வெற்றிக்காகத் தீவிரமாகப் போராடுபவர்களில் ஒருவராக கருதப்படுபவர் ரொபின்சிங்.

மேற்கிந்தியத் தீவுகளில் பிறந்து இந்தியாவுக்காக சர்வதேச போட்டிகளில் விளையாடியவர் இவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. இவரின் முழுப்பெயர் ரபீந்திர ராம் நாராயன்சிங் ஆகும்.

மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள ட்ரினிடாட் நாட்டில் 14.06.1963 இல் பிறந்த ரொபின்சிங், 21 வயது வரை அந்நாட்டில் வசித்தார். அப்போது அங்கு பாடசாலை மற் றும் கனிஷ்ட பிரிவுகளில் பல போட்டிகளில் பங்கேற்றார். தென் ட்ரினிடாட் மற்றும் ட்ரினிடாட் தேசிய அணிகளுக்காகவும்அவர் விளையாடினார்.



ரொபின் சிங்

பட்டதாரியான ரொபின் சிங், 1985- 86ஆம் ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட்டில் நுழைந் தார். அகில இந்திய பல்கலைக் கழக போட்டியில் விளையாடிய ரொபின் சிங், 1986ஆம்ஆண்டு ரஞ்சி கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான தமிழக அணியில் முதன் முதலாக இடம் பெற்றார்.

1989ஆம் ஆண்டு முதன் முதலாக இந்திய அணிக்காக தேர்வு பெற்ற ரொபின்சிங் மேற்கிந்திய சுற்றுப்பயணத்தில் இடம் பெற்றார்.

அதன் பிறகு 7 ஆண்டுகள் வரை இந்திய அணியில் இடம் கிடைக்காமல் இருந்து வந்த ரொபின்சிங்குக்கு 7 ஆண்டுகளின் பின்னர் - 1996ஆம் ஆண்டு - மீண்டும் இடம் கிடைத்தது.

136 ஒரு நாள் போட்டி களில் விளையாடியுள்ள அவர் ஒரு சதம், 9 அரைச்சதம் உட்பட 2336 ஓட்டங்களையும், 69 விக்கெட்டுகளையும் பெற்றுள்ளார். இறுதி யாக, 2001ஆம் ஆண்டு ஏப்ரலில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடினார்.

ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் மட்டும் விளையாடிய ரொபின்சிங், 27 ஓட்டங்களைப் பெற்றார்.

131 முதல்தரப்போட்டிகளில் விளையாடியவர் அவர் 22 சதங்கள், 33 அரைச்சதங்கள் உட்பட 6997 ஓட்டங்களையும் 172 விக்கெட்டுகளையும் பெற்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

சர்வதேச போட்டிகளில் இருந்து அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னரே அவர் 19 வயதுக்குட்பட்ட தேசிய கிரிக்கெட் அணிக்கும் இந்தியாவின் தேசிய கிரிக்கெட் பயிற்சியகத்தின் ( தென் மண்டல ) தலைமைப் பயிற்சியாளராகவும் நியமிக்கப் பட்டார்.

தனது ஓய்வு குறித்து ரொபின்சிங் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டியளித்த போது அவர் கூறுகையில் :-

"எனது கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவிய அத்தனை பேருக்கும் இந்த சமயத்தில் எனது மனமார்ந்த நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

எனது ஓய்வு குறித்து கிரிக்கெட் சபைக்கு முறைப்படிகடிதம்அனுப்பியுள்ளேன். பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ள நான், தொடர்ந்து அப்பணியை செவ்வனே செய்து முடிப்பேன். கிரிக்கெட் சபையும் எனக்கு ஆதரவு தரும் என்று நம்புகிறேன்.

இடையில் சில ஆண்டுகள் இந்திய அணியில் இடம் பெறாமல் இருந்தாலும் மீண்டும் இடம் பெற்ற போது மகிழ்ச்சி அடைந்தேன்.

கிரிக்கெட் போட்டிகளின்போது என்னுடைய முழுத் திறனையும் உபயோகித்து விளையாடி திறனை நிருபித்துள்ளேன். அந்த மகிழ்ச்சியான நினைவுகளுடன் ஓய்வு பெறுகிறேன்.

கிரிக்கெட்டில் எனது மறக்க முடியாதசம்பவம் என்று பார்த்தால், தென்னாபிரிக்காவில் ஸிம்பாப்வேக்கு எதிரான போட்டியின் போது 'சிறப்பாக விளையாடாவிட்டால் உன்னுடைய எதிர்காலம் அவ்வளவு தான்' என பயிற்றுநர் கூறிய வார்த்தை என்னை உசுப்பியது. அந்த போட்டியில் நன்றாக விளையாடி எனது திறனை நிரூபித்தேன்.

அதே போல் பங்களா தேஷ் நாட்டில் நடைபெற்ற போட்டியின்போது, பாகிஸ்தானுடன் மோதி, அதில் 314 ஓட்ட இலக்கை விரட்டிச் சென்றமை மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். மகிழ்ச்சியான பல நிகழ்வுகளுடன் ஓய்வு பெறுகிறேன்" என்றார் ரொபின்சிங்.

- ஆர்.சேதுராமன்

# இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஸிம்பாப்வே சுற்றுலா கேள்விக்குறி

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஸிம்பாப்வே விஜயம் தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மீண்டும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

ஐ.சி.சி. அட்டவணைப்படி இவ்வருட இறுதியில் இங்கிலாந்து அணி ஸிம்பாப்வேவுக்கு விஜயம் செய்ய வேண்டும்.

ஆனால் அரசியல் காரணங்களால், ஸிம்பாப்வே சுற்றுலாவை ரத்துச் செய்வது குறித்து இங்கிலாந்து கிரிக்கெட்சபை ஆராய்ந்து வருகிறது.

கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளின் போது ஸிம்பாப்வே போட்டியை இங்கிலாந்து புறக்கணித்தது.

ஸிம்பாப்வே ஜனாதிபதி ரொபர்ட் முகாபே, தேர்தல் முறை கேடுகள் செய்து ஆட்சியைக் கைப்பற்றினார் என்றும், அவரது வெள்ளையின எதிர்ப்புக் கொள்கைகளைச் சுட்டிக் காட்டி யும் அங்கு பயணம் மேற்கொள்ள இங்கிலாந்து மறுப்புத் தெரிவித்தது.



சின்கோகா

இந்நிலையில், முகாபே விவகாரம் கிரிக் கெட் அரங்கில் இப்போது மீண் டும் ஒரு முறை வெடிக்கிறது. சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் பயண அட்டவணைப்படி, இங்கிலாந்து அணி வரும் அக்டோபரில் ஸிம்பாப்வேயுக்குச் செல்ல வேண்டும்.

ஆனால், ஸிம்பாப்வே நாட்டில் இயல்பு நிலை திரும்பும் வரை, கிரிக்கெட் பயணம் மேற்கொள்வ தில்லை என இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் முடிவுவெடுத் திருப்பதாகத் தெரி விக்கப்படுகிறது.

"இந்தப் பயணம் ரத்து செய்யப்படுவதற்கு பாதுகாப்புக் காரணங்கள் எதுவும் கிடையாது. அது எங்களுக்குப் பிரச்சினையும் இல்லை. மாறாக, அங்கு நிலவும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டே, தொடரை ரத்து செய்ய முடிவெடுக்கிறோம்" என்று கூறியுள்ளார் இங்கிலாந்து கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர்.

ஆனால், "இங்கிலாந்து உட்பட சகல டெஸ்ட் விளையாடும் நாடுகளும் தமது கடப்பாடு களை நிறைவேற்றவேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக சுற்றுலாக் களைப் புறக் கணிக்க முடியாது."

-இவ்வாறு இங்கிலாந்து கிரிக்கெட்சபை அதிகாரிகளைச் சந்தித்த பின்னர், ஐ.சி.சி. தலைவர் இஷான் மணி தெவித்துள்ளார்.

இவ்வருடம், ஸிம்பாப்வே அணி இரு தடவை இங்கிலாந்துக்குச் சென்றது. இங்கிலாந்து அணி 2001 ஆம் ஆண்டின்பின் ஸிம்பாப்வேக்குச் செல்லவில்லை. 1996-97 ஆம் ஆண்டின் பின்னர் இங்கிலாந்து அணி ஸிம்பாப்வேயில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இங்கிலாந்து கிரிக்கெட் அணி திட்டமிட்டபடி ஸிம்பாப்வேயுக்கு விஜயம் செய்ய வேண்டுமென வலியுறுத்துமாறு, ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் தலைவர் பீட்டர் சின்கோகா, இங்கிலாந்து பிராந்திய கிரிக்கெட் சங்கங்களுக்கு கடிதம் அனுப்பி யுள்ளார்.

இங்கிலாந்திலுள்ள 18 பிராந்திய சங்கங்களுக்கும் ஈ- மெயில் மூலம் இக் கடிதத்தை அனுப்பியுள்ளார் சின்கோகா.

"ஸிம்பாப்வேயுக்கு விஜயம் செய்வதாக உறுதியளித்து விட்டு எவ்வித கலந்துரை யாடலும் இன்றி, இந்த உடன் பாட்டி லிருந்து விலகு வதன் மூலம் இங்கி லாந்து கிரிக்கெட் சபை குற்றமிழைக்கிறது.

இச்சுற்றுலா ரத்துச் செய்யப்பட்டால் ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனி யன் நஷ்ட ஈடு கோரும். இதனால் இங்கிலாந்து பிராந்திய அணிகளுக்கும் பெரும் நிதி நெருக்கடி ஏற்படும்."

- இவ்வாறு பீட்டர் சின்கோகா கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# கடந்த காலங்கள்

இயந்திரங்களின் இரைச்சல் அந்த அதிகாலையின் அமைதியை மெதுவாக குலைத்துக்கொண்டிருந்தது. தொழிலுக்குச் சென்ற மீன்பிடிப் படகுகள் கரையை அண்மித்துக்கொண்டிருந்தன. விடிவதற்கான அறிகுறிகளை அவை காட்டிக் கொண்டிருந்தன. சமாதான காலம் என்பதால் எதுவித தடையுமின்றி ஆழ்கடல் மீன்பிடித்தொழில் நடைப்பெற்றுக் கொண்டிருந்தது. என்றும் இல்லாதவாறு அந்தப்பகுதிளை மீன்பிடிப்படகுகள் ஆக்கிரமித்திருந்தன, மக்கள் அமைதியாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தனர். சமாதானக் காலத்தின் பிரதிபலிப்பே அது.

இந்த அழகு மிகு ஆழ்கடலில் எழும் அலைகள் கரை காணும் ஆவலோடு விரைந்து வந்து கரை மோதிப் புரண்டு மகிழ்ந்தன. சிறிய நண்டுகள் அலை எழுப்பிய நுரையின் மேலே நீச்சல் கற்றுக்கொண்டிருந்தன. மீன் கொத்திப் பறவை ஒன்று கரை மோதும் அலைஊடே வரும் சிறிய மீனுக்காய் உற்று நோக்கியபடி கரையில் அமர்ந்திருந்தது. கதிரவன் தனது ஒளிக் கீற்றை கடற்பரப்பில் பரப்பி மேலெழ முயன்றுகொண்டிருந்தான். அந்த காட்சி கடற்கரைப் பிரதேசத்தை மென்மேலும் மெருகூட்டிக்கொண்டிருந்தது.


''ஜெனா...'' ''ஜெனா...''என்ற அம்மாவின் குரல் பாயில் படுத்துறங்கிக்கொண்டிருந்த ஜெனாவை விழித்தெழ வைத்தது, ''பிள்ளை அப்பா தொழிலால வந்திட்டார் இந்தா இந்த தேத்தண்ணீயை கொண்டுபோய் குடுத்திட்டு வா..'' என்றாள் அம்மா. ஜெனா போர்வையை விலக்கி குடிசையின் செத்தையை தூக்கி பார்வையை கடலை நோக்கி மேயவிட்டாள். தொலை தூரத்தில் நேவியின் டோரா படகொன்று கடலை கிழித்து நுரையைக்கக்கியவாறு வேகமாக சென்றுகொண்டிருந்தது. ''ம்....'' என்ற பெருமூச்சொன்றை விட்ட படியே ''இந்த துலைவாரால தானே என்ர வாழ்க்கை இப்ப இப்படிக்கிடக்குது'' என நினைத்தபடியே கடந்த ஆண்டுகளின் நினைவலையுடன் கலந்து போகின்றாள் ஜெனா.

****

அது 1998 ஆம் ஆண்டு காலப்பகுதி. ஏற்கனவே இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து மக்களோடு மக்களாக ஜெனாவும் ஜெனாவின் ஆசைத் தம்பி, அப்பா, அம்மா என நான்கு பேரும் அங்கிருந்து பொக்கினை வந்தார்கள். அங்கே கடற்கரை ஓரமாக சிறிதாக பனை மர ஓலையால் வேயப்பட்ட கொட்டகை ஒன்றிலே அவலத்தின் மத்தியில் அவர்களுடைய வாழ்க்கை தள்ளப்பட்டது.

அப்பா இராசகுலம் தொழில் ஏதுமின்றி தவித்துக்கொண்டிருக்கையில் அம்மாவும், அவளும் கழுத்திலும், கையிலும் கிடந்த நகை எல்லாவற்றையும் விற்று அந்தப் பணத்தில் அப்பாவுக்கு ஒரு கட்டுமரமும், மீன்பிடி வலைகளும் வாங்கிக் கொடுத்தனர். அப்பாவுக்கு உதவியாக அவளுடைய ஆசைத்தம்பி இணைந்து கொண்டான். இருவருமாக கடலுக்குச் சென்று தொழில் செய்து வந்துகொண்டிருந்தனர். வீட்டில் தாயும் இவளுமாக கைத்தொழில் வேலையில் பாய், கடகம், சுளகு என்பவற்றை இழைத்தனர். அப்போதைய பொருளாதார நிலைமையை அவர்களினால் ஓரளவு ஈடுசெய்யக்கூடியதாக இருந்தது. இதனால் அவர்களின் வாழ்வும் சுமூகமாக ஓடிக் கொண்டிருந்தது....

அன்றும் வழமை போலவே விடிந்ததும் காலையில் தொழிலால் வந்த அப்பாவுக்கும், தம்பிக்கும் தேநீர் வைத்து எடுத்துக் கொண்டு கடற்கரை நோக்கி ஜெனா விரைகிறாள். அப்பொழுது இந்த காலைப் பொழுதின் நிசப்தத்தை கிழித்துக் கொண்டு இரண்டு இரும்புப் பறவைகள் அப்பகுதியை வட்டமிட்டன. ஜெனா என்ன செய்வதென்றே புரியாமல் வானத்தையே வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். ஒரு இரும்புப்பறவை இவர்களின் பகுதியைகுறிவைத்தபடியே பேரிரைச்சலுடன் வந்துகொண்டிருந்தது. அந்த பேரிரைச்சலினுள்ளும் அவளின் தம்பியின் குரல்.... தெளிவாய் அவளின் காதுகளில் கேட்டது. ''அக்கா வீட்டுக்க ஓடிப்போ. இஞ்ச வராதே..'' என கூறவும் எல்லாமே நடந்த முடிந்துவிட்டன. அவளின் கையில் இருந்த தேநீர் கோப்பை தூக்கி எறியப்பட்டது, அவளையும் சில மீற்றர் தொலைவுக்கு கொண்டு செல்ல தவறவில்லை அந்த பேரொலி. ஒரே



புகைமண்டலம். நிதானித்து எழுந்தவளாய் கடற்கரை நோக்கி ஓடுகின்றாள். அங்கே கண்ட காட்சி அவளின் இரத்தத்தையே உறையவைத்தது. ஆம் இவளின் ஒரே ஒரு ஆசைத்தம்பி, அவனே தான். இரத்த வெள்ளத்தில் சின்னா பின்னமாக கிடந்தான். தந்தைக்கு காலில் கடுமையான காயம். மரணத்துடன் போராடிக்கொண்டிருந்தார். ''ஐயோ என் கடவுளே ! '' என்று அவள் வீரிட்டுக் குழறினாள். தம்பியை அணைக்க முற்பட்டாள். ஆனால், அவன் கிடந்த நிலைமையில் அவளால் அதைச் செய்ய முடியவில்லை. அவளின் தாயும் பங்கிற்கு மணலில் புரண்டு, புரண்டு புலம்பினாள். பெற்ற தாயல்லவா இவளின் வயிறு பற்றி அல்லவா எரியும். சிறிது நேரத்தில் ஊரே அவ்விடத்தில் கூடிவிடுகின்றது.

உடனடியாக வாகனம் ஒன்றைப் பிடித்து அவளின் தந்தையை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்கின்றனர். தம்பியின் உடலை கூட்டி அள்ளி, அவனின் சிதைந்த உடலை அருகில் உள்ள மயானத்தில் அடக்கம் செய்கின்றனர். தம்பியின் பிரிவும், அப்பாவின் ஊனமும் அவர்களை மீளாத்துயரில் ஆழ்த்திவிடுகின்றது. சிறிது காலத்தில், தந்தை சுகமாகி வரவே அவர்களுக்கு ஓரளவு ஆறுதல் கிடைக்கின்றது. இருந்தும் அவளின் தம்பியின் பிரிவு அவளது நெஞ்சை விட்டகல வில்லை.

இது இப்படி இருக்கையில் தான் ஜெனாவிற்கு வாழ்வில் ஒரு மாற்றம் நிகழ்கின்றது. ஆம் அவளின் வீட்டுக்கு சற்று தொலைவிலுள்ள மரியதாஸின் மகன் சுரேஸுடன் நட்பு துளிர்விடுகின்றது. அன்று அவள் தண்ணீர் அள்ளிக் கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் எதேச்சையாக எதிரில் மிதிவண்டியில் வந்தகொண்டிருந்த சுரேஸ் அவளை கடக்க முற்பட்டான். சைக்கிள் கான்ரில் அவளின் குடத்தினை தட்டிவிட தண்ணீர் எல்லாம் கீழே ஊற்றிவிடுகின்றது. அவள் திடுக்குற்று [illegible] மேலும் கீழுமாக பார்க்கின்றாள். உடனே சுரேஸ் சற்று பதற்றத்துடன் ''.... மன்னிக்கவேணும் ஏதோ யோசினையில வந்ததாலை ... தவறு என்னுடையதுதான்...'' என இழுத்தான். அவள் அமைதியாக அவனைப்பார்த்தபடி ''பரவாயில்லை...'' என குனிந்து குடத்தினை எடுத்துக் கொண்டு மீண்டும் கிணற்றடி நோக்கி நகர... அவளையே உற்றுப்பார்த்தபடி நின்ற சுரேஸின் மனதில் கற்பனை படகொன்று மிதந்து சென்றது.

வீட்டிற்கு வந்த ஜெனாவிற்கு அந்த சம்பவத்தை நினைக்க, நினைக்க ஒரு வித உணர்வு மனதை ஆட்கொண்டது. ''தவறு என்னுடையது தான்..'' என கூறி அவனது வார்த்தை திரும்ப, திரும்ப மனதினில் கரை புரண்டுஓடியது. அன்றொரு நாள் சுரேஸ் அவளிடம் தனது காதலை வெளிப்படுத்திவிட்டான். அவளோ அதற்கு உடனேயே மறுத்துவிடுகின்றாள். ஆனால், சுரேஸோ அவள் எங்கு சென்றாலும் அவளின் பின்னே அவளின் அன்புக்காய் ஏங்கித் திரிந்தான். இறுதியாக அவனின் நிலைமையை புரிந்து கொண்ட ஜெனா அவனின் காதலை ஏற்றுக்கொள்கின்றாள். பின்னர் அர்களின் காதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சென்றது. அதன் பின் ஜெனா மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். அவர்களின் காதலின் தளமாக ''கிணற்றடியே'' மாறி விட்டிருந்தது. பின் அயலவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கவே அவ்விடத்தை கைவிட்டனர்.

இவ்வாறு அவர்களின் சந்திப்புக்கள் தொடர்ந்தன. இப்படிஇருக்கையில் ஒரு நாள் ஜெனா சுரேஸைப்பார்த்து ''சுரேஸ் எங்கட கல்யாணம்....'' என இழுத்தாள். அதற்கு சுரேஸ் ''ஜெனா அதற்கு இப்ப என்ன அவசரம் நான் முதலில் தனித்து நின்று நிறைய உழைக்கவேணும். அதுக்கு பிறகு எங்கட திருமணம் சரிதானே...'' என்றான். அதற்கு ஜெனா, ''அப்படியெண்டால் எங்கட காதலை அம்மா, அப்பாட்டே முதல்ல சொல்ல வேணும் சுரேஸ்'' என்றாள். இருவருமாக தங்களின் காதலை பெற்றோரிடம் கூறவே அவர்கள் அதற்கு முதலில் எதிர்ப்பையே தெரிவித்தனர். பின்னர் நாளடைவில் அவர்களின் அன்பினை புரிந்து கொண்டவர்களாய் அதற்கு ஒத்துழைத்து இருவருக்கும் முதலில் பதிவுத் திருமணம் செய்து வைத்தார்கள்.

அதற்கு பிறகு சுரேஸ் தொழில் முயற்சியில் இறங்கினான். தனக்கென கட்டுமரம் ஒன்றையும் புதிதாக வலைகளையும் வாங்கி நித்தம் நீரில் நனைந்து அயராமல் உழைக்க தொடங்கினான். உழைத்த பணத்தில் ஜெனாவுக்கென சங்கிலியும் காப்பும் செய்து கொடுத்தான். ஒவ்வொரு நாளும் அவன் தொழிலுக்கு புறப்படும் போது அவள் கரைவரை சென்று வழி அனுப்பி வைப்பாள். ''சுரேஸ் தூரப்போகவேண்டாம் நேவி அடிப்பான் கவனம்'' என்பாள். அவனும் சிரித்தபடியே ''பயப்படாதே ஜெனா நான் அதிக தூரம் போக மாட்டேன்'' என கூறிச் செல்வான்.

அன்று ஒருநாள் அப்படிதான் அவன் தொழிலுக்கு செல்வதற்கான ஆயத்தத்தோடு கடற்கரை நோக்கி புறப்படவே கூடவே வந்த ஜெனா கடலை உற்றுப் பார்த்தாள். கடுமையான இருள் பேய்க்காற்று வீசிக் கொண்டிருந்தது. கடல் குமுறிக்கொண்டிருக்கவே அவளுக்கு மனதினில் ஏதோ ஒரு அச்ச உணர்வு ஆட்கொண்டது. சுரேஸை பார்த்து ''சுரேஸ்..'' என்றாள். அவன் அவளை திரும்பிப் பார்க்கவே ''இண்டைக்கு வழமையை விட கடலடி மோசமாக கிடக்கு அதனால...'' என இழுத்தாள். அதற்கு அவன் ''ஜெனா தொழில் எண்டு வெளிகிட்டாச்சு கடலடிக்கிறது என்றதுக்காக தொழிலுக்கு போகாமல் இருக்க முடியுமா? ஆண்டவன் எங்களை தரைமேலத்தான் பிறக்க வைத்தான். ஆனால், தண்ணீரில் நித்தம் தவிக்கவைக்கின்றான். என்ன செய்யிறது எங்களுக்கு இதை விட்டால் வேறதொழில் ஏதம்மா.'' எனக்கூறிக்கொண்டே அவளை நெருங்கி அவளை இறுக அணைத்து முத்தமிட்டான். பின் அருகே நின்றவர்களின் உதவியுடன் படகினை கடலில் தள்ளி துடுப்பை எடுத்து வலித்தவாறே மேல்நோக்கி விரையலானான். அவனையே கண் வெட்டாமல் பார்த்தபடி நின்ற ஜெனா சிறிது நேரத்தில் வீட்டிற்கு சென்று போர்வைக்குள் தன்னை மூடிக் கொண்டவள் சுரேசின் நினைவலைகளுடன் தூங்கிவிடுகிறாள். சில மணி நேரத்தின் பின் கடலில் பேரிரைச்சல். ஆம் அது நேவியின் சப்தம் தான். மிக அண்மையாக வர வர சத்தம் கூடிக் கொண்டிருந்தது. அவள் நிதானித்து எழ முன்னரே 'பட.. பட.. பட.. என வேட்டொலிகள் தீர்த்தன' எழுந்து கரையை நோக்கி விரைகிறாள். எல்லோரும் கரைக்குப் போய் கடலையே பார்த்தபடி நின்று கொண்டிருக்க சற்று நேரத்தின் பின் ஒவ்வொன்றாக கட்டுமரங்கள் நேவியின் தாக்குதலால் கரைக்கு வந்துகொண்டிருக்க இவளும் ஓடி, ஓடி சுரேஸ் வருகின்றானா என பார்த்தாள். ஆனால், சுரேஸ் வரவில்லை. நேரம் செல்லச் செல்ல மனதினுள்ளே ஏதோ, ஏதோ எல்லாம் கற்பனைகள். ''இல்லை அப்படி நடக்காது'' எனமனதினை தேற்றிக்கொண்டவள் கடவுளிடம் வேண்டிக்கொண்டாள்.

இப்பொழுது நன்றாக விடிந்து விட்டது தூரத்தில் கட்டுமரம் ஒன்று அலைகளுடன் போராடி அலைகள் அடித்து கரைநோக்கி வந்து கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் கரையை வந்தடைய எல்லோரும் முண்டியடித்து ஓடவே இவளும் ஓடிச் சென்று பார்க்கிறாள். அங்கே துப்பாக்கி ரவைகளினால் சல்லடை போடப்பட்ட வெறும் உடலாய் படகில் சுரேஸ். அவளுக்கு உலகமே கழன்று காலில் விழுவதைப் போன்ற உணர்வு. 'சுரேஸ்.. என' கத்திக் கொண்டே ஓடியவள் அப்படியே மயங்கி விழுகின்றாள். மீண்டும் அம்மாவின் குரல் ''ஜெனா இன்னமும் தேத்தண்ணி கொண்டு போகெல்லியோ''

*****

கடந்த கால நினைவுகளில் இருந்து மீண்டவளாய் தேநீர் கோப்பையை கையில் எடுத்தபடி கடற்கரை நோக்கி விரைகின்றாள் ஜெனா.

''இப்பொழுது இவர்களுடைய சொந்த மண் மீட்கப்பட்டு விட்டதால் மீண்டும் முல்லை மண்ணில் இவர்களுடைய வாழ்க்கை. ஆனால், அவளுடைய எதிர்காலம் – இனி யார் கையில்...?''

மு.வ.சுதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்வேந்தன் இராவணன் தொலைக்காட்சித் தொடர்



'இலங்கைமண்' வானொலி நாடகத்தின் தயாரிப்பாளர் வல்லையூரான், ஏழுமலை, மகேந்திரன், மௌலி,வாமதேவன் ஆகியோர்



'மண்ணுக்காக' தொலைக்காட்சி படத்தில் தேவர், பிரியா மற்றும் குழந்தை நட்சத்திரங்கள்.

1994–1995 காலப்குதியில் புலிகளின் குரல் வானொலியில் தொடர் நாடகமாக 52 வாரங்கள் ஒலிபரப்பப்பட்ட பொன் கணேசமூர்த்தியின் 'இலங்கை மண்' வானொலி நாடகத்தை 'தமிழ் வேந்தன் இராவணன்' என்ற பெயரில் தொலைகாட்சித் தொடராகக் கொண்டுவருவதற்கான செயற்பாடுகளில் 'நிதர்சனம்' உருவாக்கப்பிரிவு ஈடுபட்டுள்ளது.

நிதர்சனம் பிரிவினர் இதுவரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குறும் படங்களையும், பல முழு நீளப்படங்களையும், விமர்சன சித்திரங்களையும் தயாரித்து வெளியிட்டுள்ளனர். 94 இல் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும், நிதர்சனமும் இணைந்து தயாரித்த வல்வையூரானின் ''மண்ணுக்காக"ஒளிப்பேழையே அங்கு தயாரிக்கப்பட்ட முழுநீள முதல் வீடியோ படமாகும். 2மணி 20 நிமிடங்கள் காலத்தினை கொண்டதாக இது அமைந்திருந்தது.

தமிழ் பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் திரையிடப்பட்டு லட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்துக் கொண்ட இப்படத்தின் திரைக்கதை, உரையாடல், பாடல்கள், நெறியாள்கை ஆகியவற்றினை பொன் கணேசமூர்த்தி மேற்கொண்டிருந்தார். அவரே 'இலங்கை மண்' நாடகத்தினை வானொலிக்கென எழுதியதோடு தொலைக்காட்சித் தொடராக எடுக்கப்பட உள்ள தமிழ் வேந்தன் இராவணனுக்கானதிரைக்கதை வசனம் மற்றும் நெறியாள்கையினையும் மேற்கொள்ளவுள்ளார்.

'இலங்கை மண்' நாடகம் தொடராக வனொலியில் ஒலிபரப்பப்பட்டபோது அதில் இராவணன் பாத்திரம் ஏற்று இவரே நடித்தார்.

மாவீரன் உதயன், விஜயன், திலகவேந்தன், மௌலி, இளங்கோ, பாஸ்கரன், ஏழுமலை, அமரசிங்கம், நாகேந்திரசீலன், அருள், இளந்தமிழன் மற்றும்பிரியா, யாழினி, சாமந்தி, மல்லிகா ஆகிய கலைஞர்கள் அதில் பங்கேற்று நடித்திருந்தார்கள்.

பல லட்சக்கணக்கான வானொலி நேயர்களின் உள்ளங்களில் இடம் பிடித்துக் கொண்ட 'தமிழ் வேந்தன் இராவணன்' ஒரு வெற்றிப்படைப்பாக வெளிவருவான் என்பது நிச்சயமான ஒன்று.

மறத்தமிழன் இராவணனின் கதையை தமிழ் நாட்டில் 'நாடகக்காவலர்' ஆர்.எஸ்.மனோகர் 'இலங்கேஸ்வரன்' என்ற பெயரில் மேடைநாடகமாகத் தயாரித்து நூற்றுக்கணக்கான தடவைகள் மேடையேற்றி இராவணனுக்குப் புகழ் சேர்த்துள்ளார். இலங்கையில் 1965இல்முதன்முதலில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் கூத்துவடிவில் 'இராவணேசன்' மேடையேற்றப்பட்டது. அப்பொழுது அவரின் வேண்டுகோளின் பேரில் அவ்வேளை பல்கலைக்கழக மாணவனாக இருந்த பேராசிரியர் மௌனகுரு அவர்களே நடித்திருந்தார்.

மீண்டும் 38 வருடங்களுக்குப் பிறகு சிறிதளவு மாற்றங்களோடு பேராசிரியர் மௌனகுரு அவர்களால் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் தயாரிப்பாக சமீபகாலத்தில் மீண்டும் 'இராவணேசன்' மேடைக்கு வந்திருக்கின்றது. தற்பொழுது இராவணேசனாக விரிவுரையாளர் கி. ஜெயசங்கர் நடித்துள்ளார். ஓரிரு மாதங்கட்கு முன்பு மட்டக்களப்பில் 'இராவணேசன்' கூத்தினைப் பார்த்து ரசித்த இலங்கை கலைக்கழகத்தின் உபகுழுவான சிங்கள நாடகக்குழுத்தலைவர் (தமிழ் நாடகக் குழுத்தலைவர் அல்ல!) பராக்கிரம நிரியல்ல, மற்றும் சிங்கள நாடக திரைப்படத் துறையில் பெயர் பெற்றவரான 'ரோஜன் காந்தானே' புகழ் தர்மஶ்ரீ பண்டாரநாயக்க ஆகியோரின் இடைவிடாத முயற்சியால் டிசம்பர் 7 ஆம் திகதி இரவு 7 மணிக்கு கொழும்பு பிஷப் கல்லூரி கேட்போர் கூடத்தில் மீண்டும் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இது மீண்டும் பெப்ரவரி 28 ஆம் திகதி மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்கில் அரங்கேற்றப்பட உள்ளது.

ஆறுமுகம். தங்கவேலாயுதம்




# தமிழிசையுடன் ஒரு மாலைப் பொழுது



ஒஸ்லோ நகரில் பன்னிரண்டுவருடங்களாகவாழ்ந்து வரும் திருமதி வாசுகி ஜெயபாலன் இந் நிகழ்வில் தமிழ் பாடல்களைப் பாடி அரங்கைச் சிறப்பித்தார். நாட்டார் இசை பற்றிய தேடல்களைப் புரிந்து வரும் இவர் இலங்கையில்கிராமியஇசைக் கல்லூரி ஒன்றினை நிறுவுவதற்காகப் பிரயத்தனப்பட்டு வருகிறார்.

மாலைப்பொழுதின் தமிழிசை தமிழ், மொழி வாழ்த்துடன் ஆரம்பித்தது. வீரமணி ஐயரின் கணேச வந்தனத்துடன் தொடர்ந்த தமிழிசை நிகழ்வில் திருவாசகப் பாடல், நாட்டார் பாடல், தாயன்பு கூறும் பாடல், பெண்ணுரிமை கூறும் பாடல், தாலாட்டுப்பாடல், கீர்த்தனை என்று இசைக்கப்பட்டு திருப்புகழுடன் நிறைவடைந்தது.

இத்தமிழிசை நிகழ்வில் பாடப்பட்ட பாடல்கள் பற்றிய நோக்கில் தாலாட்டும் போது, பாடும் பாடலாக அமைந்த பாடலில் தமிழ்த் தாய் தாலாட்டும் முறையும், சிங்களத்தாய் தாலாட்டும் முறையும் நோர்வீஜிய தாய் தாலாட்டும் முறையும், பாடப்பட்டது. திருமதி வாசுகி ஜெயபாலனின் இசைத் தேடலை அரங்கப்படுத்தின.

தமிழிசை என்பது கர்நாடக இசை மட்டுல்ல. நாட்டார் இசை என்ற ஒரு கூறும் இணைந்தது தான் தமிழிசை.

இவ்வாறு கூறினார் திருமதி கமலினி செல்வராஜன்.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் தமிழிசையுடன் ஒரு மாலைப்பொழுது நிகழ்வு அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பாடகராகவும் கமலினி செல்வராஜன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சுயாதீன தொலைக்காட்சியின் பணிப்பாளர் குழுவைச் சேர்ந்த வீ.ஏ. திருஞான சுந்தரம் தனது தலைமையுரையின் போது இப்படியான ஒரு நிகழ்வு நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

நோர்வேயில் இருந்து வந்து இந்த நிகழ்வைச் சிறப்பிக்கும் திருமதி.வாசுகி ஜெயபாலனையும் அவர் பாராட்டினார். இது போன்ற நிகழ்வுகள் நிறைய நடைபெற வேண்டும் என்றும் ஊக்கப்படுத்தினார்.

பலவகையான கலை கலாசாரம் நிலவும் நோர்வேயின்

# கலை நிகழ்வுகள்



பாண்டிருப்பு அகரம் சமூக மையம் அண்மையில் நடந்த கலைவிழாவில் மாணவிகள் பங்கேற்ற காட்சி. (214)




மன்னார் கச்சேரி அலுவலர்களினால் அண்மையில் மன்னார் நகர மண்டபத்தில் நடத்தப்பட்ட ஒளி விழாவின் போது கச்சேரி அலுவலர்களின் சிறார்களினால் மேடை ஏற்றப்பட்ட நடன நிகழ்வு. (232)

# மாஸ்டர் சிவலிங்கத்தின் சிறுவர் கதைமலர்





தமிழ் மொழி மூலம் சிறுவர் இலக்கியங்களின் செழுமை தொய்வுற்றிருக்கும் இன்றைய நிலையில் கலாபூஷணம் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களது ஆக்கங்களைக் கொண்டு 'சிறுவர் கதைமலர்' என்ற பதிப்பு வெளிவந்துள்ளது.

சிந்தாமணி வார இதழில் அவர் எழுதிய கதைகளைக் கொண்ட இம் மலரை கொழும்பு அஷ்ட லஷ்மி பதிப்பதகத்தார் வெளியிட்டுள்ளார்கள்.

முதலாம் பாகத்தில், வல்லவனுக்கு வல்லவன், சிவாஜி எங்கே, ஆராய்ச்சி மணி, புத்திசாலிப் பெண், இரகசியம் என்ன என்ற கதைகள் உள்ளடக்கம் கொண்டுள்ளன.

இரண்டாம் பாகத்தில், மந்திரக் கண்ணாடி, தங்க முடி நங்கை, பறக்கும் ரொட்டி, வெற்றியாருக்கு, பலே பேர்வழி, போன்ற கதைகள் உள்ளடக்கம் கொண்டுள்ளன.

இக் கதை மலர் வளரும் சிறார்களின் அறிவிற்கும் வாசிப்புப் பயிற்சிக்கும் பயன் தரும் அம்சங்களைக் கொண்டுள்ளது. துல்லியமான எழுத்துருவில் பதிப்பாகியுள்ளன. இக் கதை மலரை நீங்களும் வாங்கிப் படித்து பாருங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மிலேனியம் சிற்றி சுற்றிவளைப்பும் அதிகரிக்கும் உள்வீட்டுப் பிணக்கும்

காலத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளும் எதையாவது ஒன்றை தூக்கிப்பிடித்து தமது அரசியல் இலாபத்தை குறிக்கோளாக கொண்டு மடுவை மலையாக்கி கழுதையை கட்டெறும்பாக்கும் விடயங்கள் இலங்கை அரசியலுக்கு புதிய விடயமல்ல.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அத்துறுகிரியாவில் உள்ள மிலேனியம் சிற்றியில் இரகசியமாக இயங்கி வந்த இராணுவ புலனாய்வுப் பிரிவை பொலிஸார் சுற்றிவளைத்து அங்கிருந்த ஆயுதங்கள் உட்பட வெடி குண்டுகள், விடுதலைப்புலிகளின் சீருடைகளை ஒத்த உடைகள் என பெருந்தொகையான இராணுவ உபகரணங்களை கைப்பற்றினர். 2002 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றது. இரகசியமாக இராணுவ புலனாய்வுப்பிரிவினர் இயங்கி வந்த விடயம் இராணுவ உயர்மட்டத்தை தவிர வேறு எவருக்கும் தெரிவித்திருக்கவில்லை. கொழும்பு பகுதியில் பொலிஸ் அத்தியட்சகராக அப்போது கடமையாற்றிய உடுகம்பொல தலைமையிலான குழுவினர் இந்த சுற்றிவளைப்பை செய்திருந்தனர்.

பின்னர் விசாரணைகளின் போதே அங்கிருந்தவர்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் என தெரியவந்தது. ஆனால் அந்த நேரத்தில் பிரதமரை கொல்வதற்கு அங்கிருந்து திட்டம் தீட்டப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன.

எது எப்படியாயினும் புலனாய்வுப்பிரிவினரால் இரகசியமாக செயற்படுத்தப்பட்டு வந்த அந்த முகாமில் இருந்த படையினருக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டது. தமிழ் மொழியில் தேர்ச்சி அளிப்பது முக்கியமாகக் கருதப்பட்டது.

இந்த உளவுப்பிரிவின் தலைவராக கப்டன் சாவுல் ஹமீட் மொகமட் நிலாமும் உதவியாளர்களாக என்.எம்.ஹில்மி, பிரேமச்சந்திர உதல்லாகம, நிசங்க ஹேரத், ஐ.எம். ஜயமாந்த ஆகியோர் இயங்கி வந்தனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஊடுருவி தாக்குதல் நடத்துவதே இந்த பிரிவினரின் பிரதான நடவடிக்கையாக இருந்தது.

வன்னிப் பகுதியில் ஊடுருவி நடத்தப்பட்ட தாக்குதல்கள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டன என்று தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளின் தளபதி கேணல் சங்கர் மீது மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதல், விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் போன்றவை இந்த பிரிவினராலேயே மேற்கொள்ளப்பட்டவை எனவும் தெரிய வருகிறது.

## உயர்மட்டம் மட்டுமே அறிந்திருந்தது

விடுதலைப்புலிகளை ஒத்த மிகவும் திட்டமிடப்பட்ட ரீதியில் அமைக்கப்பட்டிருந்தது இந்த இராணுவ உளவுப்பிரிவு. வன்னிப் பகுதிக் காடுகளில் ஊடுருவி விடுதலைப் புலிகளின் தளபதிகளை குறிவைத்து கொண்டிருந்தது. அந்தப் பிரிவின் தலைமையகமாகவே ''மிலேனியம் சிற்றி'' முகாம் இயங்கிவந்தது. பொலிஸுக்கு இந்த முகாம் தொடர்பாக தகவல் கொடுத்ததே இராணுவ உயரதிகாரி ஒருவர் தான் என்று அப்போது செய்திகள் வெளியாகி இருந்தன. இராணுவ உயர் அதிகாரிக்கே தெரியாமல் மிகவும் ரகசியமாக செயற்பட்டு வந்த ''மிலேனியம் சிற்றி'' புலனாய்வு பிரிவு பற்றி பொலிஸாருக்கு சிறிதும் தெரிந்திருக்கவில்லை என்பது பின்னரே தெரியவந்தது.

ஆனால், இரண்டு வருடங்கள் கழித்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு வெளியிட்ட அறிக்கை பக்கசார்பானது என விமர்சிக்கப்படுகிறது. எதிர்க்கட்சியினர் இதுதான் தமக்கு கிடைத்த தருணம் என்பதை பறைசாற்றுவதற்காக இந்த பிரச்சினையை தூக்கிபிடித்து பிரதமர் மீது கடுமையான விமர்சனங்களை பொழிந்து வருகின்றனர்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினரின் அறிக்கையை ஆராய்வதற்காக நாடாளுமன்ற தெரிவிக்குழுவும் அவசியமற்றது என அவர்கள் கூறிவருகின்றனர்.

எது எப்படியாயினும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஊடுருவி விடுதலைப்புலிகளின் தளபதிகளை தீர்த்துக் கட்டுவதற்காக அமைக்கப்பட்ட படையணியை இந்த நாட்டின் தேசபக்தர்கள் என வர்ணிக்கப்படுவது இனவாதிகளுக்கு சரியானதாகப்படுவதில் ஆச்சரியம் இல்லை

''மிலேனியம் சிற்றி'' சுற்றிவளைப்பை நடத்திய பொலிஸ் உயரதிகாரியான குலசிறி உடுகம்பொல, அந்த முகாமை சுற்றிவளைத்த போது அங்கு ஐந்து இராணுவ அதிகாரிகள் இருந்தனர். அவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா தனது சொந்தப் பணத்தில் இருந்து உடுகம்பொல வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அதைவிட அரசு ஒவ்வொருவருக்கும் தலா ஏழு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கவேண்டும் எனவும் பரிந்துரை செய்துள்ளது. அதாவது ஆயுதங்களை கைப்பற்றியதும் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தியதும் அவர்களின் அடிப்படை உரிமையை மீறிய விடயம் என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

## உயர் நீதிமன்றத்தில் மனு

மிலேனியம் சிற்றியில் கடமையாற்றிய இராணுவ அதிகாரிகள் ஐந்துபேர் தனித்தனியாக ஐந்து மனுக்களை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். அப்போதே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது. கண்டி பொலிஸ் நிலையத்தில் பல நாட்கள் தம்மை தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தியமை, தம்மிடமிருந்த ஆயுதங்களை கைப்பற்றியமை, தமது கடமையை செய்ய அனுமதிக்காமை போன்ற குற்றச்சாட்டுக்களை இவர்கள் சுமத்தி இருந்தனர். பிரதிவாதிகளான பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல, சப் இன்ஸ்பெக்டர் தர்மரத்ன, பொலிஸ் அத்தியட்சகர் அசோக ரணவீர, இன்ஸ்பெக்டர் மகேந்திர, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி எம்.எம்.மொஹெறாட்டி கௌதர ஆகியோர் நீதிபதியால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

உயர்நீதிமன்ற நீதிபதி கலாநிதி சிராணி பண்டாரநாயக்க தலைமையிலான மூன்று நீதிபதிகளை கொண்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

எது எப்படியாயினும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை வரும்வரை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். விடுதலைப்புலிகளுக்கு எதிராக செயற்படுவதற்காக பொலிஸ் மற்றும் படைகளில் எத்தனையோ நூற்றுக்கணக்கான சிறப்பு படையணிகள் இது போன்று அமைக்கப்பட்டு செயற்பட்டன. எத்தனை சிறப்பு படையணிகள் செயற்பட்டபோதும் விடுதலைப்புலிகளின் போர் நடவடிக்கைகளை கட்டுபடுத்த முடியவில்லை. மாறாக முன்பு இருந்ததை விட புலிகள் பல மடங்கு பலமானவர்களாகினர் என்பதே உண்மை.

அத்துறுகிரிய ''மிலேனியம் சிற்றி'' ரகசிய முகாமை பொலிசார் சுற்றிவளைத்ததால் புலிகள் வளர்ச்சி கண்டுவிட்டனர் என்று தென்பகுதி மேடைகளில் எதிரணியினர் பேசிவருவது நகைப்புக்கிடமான விடயம்.

**ஆ.வரதன்.**

## சொற்சிலம்பம் போட்டி இல.93

**சொற்சிலம்பம் 93 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் பெப்ரவரி 14 ஆம் திகதி ஆகும். விடைகள் பெப்ரவரி 21 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி 28 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 91 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.**


**தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.91

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தீ | 2 வி | ர | 3 வா | 4 தி | ■ | 5 வெ | 6 கு |
| 7 பா | கு | ■ | 8 க | ட | ல | ட் | டை |
| 9 வ | தி | 10 வி | ட | ம் | ■ | க | ■ |
| ளி | ■ | 11 நா | ம் | ■ | 12 பா | ம் | 13 பு |
| ■ | 14 தூ | ய | ■ | 15 சோ | தி | ■ | த் |
| 16 ப | ங் | க | ஜ | ம் | ■ | 17 சா | தி |
| 18 த | க | ர் | ■ | 19 ப | 20 சி | ■ | ர |
| 21 வி | ல் | ■ | 22 வ | ல் | ல | வ | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல.93



## சொற்சிலம்பம் போட்டி இல.93

### இடமிருந்து வலம்

1. எல்லோரும் வாழ்வில் தேடி அலைவது இதைத் தான்.
4. நாட்டுக்கு எப்போதும் தேவை இது.
6. குறிஞ்சி நிலப் பெண்.
7. விவாதித்தல்.
9. நான்கு கூப்பிடு அளவு தூரம்.
11. இது தற்கால நிறை அலகு.
12. வயலில் எல்லையில் — ஓரத்தில் — கட்டுவது.
13. பிடிவாதம்.
14. பகிரங்கம்/பொது இடம்.
16. இரவு.
17. குத்து விழுவது இப்படியாமே!
18. ஒரு வரிசையில் இருக்கும் தொடர்.
19. உலகம்.
20. மானில் ஒரு வகை.

### மேலிருந்து கீழ்

1. நிர்வாகம் செய்பவன்.
2. கிரீடம்.
3. தைரியம்/வலி.
4. இன்று அரசியல் போட்டி இதற்காகத் தான்.
5. மீண்டும் வருதல்/மீளுதல்.
8. மிகுதி/விசாலம்/பொலிவு.
10. தமது.
12. தேர் இழுக்கும் கயிறு.
13. கழுவு /அலட்டு.
14. எய்தவன் இருக்க இதை நோவதா?
15. பிரி.
16. ஆண் சிங்கம்.
18. பூமியைச் சுற்றி நிலைத்திருப்பது.

## சொற்சிலம்பம்-90 பரிசு பெறுவோர்.

1. திரு. எஸ். பொன்னுத்துரை,
   42 3 /3 உருத்திரா மாவத்தை,
   கொழும்பு — 6.
2. வ. கதிர்காமத் தம்பி,
   11, மூர் வீதி,
   கொழும்பு — 6.
3. திருமதி. ராஜினி புண்ணியமூர்த்தி,
   இல. 36 புகையிரத நிலைய வீதி,
   மட்டக்களப்பு.

### பாராட்டுப்பெறுவோர்

1. கே.அரசேஸ்வரன்,
   கலைமகள் வீதி,
   யாழ்ப்பாணம்.
2. திருமதி.ஆர்.சிவஞானம்,
   43/1, புகையிரத நிலைய வீதி,
   மட்டக்களப்பு.
3. எம்.சிரின், இல. 677/4, வல்கம,
   மல்வானை.
4. செல்வி. ஏ. நயனி,
   55 5/12, பருத்தித்துறை வீதி,
   யாழ்ப்பாணம்.
5. வே. ஞானபண்டிதன்,
   சாளம்பைக் குளம்,
   வவுனியா.
6. திருமதி. ரீ. மரியநாதன்,
   இல.21, கிறேஞ் ரெரஸ்,
   பண்டாரவளை.
7. திருமதி.பி.உதயகுமார்,
   எல்லை வீதி,
   மட்டக்களப்பு.
8. க. கழல்தீன்,
   புன்னக்குடா வீதி,
   ஏறாவூர்.
9. த.செந்தூரன்,
   துன்னாலை தெற்கு,
   கரவெட்டி.
10. திருமதி.ம.கனகசிங்கம்,
    நாலாம் குறுக்குத் தெரு,
    யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரடியாக வெளிநாட்டு உதவி பெறுவதில் புலிகள் முனைப்பு

## தென் இலங்கை நெருக்கடி தீரும் அறிகுறி இல்லை.

**போ**ரினால் அழிவுண்ட தமிழர் தாயகப் பிரதேசங்களை மீளக் கட்டி எழுப்பவும் தமிழ் மக்களின் அவசிய மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றவும் தேவையான வெளிநாட்டு உதவிகளை நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் தோன்றியிருக்கின்றன.

சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போய் நீண்ட நாட்கள் கடந்து விட்ட பின்னரும் — தென்னிலங்கையில் உருவாகிய அரசியல் அதிகாரப் போட்டி நாட்டின் அமைதிச் சூழலுக்கு அடித்தளமான புரிந்துணர்வு உடன்படிக்கையை ஆட்டங்காணச் செய்திருக்கின்ற பின்னரும் — சமாதான வழிமுறைகள் மீதும் யுத்த நிறுத்தம் தொடர்பாகவும் விடுதலைப்புலிகள் காட்டி வருகின்ற — பேணிவருகின்ற — உறுதிப்பாடு கண்டு திருப்தியடைந்திருக்கின்ற வெளிநாடுகள் பலவும் —

தமிழ் மக்களுக்கான அவசர மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நிதி உதவிகளை கொழும்பு அரசின் ஊடாக வழங்காமல் வடக்கு — கிழக்கில் செயற்படும் அரசு சாராத அமைப்புகள் மூலமாக வழங்குவது பற்றி பரிசீலிக்கின்றன என்ற தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகிய காலம் தொட்டு அப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்த விடயம் மக்களின் அவசர மனிதாபிமான உதவிகளுக்கான திட்டங்கள் ஆகும்.

இதற்காகவே 'சிரான்' போன்ற உபகுழுக்களை நிறுவுவது பற்றி பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டு அதை நடைமுறைப் படுத்த முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், மக்களின் அன்றாட தேவைகளை — அவசரமான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான நிதியை — வழங்க வெளிநாடுகள் பல தயாராக இருந்தபோதிலும் அரசு அதற்கு முட்டுக்கட்டைகளைப் போட்டது.

மக்களின் அவசிய தேவைகளை நிறைவு செய்யவும், மனிதாபிமானத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தவும் ஓர் நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் எனக் கருதிய புலிகள், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்ற பெயரில் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான யோசனைகளை முன் வைத்தனர்.

ஆனால், தென்னிலங்கையில் இரண்டு அரசியல் அதிகார மையங்களுக்கும் இடையிலான பிளவுகள் அதிகரித்து அரசாட்சியே ஸ்திரமற்ற நிலைக்கு போய்விட்டதால் சமாதானப்பேச்சுக்கள் பற்றிய பேச்சே ஓய்ந்து போய் விட்டிருக்கிறது.

இலங்கையில் சமாதான முயற்சிகளின் முன்னேற்றங்களுக்குக் குறுக்கே பூதாகரமாக உருவெடுத்து நிற்கின்ற தென்னிலங்கை அரசியல் நெருக்கடி தணிந்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் விடுதலைப்புலிகளும், சர்வதேச சமூகத்தினரும் சிறிது காலமாகப் பொறுமை காத்து வந்தனர். ஆயினும், இந்த அரசியல் நெருக்கடி மோதல், தேர்தல்




என்று மிக நீண்ட காலத்துக்கு இழுபடப் போகின்றது என்பது இப்போது சர்வநிச்சயமாகிவிட்டது. ஆனால், இந்த இழுபறி — இடைவெளி — காரணமாக பல லட்சக் கணக்கான தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிப் பணிகள் தடைப்பட்டுப் போய்விடக் கூடாது என்பதில் சர்வதேச சமூகம் மிகுந்த கரிசனை காட்டுவதாகத் தெரிகிறது.

தென்னிலங்கையில் உருவாகியுள்ள அரசியல் நெருக்கடி வடக்கு — கிழக்குக்கான அவசரப் புனர்வாழ்வு, மனிதாபிமானப் பணிகளைப் பாதித்து விடுவதை அனுமதிக்கக் கூடாது என்று ஜப்பான் உட்பட உதவி வழங்கும் நாடுகள் பலவும் உணர்ந்துள்ளன. ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி கூட இதே கருத்தை கொழும்பில் வெளியிட்டிருக்கிறார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஆடிப் போன நிலையிலும் அமைதி பேணுவதில் உறுதியாய் இருந்து வரும் விடுதலைப்புலிகள், தெற்கில் அரசியல் அதிகார சக்தி ஒன்று ஆட்சிக்கு வரும் வரை இப்படியே பொறுமை காத்து பொறுப்புணர்ச்சியுடன் இருக்க தாங்கள் தயார் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கின்றனர். அதேநேரம் இந்தக் காத்திருப்புக் காலப்பகுதியில் மக்களின் புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகள் தடைப்படவோ, தட்டிக் கழிக்கப்படவோ கூடாது என்பதிலும் அவர்கள் உறுதியாயிருக்கின்றனர்.

வடக்கு — கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு, புனரமைப்புத் தேவைகளை ஆராய்வதற்காக கிளிநொச்சியில் கடந்த 19 ஆம் திகதி கூட்டப்பட்ட முக்கிய கூட்டத்தில் கலந்து கொண்ட சர்வதேச பிரதிநிதிகளிடம், புலிகள் இதனை வலியுறுத்தியிருக்கின்றனர். இக் கூட்டத்தில் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தென்னிலங்கை அரசியல் நெருக்கடியால் உருவாகிய குழப்பநிலை வடக்கு — கிழக்கு மக்களுக்கான வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமற் செய்து விடக் கூடாது என்ற கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

அதேவேளை — தற்போதைய அரசியல் அதிகாரக் குழப்பத்துக்கு மத்தியில் வடக்கு — கிழக்கு மக்களுக்கான உதவிகளை கொழும்பு ஊடாக வழங்குவது எவ்வாறு முழுமையானதாக அமையும் என்பதிலும் சில வெளிநாடுகள் மத்தியில் ஐயங்கள் எழுந்திருக்கின்றன.

தமிழ் மக்களுக்கான உதவிகளை நேரடியாக தமிழர் தாயகத்துக்கே கிடைக்கும் வகையில் வழங்குவதற்கு, உதவி வழங்கும் நாடுகள் முன்வர வேண்டும் என்று புலிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். ஐரோப்பாவில் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்திருக்கும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதே கோரிக்கையை அந்த நாடுகளிடம் வலியுறுத்தவுள்ளார்.

வெளிநாட்டு நிதி உதவிகள் விரயமோ, முறைகேடுகளோ இன்றி மக்களின் மனிதாபிமானத் தேவைகளுக்குப் பயன்படுவதை உறுதி செய்வதாயின் அரசு சாராத அமைப்புகள் மூலம் நேரடியாக அந்த உதவிகள் வழங்கப்படவேண்டும் என்று சு.ப.தமிழ்ச்செல்வன் கேட்டிருக்கிறார்.

புலிகள் தரப்பின் இந்தக் கோரிக்கைக்கு வலுவான ஆதரவு சில நாடுகள் மத்தியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு புலிகளின் கோரிக்கை ஏற்கப்பட்டு வெளிநாட்டு உதவிகள் கொழும்பின் தயவு இன்றியே வன்னிக்கு — தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு கிடைக்கின்ற நிலை ஏற்படுமானால் சமாதான முயற்சிகளால் தமிழர் தரப்புக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க உலக அங்கீகாரமாக அது அமையும்.

வடக்கு — கிழக்கிற்கு வெளிநாட்டு உதவிகள் நேரடியாக கிடைப்பதை கொழும்பு அரசு அனுமதிக்காத பட்சத்தில் வெளிநாட்டு அழுத்தம் கொழும்பு அரசுக்கு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**-வலிகாமத்தான்.**

---

## வாய்ப்புள்ள விதெல்லாம் வந்து வாழவைப்போம்!

*(08 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

உறவினர்களுக்குப் பட்டம் பதவிகள் பெற்றுக் கொடுத்தீர்கள். நீங்கள் உங்களை விளம்பரப்படுத்துவதைவிடவா நாங்கள் எங்களை விளம்பரப்படுத்துகின்றோம். கேவலப்புத்தியால் புரியம் படிப்பினாலும் ஏதுவான விவாதங்கள் புரிவதினாலும் கௌரவங்கள் பெறுவதினாலும் ஒருவித பயனுமில்லை. இவை மற்றவர்கள் மனதில் குழப்பத்தை தருமேயன்றி தெளிவுகாண முடியாது. ஊடகங்களும் சிலவேளைகளில் உங்களோடு ஒத்தூதுகின்றன. சுதி பிழைத்தால் உங்களுக்குச் சுளுக்குப் பிடித்து மார்ட்டியும் கொள்கிறீர்கள்.

'நண்பன் ஒருவன் குற்றம் சொல்லுகிறான்' என்று ஏன் பிறர் மேல் பழி போடுகின்றீர்கள். அவன் உங்களுக்குள்ளே தானே உறங்குகின்றான். ஆபத்து வரும்போது 'ஆபத்பாந்தவனாக' அவன் விழித்துக் கொள்ளுகின்றான்.

நகைச்சுவையாகத்தான் எழுதியிருக்கின்றீர்கள். 'நக்கிற நாய்க்கு செக்கென்ன, சிவலிங்கமென்ன' நன்றாகத்தான் எங்களை நக்கியிருக்கிறீர்கள். நாற்றமும் பேறியிருக்குமே. 'ஆறாதே நாவினாற் சுட்ட வடு'. நக்கும் போது சில இடங்களில் விக்கியும் இருக்கிறீர்கள். எங்களிடம் வந்தால் இனி நீங்கள் நாற நாறக் கக்க வேண்டித்தான் வரும்.

ஆன்மீகவாதி என்றும் கூறும் நீங்கள், வெளிநாட்டிலிருந்து வந்த பெண்களின் உடை அலங்காரங்களினூடே அவயங்களையெல்லாம் அக்குவேறு ஆணிவேறாக ரசித்த அலங்கோலங்களை எழுதித்தள்ளியிருக்கிறீர்களே! கண்டறியாதன கண்டபோது சூரிய நமஸ்காரம் எதற்கோ! நாங்கள் கொண்டு வந்த பொதிகளையும் பார்த்திருக்கிறீர்கள். பாவம் உங்களுக்கு ஒன்றும் கொண்டு வருவதற்கு அளவு போதாமலிருக்கும். அதனால் இழவு கொண்டாடியிருக்கிறீர்கள். 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் தானே' ஏதாவது 'சில்றையாவது' கிடைத்திருக்குமே. மல்லிகையின் மணத்தை கெடவைத்த உங்கள் துர்நாற்றக் கட்டுரையை புலம் பெயர்ந்தவர்கள் வாசிக்க வாசிக்க நன்றாக இன்னும் வாங்கிக் கட்டுவீர்கள். வாங்கிக் கட்டுவது உங்களுக்கு கைவந்த கலைதானே.

'[illegible]' என்ற சொல்லைப்பற்றி சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

'பிறர் தீமைசொல்லா நலத்தது சால்பு' என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அது தான் அறம். உங்கள் குற்றங்களை சொல்ல வேண்டிய தேவையும் அதனை மற்றவர்கள் அறியவேண்டிய தேவையும் எனக்கு இருப்பதால் இங்கு நான் சொல்லியிருக்கிறேன்.

'அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை' ஆகிய ஐந்துடனும் நின்று சொல்லியிருக்கிறேன்.

நீங்கள் கொட்டியிருப்பதெல்லாம் அங்கலாய்ப்புகளும், கையாலாகாத்தனங்களும் தான். பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து நாங்கள் பாடு பட்டு உழைப்பதை அறியும் எங்கள் மக்கள் எங்களைப் புரிந்துணர்வோடும், பரிந்துணர்வோடும்தான் பார்க்கின்றார்கள். 'ஏதோ அதுகள் தருகுதுகளோ இல்லையோ, சுகமாக இருக்கட்டும்' என்று தான் எங்களை ஆசீர்வதிக்கிறார்கள். உங்கள் ஆசீர்வாதங்களை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் அதற்குத் தகுதியற்றவர்.

உங்களுடைய எழுத்துக்களை அவர்கள் வாசித்தால், கொள்ளையில் போவான், கோதாரியில் போவான், அம்மை விளையாட்டில் போவான், அறுப்பான். இப்படி எங்கள் பிள்ளைகளைப் பற்றி எழுதியிருக்கிறானே என்றுதான் சொல்லுவார்கள்.

எழுதுகிறதெல்லாம் எழுதிவிட்டு, ''உங்களை இழிவுபடுத்த நான் இக்கட்டுரையை எழுதவில்லை'' என்று கூறி வம்பை விலை கொடுத்து நீங்கள்தான் வாங்கியிருக்கிறீர்கள். உண்மையை நீங்கள்தான் தரிசிக்க வேண்டும்.

எங்களை ''வாராதே! வரவல்லாய்....'' என்று சொல்ல நீங்கள் யார்? கம்பனின் கவியைப் பிழையாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள். மீண்டும் வரிகளுக்கிடையாக அவற்றை வாசித்து உணர்ந்து கொள்ளுங்கள். 'மீண்டும் வாருங்கள். வாழ்க வளமெல்லாம் பெற்று' என்று கூறித்தான் எங்களை வழியனுப்புகிறார்கள் எங்கள் மக்கள்.

ஒன்று மட்டும் உங்களுக்கு உறுதியாகச் சொல்லி வைக்க விரும்புகிறேன். எங்கள் செலவில் விழாக்கள் நடத்த இனிமேல் எங்களிடம் ''வாராதே! வர வல்லாய்....'' என்பதுவே அச்செய்தியாகும்.


''தக்கது இன்னது
தகாதது இன்னது என
ஒக்க உன்னலராயின்
உயர்துள மக்களும்
விலங்கே.''

– கம்பன்

---

## தூக்கமும் வியாதிதானா?

தூக்கப் பிரியர்களில் இருவகையினர் உள்ளனரர். வேறு வேலை வெட்டி இல்லாமல் சாப்பிடுவதும் தூங்குவதுமாக சிலர் காலத்தை கழிப்பார்கள். இது தூக்கவியாதி அல்ல, வேலை இல்லாத வியாதி என்று வேண்டுமானால் சொல்லலாம். இன்னொரு வகையினர், இயல்பாகவே தூக்கத்தை ஒரு போதை மாதிரி அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இத மரபணுக்கள் (Genetic) தந்த பரிசாக இருக்கலாம். அதிக தூக்கத்தை ஆனந்தமாக அனுபவிப்பவர்களின் குறட்டை இசைக்குப் பின்னணியில் ஹோர்மோன் கோளாறுகளும் இருக்கக்கூடும். உடலில் உள்ள வேறு நோய்களின் விளைவாகவும் இருக்கலாம். இந்த தீராத உறக்கம் பாலியல் இயலாமையாகவோ, ஏக்கமாகவோ அல்லது வாழ்வியல், தொழிலியல்சூழ்நிலைகாரணமாகவோ கூட இருக்க வாய்ப்புண்டு. ஆனால், குணமாக்கக் கூடியதுதான் இந்த கும்பகர்ணத்தூக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தமிழக தி.மு.க. கூட்டணியில் தொகுதிப் பங்கீட்டு சண்டை

## அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டுச்சேர உறுதி

தமிழகத்தில் லோக்சபா தேர்தலுக்காக அமைந்த 'மகா கூட்டணி' கடந்த வாரம் இப்பந்தியில் குறிப்பிட்டது போன்று தொகுதிப் பங்கீட்டில் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டு விட்டது. வழமைபோல சந்தர்ப்பவாதியும் கபட அரசியல் வாதியுமான ராமதாஸின் பாட்டாளிமக்கள் கட்சியை மையமாகக் கொண்டதே முதல் பிரச்சினை.

பாண்டிச்சேரி, தமிழ்நாட்டின் அருகே


கருணாநிதி

அமைந்திருக்கும் யூனியன் பிரதேசம். அதாவது மாநில அந்தஸ்து அல்லாத பிராந்தியம் இந்தியாவின் சண்டிகர், டில்லி, தாத்ரா — நாகர் — ஹவேலி, அந்தமான் நிகோபார் என்பன போன்றதே பாண்டிச்சேரியும். இதற்கு முதல் வரும் சட்டசபையும் உண்டு.

1967 முதல் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியே கிடையாது; ஆனால் புதுச்சேரி எனவும் — புதுவை எனவும் அழைக்கப்படும் பாண்டிச்சேரியில் காங்கிரஸ்தான் பலம் வாய்ந்த கட்சி. எப்போதாவது காங்கிரஸ் தோற்றால் தி.மு.க. ஆட்சிக்கு வரும், அவ்வளவுதான். அந்தளவுக்கு காங்கிரஸ்கோட்டையாகும் அது.

வன்னியர் கணிசமாக வாழும் புதுவையின் மீது பா.ம.கவுக்கு எப்போதுமே ஒரு கண். கடந்த சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு.க — காங்கிரஸ் கூட்டணியில் பா.ம.க. போட்டியிட்டது அப்போதும் புதுவையில் வென்றால் முதல் 2 1/2, ஆண்டு பா.ம.கவும் இறுதி 2 1/2 ஆண்டு அ.தி.மு.கவும் ஆள்வது என்றும் அ.தி.மு.கவின் 2 1/2 ஆண்டுகளை காங்கிரஸுக்கு விட்டுக் கொடுப்பது என்றும் அ.தி.மு.க. பேரம்பேசிக்கொண்டது. ஆனால், காங்கிரஸ் இதற்கு உடன்பட மறுத்துவிட்டது. வன்னியர் அதிகமாக வாழ்ந்தாலும் தமிழ்நாட்டின் வன்னியர் போலன்றி புதுவை வன்னியர்கள் இன்றும் காங்கிரஸை விட்டுப் பிரியவில்லை. புதுவையின் காங்கிரஸ் முதல்வர் ரங்கசாமி சாட்சாத் வன்னியரே தான். எனவே பா.ம.க. தனித்து ஒரு போதும் புதுவையில் வெல்ல முடியாது. வன்னியர் சமுகம் கூட பா.ம.க.வை முழுமையாக ஆதரியாது. இதனால் காங்கிரஸ் கூட்டணிக்குள் புகுந்து கொண்டு எப்படியாவது காங்கிரஸின் வன்னியர் ஆதரவை உடைக்க ராமதாஸ் முயன்று வருகிறார். ஆனால், ராமதாஸை முன்நிலைக்கு வர விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த காங்கிரஸ் கடந்த தேர்தலில் தமிழகத்தில் மட்டும் அ.தி.மு.க. — பா.ம.க. கூட்டணியில் போட்டியிட்டது; புதுவையில் தனித்தே போட்டியிட்டு ஆட்சியையும் பிடித்துக் கொண்டது.

இம்முறை கருணாநிதி புதுவை மக்களவைத் தொகுதியை பா.ம.க. போட்டியிட ஒதுக்கியுள்ளது காங்கிரஸுக்கு கடும் அதிருப்தியை கொடுத்துள்ளது.

இது முற்றி கடந்த முறை போல் முறுவலடைந்தால் பா.ம.க. கூட்டணியை விட்டு வெளியேறவும் நேரலாம். இப் போதைய மக்களவையில் பா.ம.கவுக்கு 5 எம்பிக்கள் உள்ளனர். இதனால் புதுவை உள்பட மொத்தம் 6 இடங்களை பா.ம.கவுக்கு வழங்கியுள்ளார் கருணாநிதி. புதுவையின் தற்போதைய லோக்சபா எம்.பி. எம்.ஓ.எச். பாருக் கூட காங்கிரஸ்காரர் தான். இவர்கள் புதுவையை விட இணங்கமாட்டார்கள் என்பது உறுதி. ஆனால் புதுவை காங்கிரஸ் தலைவர் நாராயணசாமி, முன்னாள் முதல்வர் சண்முகம் எம்.ஓ.எச். பாருக் ஆகியோர் எனக்கு உனக்கு என குத்து வெட்டுப் படுவதால் மேலிடமே பா.ம.கவுக்கு புதுவையை வழங்க இணங்கியதாகவும் தகவல்.

புதுவை தவிர தர்மபுரி, செங்கல்பட்டு, சிதம்பரம், திண்டிவனம், வேலூர் அல்லது அரக்கோணம் ஆகிய தொகுதிகள் பா.ம.கவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் தலைவர்கள் தி.மு.கவுடன் மூன்று தடவைகள் பேசியும் இன்னும் தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு வரவில்லை. இதற்கிடையில் கம்யூனிஸ்ட் கட்சி 4 தொகுதிகளைக் கோரியுள்ளது. கடந்த தேர்தலில் மதுரையில் மட்டும் வென்ற கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கை வேறு கருணாநிதிக்கு தலையிடியாகியுள்ளது. ஓஹோ என்று தொடங்கிய கூட்டணி தள்ளாடத் தொடங்கியுள்ளது.

இதற்கிடையில் அ.தி.மு.க. — பி.ஜே.பி. கூட்டணி உருவாகலாம் என்ற எதிர்பார்ப்புகள் இவ்வாரம் வலுத்துள்ளன. பி.ஜே.பி. தலைவர் வெங்கையா நாயுடு ஜெயலலிதாவை சந்தித்து பேசியுள்ளார். தனித்து நின்று பூஜ்யமாவதை விட ஜெயலலிதாவின் பிச்சையில் ஓரிரு ஆசனங்களையாவது வெல்லலாமே என்பது பி.ஜே.பியின் நப்பாசை.

லோக்சபா தேர்தலுடன் ஆந்திரா, ஒரிசா ஆகிய மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களும் நடைபெறவுள்ளன. ஆந்திராவில் 10 ஆண்டுகள் தொடர்ந்து சாதனை ஆட்சி புரிந்த சந்திரபாபு நாயுடு இம்முறையும் வெல்வாரா என்பது சுவாரஸ்யமாக எதிர்பார்க்கப்படும் விடயம். ஆந்திராவில் ஒரு பிராந்தியமான தெலுங்கானாவை தனி மாநிலமாக்க கோரி வலுவடைந்து வரும் போராட்டங்கள் நாயுடுவுக்கு தலையிடியாகும். காங்கிரஸ் ஆதரவு பெற்ற இப்போராட்டங்கள் பிராந்திய கட்சியான தெலுங்கானா ராஷ்டிரிய சமித்தியின் (ரி.ஆர்.எஸ்) தேர்தல் கோரிக்கையாகும். இதனால் தெலுங்கானா ராஷ்டிரியசமித்தியுடன் காங்கிரஸ் கூட்டணி வைக்கலாம். ஆனால் காங்கிரஸின் கூட்டாளிகளான கம்யூனிஸ்ட்கள் தெலுங்கானாவை எதிர்ப்பது இதற்கு முட்டுக் கட்டை ஆகும்.

சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் எதிர்பார்த்தது போல் இரண்டாக உடையாமல் மூன்றாகச் சிதறி உடைந்துள்ளது. பவர் காங்கிரஸ் கூட்டணியில் சேர்ந்து விட்டார். எதிர்ப்பாளர் சங்மாவும் வி.சி.சுக்லாவும் வடகிழக்கிலும், சத்திஷ்கரிலும் தனித்தனிக் கட்சி தொடங்கி பி.ஜே.பி. கூட்டணியில் சேர்ந்து விட்டனர். இவ்வாறு கடந்த வாரம்


ராமதாஸ்

காங்கிரஸ் கூட்டணி வலிமை பெறுவது போல தெரிந்தாலும் இவ் வாரம் பி.ஜே.பி.க்கு கூட்டணி அமைப்பதில் ஏறுமுகம் தெரிகிறது.

இதேவேளை ஜெயலலிதா மீதான மற்றொரு ஊழல் வழக்கிலும் அவரை சென்னை நீதிமன்றம் ஒன்று விடுவித்துள்ளது. தெற்கத்திய பெட்ரோல் இரசாயன கூட்டுத்தாபன பங்கு விற்றலில் நடந்த ஊழல் வழக்கிலேயே அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் லோக்சபாவை கலைக்கும் முடிவு மத்திய அமைச்சரவையால் எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 6 ஆம் திகதி லோக்சபா கலைக்கப்படும் எனத் தெரிகிறது.

—எஸ். சுரேந்திரஜித்—

# 'என் இதயம் உனக்காகவே'

அன்று மாலை வழக்கம் போல் பொம்மி அலுவலகத்தில் இருந்து வீடுநோக்கி வந்தாள். வீட்டுக்குள் நுழையும் முன் அவளது தாயாரான பாக்கியம் ஓர் கடதாசியை நீட்டினாள். அவசரமாக வாங்கி கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள் பொம்மி.

*என்னுயிரிலும் மேலான என் நண்பிக்கு:*

*கடிதத்தின் ஆரம்பவரிகள் மூலம் நான் யாரென விளக்கினால்சரி. என்னிடமிருந்து நீ மடலை எதிர்பார்த்து இருக்கமாட்டாய். நீ தானே இப்போது என்னையே எதிர்பார்ப்பது இல்லையே... இருந்தாலும் உன்னிடமிருந்து... ஒரு மடலை எதிர்பார்த்து ஏமாற்றத்தால் தவிக்கும் என் மனதில் ஆறுதலுக்காக... ஓர் இறுதியானதும் உறுதியானதுமான பதிலை எதிர்பார்த்தே இதனை எழுதுகின்றேன்.*

*அன்று கல்லூரியில் என் அன்பை நீ முற்றாக எதிர்பார்த்தபோது அந்த எதிர்பார்ப்பை என்னால் மறக்க முடியாமல் போகவே நம்முள் உதயமான அந்தப் புனிதமான உறவின் ஆழத்தையும் அர்த்தத்தையும் இப்போதுதான் என்னால் உணர முடிகின்றது.*

*நம் உறவின் அந்த இரண்டு வருடகாலத்தின் பின் எம் கல்லூரி வாழ்க்கை முற்றுப் பெற்றபோது நான் மட்டுமா? நீயும்தானே மிகத்துயரமடைந்தாய். இனிவரும் நாட்களில் புனித உறவை மடல்கள் மூலமாவது பகிர்ந்து கொள்வோம் எனச் சொல்லி... நீதானே... எனக்கு அப்போது ஆறுதல் ஊட்டினாய்.*

*இவ்வாறு பரிமாறப்பட்ட மடல்களில் நீ கடசியாக எழுதிய மடலில் பரீட்சைக்கு இன்னும் ஆறுமாதங்கள் இருப்பதால் கடிதத்தைக் குறைத்துக் கொள்வோம் என எழுதியபோது நான் மிக்க துயரமடைந்தாலும் உன் எதிர்காலம் காதலால் பாதிக்கக் கூடாது என்பதற்காக நானும் பரீட்சை முடியும்வரை நாட்கள் எண்ணிக் காத்திருந்தேன். உயர்பரீட்சை முடிந்தபின் உன்னிடமிருந்து உடன் மடல் வருமென ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன். எனக்கு பலத்த ஏமாற்றத்தை தந்தது. பொறுத்திருந்து பார்த்ததும் என்னால் முடியவில்லை. ஆகவே உனக்கு ஒரு மடலிட்டேன்.*

*அதற்குக் கூட உன்னிடமிருந்து பதில் வரவில்லை. உன்னையும் சந்திப்பதற்குப் பல முறை முயற்சி செய்தேன். அதெல்லாம் முடியாத காரியமாகிப் போய்விட்டது. கல்லூரி நிகழ்வொன்றுவர நீ பழைய மாணவி என்ற ரீதியில் வருவாய் என எதிர்பார்த்து வந்தேன். என் முயற்சிவீண் போகவில்லை. பல பேர் முன்னிலையில் என் முன்னால் போகையில் என் உள்ளம் குமுறினது.*

*கடைசியில் காலங்கள் கரைந்து கொண்டு இருந்தனவே தவிர உன்னிடமிருந்து கடிதமே வரவில்லை. அன்றோடு நான் உன் நண்பி ஒருத்தியைச் சந்திக்க நேரிட்டபோது அவள் கூறிய விடயம் [illegible] செய்தது. அதுதான் இன்னொருவனைக் காதலிக்கிறாய் என்ற தகவல். அதைக் கூட நான் நம்பவில்லை. அதன் பின் நானே என்னைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன். அப்படி இருந்தாலும் உன்நிலைக்கு தகுதி இல்லாத ஏழைதானே நான். உன் செல்வச் செழிப்பானவாழ்க்கையோடு நான் இணைய முடியுமா என்று நீ இப்போது தான் யோசிச்சு இருக்கலாம். ஏன் என்றால் எல்லாக்காதலர்களும் இவ்விடயத்தைப் பற்றி ஆரம்பத்திலே யோசிப்பது இல்லையே!*




*இவ்வாறான நிலைகள் ஏற்பட்டு அதன் உச்சக் கட்டமாகவே — நம் இளைஞர்கள்சிலர் காதலில்தோல்வி என்று சவரம் செய்யாத முகத்தோடு பைத்தியமாய் அலைகின்றார்கள். ஏன் என் நிலை பற்றிக் கூட நீ அறிந்து இருக்கலாம். இதயத்தையே இழந்துவிட்டால் எப்படி நிம்மதியாக வாழ முடியும்? என்னால் இவ்விடயங்களைப் படிப்படியாக உணர்ந்தபோதுதான் என்னையும் இச்சமூகம் பைத்தியக்காரன் என்று பட்டம் சூட்டியது. யார் என்னைப் பைத்தியக் காரன் என்று சொன்னாலும் கவலையில்லை நீ மட்டும் என்னை உணர்ந்தால் போதும். உனக்கென்றும் வாழும் இவனின் நிலை பற்றி உன் இதயத்திடமே ஒரு முறை கேட்டுப் பார். உண்மையில் அவ்விதயத்தில் எனக்கு இடமிருந்தால் விரைவில் உன் முடிவை எழுது. என் மனம் நிம்மதி அடையட்டும்.*

***இப்படிக்கு உன் நினைவுடன்***
***கரன்.***

ஐங்கரன்
கிளிநொச்சி.

பொம்மி அக்கடிதத்துக்கு என்ன முடிவு சொல்வது என்று புரியாமல் நாட்களை தனது அலுவலகத்திலும் கடற்கரையிலும் நகர்த்திக் கொண்டிருந்தாள். அன்று மாலையானதும் தன்வீடு நோக்கிப் போகும் போது அவளைக்கடந்து உயிர் அற்ற உடலோடு பலர் போவதைக் கண்டாள். வீதியெங்கும் ஒரே பரபரப்பு. யாரிடமும் அறிந்து கொள்ள முடியாத நிலையில் வீடு வந்து சேர்ந்தாள் பொம்மி. அன்றிரவு தன் முடிவை மாற்றித் தன் கரனுக்கு ஓர் மடலை எழுதத் தொடங்கினாள்.

*என் அன்பிற்குரிய கரனுக்கு....*

*என் வாழ்க்கையில் இடையே ஏற்பட்ட மன மாற்றத்திற்கு மனம் வருந்துகின்றேன். இப்போது தீர்மான முடிவு எடுத்துள்ளேன். இனி என்றும் என் இதயம் உனக்காகவே வாழும் இது உறுதி.*

இப்படிக் கடிதத்தை எழுதி முடித்துக் கொண்டு அவசர அவசரமாக காரியாலயத்திற்கு புறப்பட ஆயத்தம் செய்து கொண்டு இருந்தாள் பொம்மி. அப்போதுஅவளின் அப்பா பத்திரிகையுடன் வீட்டினுள் நுளைந்தார். பொம்மி. பொம்மி என்று அழைத்தார். அவள் என்னப்பா என்று தகப்பனின் கையில் இருந்த பத்திரிகையை வாங்கியவாறு கேட்க இன்று கடைகள் எல்லாம் பூட்டு உனக்கும் லீவாகத்தான் இருக்க வேண்டும் என்றார் அப்பா. அதற்கு அவள் ஏன் அப்பா என்றவாறு பத்திரிகையைப் பார்க்கலானாள். மனநோயாளன் வீதிவிபத்தில் மரணமானான் என்ற தலைப்போடு கரனின் படமும் பத்திரிகையில் வந்திருக்க பொம்மி என் கரனா... என் கரனா.. என்று கத்தினாள். மனவலியுடன் அவனின் கடிதத்தை எடுத்து அக்கடித முடிவைப் பார்த்தாள். என்றும் என் இதயம் உனக்காகவே மாளும் இது உறுதி என்று இருந்தது. இதைப் பார்த்து புரண்டு புரண்டு கண்ணீர் வடித்தாள். அவள் எழுதிய கடிதமும் கண்ணீரால் நனைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு மெக்காவில் உள்ள பெரிய பள்ளி வாசலில் லட்சக்கணக்கான யாத்திரிகர் கூடியகாட்சி. இம் முறை 20 லட்சம் யாத்திரிகர்கள் இங்கு கூடுவார்கள் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

# 1ஆம் பிறந்ததின வாழ்த்து

பிறந்த திகதி: 01.02.2003



முதலாம் ஆண்டு: 01.02.2004

## செல்வன் சுதர்சன் அபிராம்

சுதர்சன்– சுரேகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அபிராம் முதலாவது பிறந்தநாளை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் இன்று (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை மிக சிறப்பாக கொண்டாடுகின்றரர். இவரை அரியாலையில் வதியும் அம்மப்பா குடும்பத்தினர், ஜேர்மனி சற்குணராசா சித்திரா மெலன் குடும்பம், சுவிஸ் பிரிதிவிராஜ் சுகந்தி குடும்பம், லண்டன் செந்தில் சுமதி குடும்பம். குமார் மாமா (லண்டன்), மேகனா அன்ரி (இலங்கை), பானு அன்ரி (கனடா), பாமா அன்ரி (கனடா), கூபா சித்தப்பா (கனடா), கிருஷ்ணா சித்தப்பா (லண்டன்), ராசு தாத்தா (சுவிஸ்), மற்றும் தாயகத்தில் வதியும் அனைத்து உறவினர்களும் பல்கலைபெற்று சிறப்புடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

18, விபுலானந்தர் வீதி,
புங்கன்குளம்,
கொழும்புத்துறை.

தகவல்
அப்பப்பா (நடராசா).




# வெள்ளவத்தையில்........ 33 இலட்சம் தொடக்கம்.





**SPECIAL FEATURES**
Free
SLT Phone connection
Luxury Pantry Cupboard
Medical Mobile Service

## மொத்தம் 15 வீடுகளைக்கொண்ட
## Super Luxury Appartment

- Three Bed Rooms, 3 Bath Rooms fitted with imported fittings and glazed tiles (1280 Sq.Ft.) Unit Z.
- Two Bed Rooms & 2 Bath Rooms fitted with imported fittings and glazed tiles (780 Sq. Ft.) Unit Y.
- Two bed Rooms & common Bath Rooms fittings and glazed tiles (600 Sq.Ft.) Unit X.
- Water proof P.V.C. Doors for Bathrooms
- Private Balconies
- Lift facility for all floors
- Ground floor reserved for car paking
- Windows of Aluminium framed glazed windows
- Separate electricity, water meter for each unit
- Letter box for each unit at ground floor
- Three phase electricity to the premises
- Roof tof Garden for entertainments
- Class 1 timber main entrance door with double lock
- Security guard room and toilet at ground floor
- Fully secured parapet wall
- Provision for Telephone and T.V connections
- Cable TV connection
- Hot water supply for one bathroom
- Stand by generator
- Intercom for each home
- Fire safty equipment
- Additional facilites
  Can be provided on request

**Provision for ADSL in each Home**



LOCATION:

# SPAN TOWER

44/4 Dharmarama Road, Colombo - 06, Sri Lanka.
Mobile: 0777 313988, 0777 386231, 0777 895760
Fax: 011 2365770 E.mail: spaneng@hotmail.com

For Booking & Further Details:

## SPAN ENGINEERING (PVT) LTD.

45/15A, Fredrica Road, Colombo - 06, Sri Lanka.
Tel: 011 2365924 Mobile: 0777 313988, 0777 386231, 0777 895760

LONDON : 208 8685980 USA : 530 5212458
CANADA : 905 6862319 NORWAY : 004772261813







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org